
சோலை மலரே
காலைக் கதிரே
ரமணிசந்திரன்

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : சோலை மலரே... காலைக் கதிரே... |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : நவம்பர், 2009 |
| இரண்டாம் பதிப்பு | : ஏப்ரல், 2012 |
| மூன்றாம் பதிப்பு | : டிசம்பர், 2012 |
| நான்காம் பதிப்பு | : செப்டம்பர், 2014 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 200 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |
| கணினி அச்சு | : வேலன் லேசர் ✆:94441-01753 |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |

**விலை: ரூ.80.00**




# சோலை மலரே...
# காலைக் கதிரே...

# சோலை மலரே...
# காலைக் கதிரே...

## 1



சென்னை வரை செல்ல வேண்டியிருக்கிறது! அங்கேயும், உடனே வேலை நடப்பது சாத்தியமல்ல! மடமடவென்று நடந்தாலே, நாலு நாள் வேலை அங்கே இருக்கிறது. அதையும், ஆமை வேகத்தில் இழுத்து, அங்கங்கே குண்டு, குழிகளைச் சமாளித்து, காரியத்தை முடித்து வருவதற்குக் குறைந்தது, பத்து நாட்களேனும் ஆகும்! இதில்,

குறைந்த பட்சமாக ஒரு சனி, ஞாயிறேனும் வரும்! அத்தோடு சேர்த்தால், இன்னும் இரண்டு மூன்று

நாட்களேனும் ஆகும்! அதாவது, குறைந்த பட்சமாகப் பதினைந்து நாட்கள், அதுவரை எந்த வம்பிலும் மாட்டிக் கொள்ளாமல், அங்கேயே ஆணியடித்த மாதிரி, ஒரேடியாக உட்கார்ந்து வேலையை முடித்துக் கொண்டு வர வேண்டும்! அத்தனை நாள்... அப்படி யாரை அனுப் புவது...'

குறுக்கும் நெடுக்குமாக நடந்தபடி உரக்க யோசித்த தாயாரை ஆவலாகப் பார்த்தபடி நின்ற ஆனந்தனின் முகம் மெல்ல வாடலாயிற்று!

இது, அவனது வேலை! அவனது பொறுப்பில் விடப்பட்டிருந்த வேலையின் முத்தாய்ப்பான கடைசிப் பகுதி வேலை! இதுவரை அவன் அயர்வின்றி, உழைத்துப் பலன் கண்டிருப்பதை உணர்ந்து, அதற்கான அங்கீகார மாக, இந்தக் கடைசி வேலையையும் தன்னிடம் கொடுப்ப தற்காகத்தான் அன்னை வரச் சொன்னாள் என்று எண்ணி ஆவலாக வந்தான். மகிழ்ச்சியோடுதான்!

ஒரு வழியாக, அம்மா அவனையும் நம்பி, ஒரு மக னாக... முக்கியமாகக் கடைசிவரை ஒரு வேலையை முடித்துவிட்டு வருமளவு திறனுள்ள மனிதனாக நடத்தப் போகிறாள் என்கிற மகிழ்ச்சி!

ஆனால், அந்த வேலைத் தொடர்பாக, வரலட்சுமிக்கு அவன் நினைவு வரவே இல்லை! பின்னே எதற்காகக் கூப்பிட்டு அனுப்ப வேண்டும்?

இத்தனைக்கும், இந்தப் புது ரகக் காபிச் செடியைப் பயிரிட்டு, வளர்த்து, 'பெரி' விளைந்ததும், பதப்படுத்திக் கொள்முதலுக்கு அனுப்பியது வரை, அவனே செய்தது தான்.



தொடக்கம், அம்மாதான்.

ஆனால், 'இதை செய்து பார்' என்றதோடு, பெற்ற வளின் பங்கு முடிந்தது. அதற்கு மேல், அவள் எட்டியும் பார்க்கவில்லை! தம்பியின் பொறுப்பில் உள்ள பண்ணைக்கு அன்னையின் கார் அவ்வப்போது செல் வதைப் பார்க்கையில் ஆனந்தனுக்கு வருத்தமாக இருக் கும்.

ஆனால் அதுவே ஜெயித்துக் காட்ட வேண்டும் என்ற வேகத்தையும் தந்தது! பயிரோடு பயிராகக் கிடந்து பூச்சிப் பிடிக்காமல், செடி வாடாமல் வளர்த்து... எல்லாம் அவன் தான்.

காபிக் கொட்டையின் தரத்தைப் பார்த்ததும், உடனே அரசு அதிகாரி கொள்முதலும் செய்துவிட்டார்.

இப்போது அதற்குரிய பணத்தை, அரசிடம் இருந்து வாங்கி வர வேண்டும்! அவ்வளவே!

அதற்கு அவனை நம்பி அனுப்புவதற்கு, அம்மாவுக்கு மனசில்லை!

இத்தனைக்கும், பணமாகக் கூடத் தரமாட்டார்கள். காசோலைதான்! ஒரு சில நாட்கள் காத்திருந்து வாங்கி வரவேண்டும். இதற்குக் கூடவா, நம்பக்கூடாது?

இதே கேள்வி, தம்பியின் மனதிலும் தோன்றியது என்பதற்கு அடையாளமாக, "உடையவர் பார்க்கட்டுமே, அம்மா!" என்று சற்று மெதுவாகவே சொன்னான், சதா னந்தன்.

காதே கேளாத மாதிரி, "போகிற வேலையைப் பொறுமை யாக மட்டுமில்லாமல், திறமையாகவும் முடித்துக் கொண்டு வருகிற ஆளாக இருக்க வேண்டும்! ம்ம்ம்... நம்

செல்லையனிடம் கேட்கலாமா என்று பார்க்கிறேன்! அவனும், சென்னையில் ஏதோ வேலை இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருந்தான். ஒன்றோ... இரண்டோ சதவீதம் கொடுப்பதாகக் கூறிக் கொஞ்சம் நயமாகப் பேசினால், கட்டாயம் செய்வான். ஆனந்தா, நீ என்ன பண்ணுகிறாய் என்றால், இது விஷயமாகப் பேசக்கொள்ள சகல உரிமைகளும் செல்லையனுக்குக் கொடுத்து, அரசு காபி போர்டில் வாங்கல் பொறுப்பில் உள்ளவர்களுக்கு ஒரு கடிதம் எழுது'' என்றாள் மூத்த மகனிடம்.

''வந்து... அம்மா, நானே...'' என்று தொடங்கிய ஆனந்தன், தாயின் முகத்தைப் பார்த்ததும், உடனே பணிந்து ''இதோம்மா...'' என்று பணிந்தான்.

மறுத்து அவன் மேலே ஒரு வார்த்தை சொல்லியிருந் தால், அவனைக் கூறு கிழித்துப் போட, அன்னை தயாராக இருந்தாள்! சொல்லப் போனால், அப்படிக் கூறு கிழிப்ப தற்காகக் காத்திருந்தாள், எனலாம்!

உரக்க யோசித்ததே, வேண்டும் என்றுதான் இப்போது புரிந்தது!

அந்த வாய்ப்பைக் கொடுத்து, அது வேறு வாங்கிக் கட்டிக் கொள்வானேன் என்றுதான் அவன் பணிந்து போனான்.

துணிந்து, மறுத்தே பேசினாலும், அதனால் எந்தப் பயனும் விளையப் போவதுமில்லை! அன்னையின் முடிவு மாறப் போவதுமில்லை! அப்புறம் எதற்கு வீண் முயற்சி?

முட்டிக் கொண்டு குனிந்து போவதை விடச் சும்மாவே குனிந்து சென்று விடலாமே?



ஆனால் அண்ணனுக்கான அந்தத் தடைகள் எதுவும் தம்பிக்கு இல்லை!

எப்போதுமே கடைசிப் பிள்ளை என்கிற சலுகையோடு, எந்தத் தப்பிலும், அவன் அன்னையிடம் மாட்டிக் கொள்ள நேர்ந்ததும் இல்லை! எனவே, வரலட்சுமியிடம் தைரிய மாகப் பேசுகிறவனும் அவன் மட்டும்தான்.

தாயார், அண்ணனை ஏதாவது மட்டம் தட்டும்போது, லேசாகத் தாங்கிப் பேசுவான்.

''அம்மா ஏதாவது சொன்னால், வாயைத் திறந்து பதில் பேசுண்ணா'' என்று அண்ணனிடமும் சொல்லுவான்.

ஆனால், பேசிப் பயன் இராது என்று நிச்சயமாகத் தெரியும்போது, எதற்காகப் பேசுவது என்று ஆனந்தன் பேசாது இருப்பதைப் பார்த்து, அவனும் சலித்துப் போனான்.

ஆனந்தன் தப்பு செய்தான்தான். ஒரே ஒரு தரம்!

அவன் பொறுப்பில் இருந்த பண்ணையில், குறுகிய காலப் பயிர் ஒன்றைப் பயிர் செய்தான்.

நன்கு செழித்து வளரும் என்று யாரோ சொன்னார்கள் என்று, சற்று வீரியம் அதிகமான உரத்தைக் குருத்துவிட்டு வளர்ந்து கொண்டிருந்த இளம் செடிகளுக்குப் போட்டு விட்டு, நண்பன் வீட்டுத் திருமணத்துக்குப் போய்விட்டான்.

போனவன், அங்கே திருமணத்தில் பிரச்சினை ஏற் பட்டுவிட, அதைச் சமாதானம் செய்து, திருமணத்தையும் நடத்த, அங்கே எல்லோருக்கும், ஆனந்தன் நெஞ்சார்ந்த நண்பனாகிப் போனான்! குடும்பத்தினர் எல்லோரும்

வேண்ட, நண்பனோடு சேர்ந்து நண்பனுடைய தங்கையை மாப்பிள்ளை வீட்டில் கொண்டு போய் விடப் போய்...

சுருங்கச் சொன்னால், அந்த இளம் செடிகள் உரத்தின் வீரியத்தால், குருத்து வரைக் கருகி மடியும் நிலையில்தான் திரும்பி வந்தான். எவ்வளவோ தண்ணீரை ஊற்றிப் பார்த்தும், நாலைந்து செடிகள் கூடப் பிழைக்கவில்லை!

அது, இடைக்காலப் பயிர் என்பதால், வேறு எதையும் வளர்த்து மகசூல் எடுக்கவும், அவகாசம் இருக்கவில்லை!

வைத்த செடி வாடி அழிந்த வகையில் ஓர் இழப்பு என்றால், அந்த மூன்று மாதங்களும் நிலத்தை விருதாவாகச் சும்மாப் போட்டு வைத்திருந்ததால் வருமானக் குறைவு என்று, அடுத்தொரு நஷ்டத்தையும் அவர்கள் ஏற்றாக வேண்டியிருந்தது! மொத்தம் இழந்தது பணக் கணக்கில் இரண்டு லட்சம்தான் இருக்கும்.

ஆனால், கூடவே அவனிடம் தாயார் வைத்திருந்த நம்பிக்கை அழிந்ததும், அவள் பார்வையில் பொறுப்பற்றவன் என்று முத்திரை குத்தப்பட்டதும், ஆனந்தனுக்கு விலை மதிக்க முடியாத பேரிழப்பாகப் பட்டது!

அது நடந்து ஐந்து ஆண்டுகள் கடந்து விட்ட பிறகும், காலம் மறக்க வைக்கும் என்பதைப் பொய்யாக்கி, எப்போதும் மூத்த மகனை ஓர் உதவாக்கரையாகவே, வரலட்சுமி கருதி வந்தாள்.

ஆனந்தன் அதுவரை, ஒரு பணக்காரப் பையனாக வெளியூரில் படித்துக் கொண்டிருந்தான். விடுமுறை நாட்களில் வருகிற சமயம் கூட, கோவை மில் ஓனர் மகன், திருப்பூர் பனியன் ஏற்றுமதி கிங் பிள்ளைகளோடு சேர்ந்து



சுற்றப் போனதால், இந்த எஸ்டேட் விவசாயம் எதுவும் அவனுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்பது எதையுமே வரலட்சுமி எண்ணிப் பார்ப்பதாகக் கூட இல்லை!

அவளைப் பொறுத்த வரையில், பண்ணையைப் பொறுப்பாகப் பார்த்துக் கொண்டிருந்த நிர்வாகி, வெளி நாட்டில் இருக்கும் மகன் அழைத்தான் என்று அவனோடு இருக்கப் போய் விட்டார்.

தலைக்கு மேல் வளர்ந்த பையன்கள் இருக்கிறார்கள்... நாளைக்குப் பொறுப்பேற்று நடத்த வேண்டியவர்கள்... இன்றே பார்க்கட்டும். அவ்வளவுதான்.

என்ன, கண்டறியாத இடமா?

சிறு வயதில் இருந்து, ஓடி விளையாடிப் பழகிய பூமி தானே?

பயிர் செய்வதையும் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறார்கள்?

அப்புறமென்ன என்பது அவளுக்கு!

ஆனந்தனது மேல் படிப்பும், சதானந்தனின் டிகிரிப் படிப்பும் முடிந்து, விடுமுறையில் பிள்ளைகள் வீடு வந்தது வசதியாகப் போய்விட, உடனே இருவர் கையிலும், ஆளுக்கு ஒரு பொறுப்பைக் கொடுத்தாள்.

சின்னவன், தண்ணீருக்குள் மீன் குஞ்சாய், இயல்பாகப் பண்ணை வேலையில் பொருந்திவிட, பெரியவனின் தோல்வி, இரு மடங்காகப் பெருத்துத் தெரிந்தது, பெற்றவளுக்கு!

அதுவும், இங்கே பயிரைச் சாக விட்டுவிட்டு, அவன் நண்பர்களோடு உல்லாசமாகச் சுற்றப் போனான் என்பது,

எரிகிற தீக்கு எண்ணெயாயிற்று! யாரிடமும் ஒரு மண்ணும் சொல்லாமல், கொள்ளாமல், செடி அழிந்து விடுமே என்கிற சிறு உறுத்தல் கூட இல்லாது நண்பர் களோடு சுற்றப் போனது, மன்னிக்க முடியாத பெரும் தவறாக, அவளுக்குப் பட்டது!

கண்ணுக்கெட்டிய தூரம் வரை செடிகள் வாடிக் கருகிக் கிடந்த காட்சி கண்ணிலும், நஷ்டக் கணக்கு கருத்திலும் பதிந்து போய்விட, மகன் சொல்ல வந்த சமாதானங்களை, அவள் காது கொடுத்துக் கேட்பதாகவே இல்லை!

சொல்வதற்குப் பெரிதாக எதுவும் இல்லை என்றாலும், சிறு சமாதானம் ஒன்று - அந்த உரம், அவனாக முந்திக் கொண்டு முட்டாள் தனமாகப் போட்டது இல்லை. அந்தப் பகுதியில் இன்னொரு பண்ணை உரிமையாளனாகிய செல்லையன் எப்போதுமே, வந்து வந்து பேசுவான்.

பண்ணை நடத்துவது பற்றிய சந்தேகங்களை, அவனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளும்படி, வரலட்சு மியே மக்களிடம் கூறியிருக்கிறாள்.

நண்பன் வீட்டுக்குத் திருமணத்துக்குச் செல்லப் போவதாக அவனிடம் பேசிக் கொண்டிருந்தபோதுதான், இந்தப் புதிய வீரிய உரம் பற்றிய பேச்சும் வந்தது!

தன் பண்ணையில் இந்த உரம் பயன்படுத்தியதில், எப்படி விளைச்சல் இரு மடங்காயிற்று. என்ன லாபம் வந்தது என்று செல்லையன் விளக்கிய உடனேயே, தானும் அந்த உரம் போடுவது என்று ஆனந்தன் முடிவு செய்து விட்டான்.

அதன் மூலம் விளைச்சல் மிகுதியாகப் பெருக்கித் தாயிடம் 'சபாஷ்' பெறுவதற்காகவும்!



நினைப்படியே உரத்தை வாங்கிப் போடவும் செய் தான்.

நடந்த தப்பு என்னவென்றால், இந்த மாதிரி உரங் களுக்கு நிறையத் தண்ணீர் விட வேண்டும் என்பதை, அவன் அறியாதிருந்தது!

எப்படியோ, செல்லையனின் பேச்சில் அந்த விவரம் வரவில்லை. வருமுன் பேச்சின் போக்கு மாறிவிட் டிருந்தது! கோவை மில் உரிமையாளனாகிய நண்பன் வீட்டுத் திருமணம் எப்படி நடக்கும், அவர்கள் வீட்டு சடங்குகள் என்னென்ன என்று, அது போலப் பேச்சு திசை மாறிவிட்டது!

புதிதாக வந்த உரத்தைக் காட்டி, அழகாகக் குருத்து விட்ட வளர்ந்து கொண்டிருந்த, செடிகளுக்குப் போடு வதைப் பார்த்து விட்டு, ஆனந்தன் கோவைக்கு, நண்பன் தங்கை திருமணத்துக்குச் சென்று விட்டான்.

அவனது பண்ணையில் ஏதாவது பார்க்க வேண்டுமா என்று கேட்ட தம்பியிடம் கூட, சந்தோஷமாக, எல்லா வேலையையும் முடித்துவிட்டுத்தான் போவதாகச் சொல்லிவிட்டான்.

உள்ளூர, இந்தப் புது முயற்சி, முழுக்கத் தன் முயற்சி யாக, பெற்றவளுக்கு ஓர் ஆனந்த அதிர்ச்சியாக இருக்க வேண்டும் என்று அவனுக்கு ஆசை!

சதா போய்ப் பார்த்துவிட்டு, அம்மாவிடம் சொல்லி விட்டால்? ஆனந்த அதிர்ச்சி எப்படி வரும்?

எனவேதான், தாயிடம் கூட, அவன் எதுவும் சொல் லாமல் விட்டது! இதை நினைத்து, எத்தனையெத்தனை முறை அவன் மனம் வருந்தி மறுகியிருக்கிறான்!

சதானந்தன் முதலிலேயே பார்த்திருந்தால், செடிகள் லேசாக வாடும்போதே, அதற்கான காரணம் தேடி, நிவாரண வேலையும் செய்திருப்பானோ!

ஆனால், அன்றைக்கு, அது அவசியமாகவே தோன்ற வில்லை!

அத்தோடு, திருமணம் முடிந்த மறுநாளே கிளம்பி வந்து விடுவதாகவும் ஆனந்தன் திட்டமிட்டிருந்தான். ஆனால், அதுவும் தட்டிப் போயிற்று!

அங்கே கல்யாண வீட்டின் முன்னாள் காதலன் என்று சொல்லிக் கொண்டு ஒருவன் வந்து, கலாட்டா செய்ய எல்லோரும் திணறித் திண்டாடிப் போயினர்.

மாப்பிள்ளைப் பையனுக்குப் பெண்ணிடம் நம்பிக் கையே என்றாலும் அவன் வகை உறவினர் அத்தனை பேரையும் எதிர்க்க முடியாமல், அவனும் திணறினான்.

அந்த நேரத்தில், ஆனந்தன் சாமர்த்தியமாக, அந்த முன் கதை பேசி வந்தவனைத் தனியே அழைத்துப் பேரம் பேசி, அவனுக்கு மறைத்து, பேரத்தைச் செல்லி லும் பதிவு பண்ணிக் காவலுக்கு வந்த போலீசிடமே கொடுத்துவிட, அதைப் பார்த்ததும் எல்லாம் சுலபமாக முடிந்தது!

ஆனால் கல்யாணப் பெண், பிள்ளை மற்ற உறவினர் எல்லோருமே அவனை இங்குள்ள வரவேற்பு, பையன் வீட்டு வரவேற்பு எல்லாவற்றுக்கும் இருந்து போகுமாறு வற்புறுத்தினர்.

எல்லோரின் புகழாரத்தில், ஆனந்தனுக்குமே, சற்றுத் தலை சுற்றிப் போயிற்று எனலாம்.



மூன்று நாட்கள் அங்கே சந்தோஷமாகப் பொழுதைக் கழித்துவிட்டு வந்தால், இங்கே தாயார் முகம் கொடுத்துக் கூடப் பேச மறுத்தாள்.

காய்ந்து கருவிக் கிடந்த செடிகளைப் பார்த்து, அவனே ரத்தக் கண்ணீர் வடிக்காத குறைதான்! ஆனால், அவனது வலியை, வரலட்சுமி கண்டு கொள்வதாகவே இல்லை!

அன்றிலிருந்து மூத்த மகனை, அவள் எதற்கும் நம்பு வது இல்லை! எப்படித்தான் உருப்படப் போகிறானோ, வாய்ப்பே கிடையாது என்று எதிர்மறையாகவே எண்ணு வாள்!

அவன் என்ன பயிர் பண்ணினாலும், அனாவசியமாகப் பத்துத் தரம் அடுத்தவர் மூலமாக மேற்பார்வை நடக்கும்! ஆனால், முன்னர் போட்ட வீரிய உரம் இடைப்பட்ட சில மாதங்களில் மக்கிவிட, அடுத்து வைத்த பயிர் அமோக விளைச்சலைத் தந்தபோதும், தாயார் அதை, மகனது உழைப்பின் பலனாக ஒத்துக் கொண்டது இல்லை!

ஏதோ காக்கை உட்கார பனம்பழம் விழுந்ததாகத்தான் சொல்லுவாள்! அப்படித்தான் நினைத்தாள்!

ஒரு முக்கியமான வேலை என்றால், சின்ன மகனையே அனுப்புவாள். தனிப்பொறுப்பாகப் பெரியவனிடம் எந்தப் பொறுப்பையும் ஒப்படைப்பது இல்லை!

அவனுக்குக் கெட்டிக்காரத்தனம் போதாது என்று வெளிப்படையாகவே விமர்சனம் நடக்கும்! எடுத்துக் காட்டுதான், முதலிலேயே கிடைத்து விட்டதே!

முதலில் இரண்டு வருஷங்கள், தாயின் தப்பான அபிப்ராயத்தை மாற்றியே தீருவது என்று, ஆனந்தன் பெரு முயற்சி செய்து பார்த்தான்.

ஆனால், என்ன முயன்றாலும் உரிய பலனில்லை என்று ஆகவும், அவனுமே, பொறுத்துப் போகப் பழகிக் கொண்டான்.

அத்தோடு, அதிகப்படியாக நண்பன் வீட்டில் சிரிப்பும் விளையாட்டுமாகக் கழித்த அந்த மூன்று தினங்களைப் பற்றிய குற்ற உணர்வு. அவனுக்கே இருந்தது. முதலிலே திட்டமிட்டது போல, ஒரே நாளில் திரும்பி வந்திருந் தால், செடிகள் வாடுவது பார்த்து, என்ன என்று ஆராய்ந்து தண்ணீர் ஊற்றிக் காப்பாற்றி இருக்கலாம்தானே? பாதிக்குப் பாதியே.

எனவே, பெற்றவளிடம் திருப்பிப் பேச, அவனால் முடியாது போய்விட, தப்பை அவனே ஒத்துக் கொண்டது போலவும் ஆகிவிட்டது!

இப்போதும் அதே கதைதான்.

ஆனால் இந்த முறை சதானந்தன், தாயிடம் சற்றுக் குரல் உயர்த்திப் பேசினான்.

''என்னம்மா, மிகவும் எளிதான வேலை! அதுவும் அவனுடைய வேலையும்கூட! இதற்கு அண்ணனை அனுப்பாமல் தவிர்ப்பதற்குக் காரணமே கிடையாது! அவனை வேண்டும் என்றே அவமானப்படுத்துவது தவிர! இப்படி ஒரேடியாக வெறுத்து, ஒதுக்கி, ஒதுக்கி, அண்ணன் ஒன்றுமில்லாமல் போய்விடப் போகிறான். அம்மாவாக இருந்துகொண்டு, நீங்கள் இப்படிச் செய்வது நன்றாகவே இல்லை!'' என்று தாயை அவளிடமே குற்றம் சாட்டினான்!

''உனக்கு என்னடா தெரியும்? அவனை எப்படி நம்பி அனுப்புவது? ஒரு தரம் பட்டது போதாதா? அங்கேயும்,



ஏதாவது கிறுக்குத்தனம் செய்துவிட்டு வருவான்!'' என்று வாய்க்குள்ளேயே முனகி, எரிச்சல் காட்டினாள் வரலட்சுமி.

''அதெல்லாம் ஒன்றும் பண்ண மாட்டான்! ஏதோ அனுபவம் இல்லாமல் செய்த ஒரு தப்புக்கு, வாழ்நாள் முழுவதும் தண்டிப்பீர்களா? பாவம், அண்ணனுக்கு வீடே வெறுத்துவிடும்!'' என்றான் சின்ன மகன் விடாமல்.

அப்போதும் தாயார் பேசாதிருக்கவே, ''ஐயோ, என் னம்மா நீங்கள்? அந்தச் செல்லையன், நமக்கு யார்? ஒரு போட்டிப் பண்ணைக்காரன்தானே? அவனைக் கூப் பிட்டுக் கெஞ்சி கூத்தாடி, கையில் பணத்தை வேறு கொடுத்து சென்னை வரை, அனுப்பலாமா?'' என்று கேட்டான்.

''அப்படிச் சொல்லாதேடா, அவனுக்கு என்னிடம் விசுவாசம் உண்டு. அதற்காகவே, அவ்வப்போது பெரிய வனைப் போய்ப் பார்த்து, ஆலோசனைகளும் சொல் கிறான்.''

''எப்படியும் போட்டிப் பண்ணைக்காரன்தானே? அவனைப்போய் அண்ணனுக்கு மேல் என்பது போலக் காட்டினால், எப்படிம்மா? அண்ணன் நம் வீட்டுப் பிள்ளை! அம்மா, நீங்கள் செய்வது, ரொம்பத் தப்பும்மா! அண்ணனுக்கு தன்னம்பிக்கையே இல்லாமல் போய் விடப் போகிறது!'' என்று தன் கருத்தைச் சதானந்தன் மேலும் வலியுறுத்திப் பேசினான்.

சிறு அமைதியின் பின், ''நீ சொன்ன மாதிரியில், நான் நினைத்துப் பார்க்கவில்லை. சதுப்பா. ஒரு தரம் பட்டதில், இன்னமும் அவனை நம்பித் தனியே அனுப்பவும் பய மாகத்தான் இருக்கிறது! ஆனால் இப்போது நீ சொல்வது

போல, வேறு மாதிரிப் பாதிப்பும் ஏற்பட்டு, அது வேறு தலை வேதனையாகி விடக் கூடாதே! சரி... அதற்காகவே, இந்த முறை, ஆனந்தனே சென்னைக்குப் போய்வரட் டும்!'' என்று விட்டுக் கொடுத்தாள் தாய்.

அதன் பிறகும், மூத்த மகனை எங்கே தங்கச் சொல்வது, என்ன, ஏது என்று அவள் அலைபாயத்தான் செய்தாள்.

நல்லவேளையாக ஆனந்தனுடைய நண்பன் மூர்த்தி, பெரிய நிறுவனம் ஒன்றின் சென்னைக் கிளையில் உதவி நிர்வாகியாகப் பணிபுரிந்து கொண்டிருந்தான். அவ னுடைய மனைவி தாய் வீடு சென்றிருப்பதால், தன் வீட்டிலேயே தங்கிக் கொள்ளலாம் என்று அழைப்பதாக மூத்த மகன் கூறவும், அவளுக்கு நிம்மதியாயிற்று!

அப்போதும் தலை தூக்கிய சிறு கவலையை, மகனின் உணவுக்காக, அவளுடைய தாயாரும் அங்கே வந்து தங்கியிருக்கும் தகவல் துடைத்தெறிந்தது!

பண்ணையில் விளைந்ததும், விளைந்து பதப்படுத் தப்பட்டதுமான பொருட்களை நிறையக் கொண்டு செல்லுமாறு எடுத்து வைத்தாள்.

''இப்போது எல்லாமே அங்கேயும் கிடைக்கும் என் றாலும், இந்த ருசி இராது'' என்று அவள் எடுத்து வைத் ததைப் பார்த்து அண்ணன், தம்பி இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

கொடுப்பதில், அன்னை உண்மையிலேயே வரலட்சு மியே தான்! அதாவது கொடுக்க நினைத்து விட்டால்!

இந்த வேலையை நல்லபடியாக முடித்து வந்து, அன்னை யின் பாராட்டைப் பெற்று இந்தச் சூழ்நிலையை நிரந்தர மாக்கிக் கொள்ள வேண்டும் என்று எண்ணினான் ஆனந்தன்.



சென்னை வேலையில் எந்த விதச் சிக்கலும் கிடை யாது என்பதால், தம்பி சதானந்தனுக்கு அதில் முழு நம்பிக்கையே இருந்தது!

தாயாரும் அதே நம்பிக்கையில்தான் மூத்த மகனை வழியனுப்பி வைத்தாள்!

ஆனால், மனிதர்கள் விரும்புகிற படியெல்லாம் வாழ்க்கை நடக்குமா, என்ன?

அப்புறம், கடவுளை மறந்து விட மாட்டோம்?

# 2



நன்கு கழுவிக் காய வைத்த செயற்கைப் பூக்களை, இரண்டு பூஜாடிகளில் அழகாக அடுக்கிவிட்டுச் சற்றுத் தள்ளி நின்று, எப்படி இருக்கிறது என்று சௌமினி ஆராய்ந்தாள்.

அருகில் வந்து, ஒயின் வண்ணச் சூரியகாந்தியை எடுத்து, மூன்று மஞ்சள் நிறப் பூக்களின் நடுவே வைத் தாள் பல வண்ண டேலியோக்களை, சிதறினாற்போல அடுக்கி, வெண்ணிறப் பூச்சரங்களை இடையிடையே தொங்கவிட்டாள்.

உணவு மேஜையில் சமைத்த பதார்த்தங்களைக் கொண்டு வந்து வைத்த தமக்கையை, ''அக்கா, இது நன்றாக இருக்கிறதா என்று பார்த்துவிட்டுப் போ!'' என்று அழைத்தாள்.

''எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது! முக்கிய வேலையாக இருக்கிற அக்காவை, இடையிலே கூப்பிட்டு இடைஞ்சல் பண்ணாதே!... நீ போக்கா! போய் உன் வேலையை முழுதாகச் செய்து முடி!'' என்றான் குணா பரிவான குரலில்.

குணசீலன் என்பது முழுப் பெயர். சௌமினியுடைய இரட்டை!

''முக்கிய வேலையாக்கா? அடடா, சாரிக்...'' என்ற வாறே திரும்பிப் பார்த்த சௌமினி, தம்பியைக் கேலியாக நோக்கி ''தெரியுமே! உனக்கு முக்கியமான ஒன்று என்றால், அது சாப்பாடாகத்தானே இருக்க முடியும்? அதை யோசிக்காமல், சாரி வேறு சொன்னேனே! சரி, போகட்டும். அந்த 'சாரி'யை இனாமாக வைத்துக் கொள்! அக்கா நீ வந்து அபிப்பிராயம் சொல்லிவிட்டுப் போயேன்!'' என்று மறுபடியும் அழைத்தாள் தங்கை.

''பெரியவளுக்காகச் சின்னவர்கள்தான் காத்திருக்க வேண்டும்! அக்கா வேலை முடிகிற வரைக்கும் பொறுத் திரேன்!'' என்று மரியாதை முறை எடுத்துச் சொன்னான் சகோதரன்.

''அப்படியா தம்பி? நீ சொன்னால், சரியாகவே இருக் கும்! என் வேலை முடிகிற வரைக்கும், உன் சாப்பாடு பொறுத்திருக்க வேண்டியதுதான். ஏன் என்றால், உன்னை விடப் பத்து நிமிஷங்கள் முன்னதாகப் பிறந்து, உனக்கே அக்காவாகிவிட்ட தேவதை, சாட்சாத் நானே, தானாக்கும்! அதனால், உனக்கு அக்காவாகிய என்னதைப் பார்த்துவிட்டு, என் தம்பி கூறிய வேலையை, என் அக்காவாகப் பட்டவள் கவனிக்கட்டும்!'' என்று கிளுக்கிச் சிரித்தாள் சௌமினி.



அசடு வழிந்தது, குணசீலனுக்கு!

ஆனாலும் சமாளித்து, ''இரட்டைப் பிறவிகளில் இரண்டாவது பிறப்பதைத்தான், மூத்ததாகச் சொல்வார் கள். அதனால், நான் கேட்பதைத்தான், அக்கா முதலில் செய்ய வேண்டும்!'' என்றான் கூடப் பிறந்தவன்.

''அதெல்லாம் கிடையாது! சும்மா கதை! அப்படித் தானேக்கா? நீ சொல்லு'' என்று தீர்ப்பு சொல்ல சுரபியைக் கூப்பிட்டாள் சின்னவள்.

''இதோ!'' என்றது, சுரபியின் மென்குரல்! ''சாப்பாடு தயார்! குணா நீ வேண்டுமானால், சாப்பிடும்மா! நாங்கள்... மின்னி, நீ எதைப் பார்க்கச் சொன்னாய்?... இந்த பூஜாடி அலங்காரத்தைதானே? பிரமாதமாக இருக்கிற தும்மா! உன் மாதிரி, வண்ணக் கலவை யாருக்கு வரும்? இந்த நாலைந்து தினுசுப் பூக்களை வைத்துக் கொண்டு என்னென்ன மாயம் செய்து விடுகிறாய்!'' என்று தமக்கை பாராட்ட, தங்கைக்கு உச்சி குளிர்ந்து போயிற்று!

''ஆனால், இதுவே நிஜப் பூவாக இருந்தால், இன்னும் எவ்வளவோ நன்றாக இருக்கும்! முன்னெல்லாம் அப்பாவோடு ஊருக்குச் செல்லும்போது, வேலி ஓரத்துப் பூக்களைப் பறித்து வைப்போமே, நினைவிருக்கிற தாக்கா? செக்கச் செவேல் என்று, முள்ளு முருங்கைப் பூ! அதைக் கொத்தாகப் பறித்து...'' என்று அவள் சொல்லி முடிக்குமுன் ''போதும். போதும் அதற்கு மேல் சொல் லாதே! அதைப் பறிப்பதற்காக மரத்தின் மேல் ஏறி, முள் கீறி, ரத்தம் வடிய நின்றாயே! அது நினைவு வருகிறது!'' என்று தங்கையைத் தோளோடு அணைத்து உடல் சிலிர்த்தாள் சுரபி.

''எனக்கு அது நினைவில்லை. ஆனால், பதநீர் வாங்கி வைப்பதற்குச் சொம்பு தேடினால், ஒன்று விடாமல் நீ பூ அடுக்கி வைத்திருப்பதைப் பார்த்துப் பாட்டி தலையில் அடித்துக் கொண்டதுதான் நினைவு வருகிறது! உன்னையும் அம்மாவையும்கூட, ஏதோ திட்டினார்களில்லை?'' என்று புருவம் சுருக்கிக் குணசீலன் பெரிதாக யோசிக்க ''பதனீர்! வயிற்றுக்குள் போடுகிற விஷயம் மட்டும், இவனுக்கு என்னமாய் நினைவு வருகிறது, பாரேன்!'' என்று பதிலுக்கு சௌமினியும் அதிகப்படியாகவே அதிசயித்தாள்.

''ஆமாமாம், இந்தம்மா சாப்பிடுவதே கிடையாதே! காற்றை உண்டு வாழ்கிற பிராணி! மாம்பழம் போட்டுப் பிசைந்த பதநீரை முக்கி, முக்கி, மூக்கு முட்டக் குடித்துவிட்டு, மூச்சு விட முடியாமல் திணறி, முற்றத்துத் திண்ணையில் உருண்டது யாராம்?'' என்று குணா கேட்க, மூவருக்கும் சிரிப்பு வந்தது!

பழைய நினைவில் ''அக்கா அந்த மாம்பழப் பதநீர் ரொம்ப ருசியில்லை? இன்னும் கூட, அந்தச் சுவை எனக்கு நினைவு இருக்கிறது! ஆனால் நாம் ஊருக்குப் போய் பத்து ஆண்டுகள்... ஆமாம் அப்பா இருக்கும் வரைதானே, ஊர்ப்பயணம், அப்புறம் போனதே இல்லை! அம்மாவிடம் ஒரு தடவை கேட்டபோது, 'அழையாத இடத்துக்குப் போகக் கூடாது' என்றார்கள். முகத்தை ஒரு மாதிரி வைத்துக் கொண்டு சொன்னார்களா, மேலே எதுவும் கேட்கவில்லை! ஆனால், அக்கா, பாட்டி ஏன் நம்மை, ஊருக்குக் கூப்பிடவே இல்லை? நாமும் பாட்டிக்குப் பேரன் பேத்திகள்தானே? எனக்குப் பாட்டியைப் பிடிக்கும், தெரியுமா?'' என்றாள் சௌமினி, குரலில் ஏக்கத்துடன்.



''மீந்தி இருக்கும் ஒரு பிள்ளையைப் பார்த்தபடி, அந்த வீட்டில் பாட்டி ஓரளவேனும் நிம்மதியாக இருக்கிறார்கள் என்றால், அது பற்றிக் குறைபடக் கூடாதும்மா!'' என்று பரிமளம், மூத்த மகளிடம் சொல்லியிருக்கிறாள்.

அதை, அப்படியே தங்கையிடம் தெரிவித்துவிட்டு, ''பாட்டியே, பெரியப்பா ஆதரவில் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் தன்னிச்சையாக நம்மைக் கூப்பிட முடியுமா, மின்னி? இன்னும், பெரியப்பா நம்மை ஏன் கூப்பிடவில்லை என்று கேட்டு விடாதே! அவர்களுக்கு எத்தனையோ காரணங்கள் இருக்கும். அம்மாவையேக் கூப்பிடவில்லை! நாம் எம்மட்டும்? சொல்லு!'' என்றாள் பெரியவள்.

''ஆனால், ஏன்க்கா அப்படி? நாம் ஒன்றும், அவர்களிடம் பணம் சொத்து என்று கேட்கப் போவது இல்லை எனும்போது, என்னமோ தப்பாகத் தெரியவில்லை?''

''நாம் எதையும் கேட்க மாட்டோம் என்று அவர்களுக்கு எப்படித் தெரியுமாம்?'' என்று தலை சரித்து மூத்தவள் கேட்ட தினுசில் ''ஓ!'' என்று வாயைக் குவித்தனர் சின்னவர்கள்!

''ஆனாலும்...''

தம்பியையும், தங்கையையும் ஒரு தரம் ஆழப் பார்த்த சுரபிக்கு, இவர்கள் வளர்ந்து விட்டார்கள், உலகம் என்னவென்று இவர்களுக்கும் தெரிய வேண்டியதுதான் என்று தோன்றியது.

நாலு வயது பெரியவள் என்பதால், அவளுக்குத் தெரியும். தாயாரே சொல்லியிருக்கிறாள். அவளும் இதே போல ஒரு வருத்தத்துடன் கேட்டபோதுதான்!

அப்போது, அவளுடைய தந்தை இறந்து இரண்டு ஆண்டுகள் ஆகியிருந்தன. தந்தை இருந்தபோது, ஒவ்வோர் ஆண்டும், ஊர்த் திருவிழாவுக்குச் சென்று அங்கிருக்கும் ஒன்றுவிட்ட சகோதரன், சகோதரிகளோடு ஆட்டம் போட்டுப் பழக்கம்! இரண்டு வருஷங்களாகத் தொடர்ந்து செல்லவில்லை என்றானதும் தாயிடம் விளக்கம் கேட்டாள்.

முதலாம் ஆண்டு தந்தையின் மறைவுக்காக என்று அவளே ஊகித்திருந்தாள்!

மறு வருஷமும் ஊருக்குக் கிளம்புவதற்கான ஏற்பாட்டையே காணோமே என்றான பிறகுதான், அவள் வாய் விட்டுக் கேட்டது!

படிக்கிற மூன்று பிள்ளைகள், அவர்களிலும் இரண்டு பெண்கள், அவர்களிலும் ஒருத்திக்குக் கிட்டத்தட்ட திருமண வயது. தனியாகப் பணமும் அதிகம் கிடையாது எனும்போது, எப்படியம்மா கூப்பிடுவார்கள் என்று தாயார் கேட்டபோது, அவளுக்கு, முதலில் ஒன்றுமே புரியவில்லை. எல்லாம் தாயார் எடுத்துச் சொன்ன பிறகுதான் நன்கு தெரிந்தது.

பிள்ளைகளின் படிப்பு, பெண்களின் திருமணம் என்று ஏகப்பட்ட செலவு எப்படியும் இருக்கும். அது... குறைந்த பட்சமாக ஒரு பகுதியேனும், அவர்கள் பொறுப்பாகி விடுமோ என்று அச்சம் என்றாள் பரிமளம்!

அப்போதும் கூடப் பதினேழு வயதில் அவளுக்குத் திருமணமா? சின்னவர்களுக்குப் பதிமூன்று வயது! இப்போது போய், என்ன மாதிரி எண்ணங்கள் என்று எரிச்சல்தான்.



ஆனால், படித்திருந்ததால், தந்தையின் வேலை தாய் பரிமளத்துக்கே கிடைக்க, அத்தோடு, இன்னும் சில தனிப்பட்ட வேலைகளையும், செய்து சிக்கனமாகச் செலவு செய்து, அவள் குருவி சேர்ப்பது போல, மூன்று பிள்ளைகளுக்குமாகச் சேர்ப்பதைக் கவனித்த பிறகே, சுரபிக்குப் பெரியப்பா வீட்டினரின் போக்கு ஓரளவு புரியலாயிற்று!

ஆனாலும், தம்பி குடும்பம் என்கிற பாசம் கொஞ்ச மேனும் இருக்காதா என்று உள்ளூர, ஆத்திரம் வரத்தான் செய்யும்!

ஆனால், தாயார் சேமித்த விதத்தோடு, அப்படிச் சேர்க்கப்பட்ட பணம் பொருட்களையும் கண்ணால் பார்த்தபோதுதான், சுரபிக்கு விழிப்பு வந்தது!

அத்தோடு இன்னொரு நன்மையாக, இதில் பைசாப் பொருளைக் கூட, வீணாக்கி விடக் கூடாது என்ற உறுதியும் ஏற்பட்டது!

அந்த உறுதியே, இன்றைய தெளிவான நிலைமைக்கு அடிப்படையாகவும் அமைந்தது!

பொதுவாகவே சுரபி ஓரளவு நன்றாகப் படிப்பாளே தவிர, தம்பி தங்கையைப் போல 'பிரமாதம்' என்று சொல்ல முடியாது!

எனவே அவளது பள்ளிப் படிப்பு முடிந்ததும், பொதுவான கல்லூரிப் படிப்புடன், மாலையில் கம்ப்யூட்டர் பயிற்சியும் எடுக்கவே, படிப்பு முடிந்ததுமே, ஓரளவு நல்ல வேலையும் கிடைத்து, அவளது வருமானமும் வரத் தொடங்கியது!

இந்த சமயத்தில், பெரியப்பா மகளுக்குக் கல்யாணம் நடந்தது!

அதில் வருத்தம் என்னவென்றால், இவர்களுக்குத் தகவல் தெரிவிக்காமல் விட்டு விடவில்லை! அழைக் காமலும் இருக்கவில்லை. ஆனால், அழைப்புடன் சேர்த்து, 'அவர்கள் வந்தால் சந்தோஷமே என்றாலும் கஷ்டப் பட்டுக் கொண்டு, வீணே கைப்பணத்தைச் செலவு பண்ணிக் கொண்டு வர வேண்டாம். வராவிட்டாலும், தம்பி குடும்பத்தை அவர் தப்பாக நினைக்கப் போவது இல்லை' என்று தம்பி மனைவிக்கு ஒரு கடிதத்தையும், பெரியப்பா வைத்திருந்தார்.

அதாவது, வராதே என்று சொல்லாமல் சொல்லியிருந் தார்.

ஒரு நாள் ரொம்பவும் மனதுக்குக் கஷ்டமாக இருந்த போதும், மறுநாளே, சுரபிக்கு மனம் தெளிந்து விட்டது!

திருமணத்துக்குப் போனால், அம்மா கஷ்டப்பட்டுச் சேர்த்த பணத்தில் எவ்வளவு செலவாகியிருக்கும்? அதற்கு மேலாக, சிறப்பாக சுந்தரிக்கு நல்ல பரிசு ஒன்றும் வாங்கிப் போயிருப்பார்கள். எல்லாமாகச் சேர்த்து, ஒரு பெரும் தொகை செலவாகியிருக்கும்!

செலவும் செய்துவிட்டு, ஊரில் பெரியம்மா முகம் திருப்புவதையும், பாட்டி ஓய்ந்து கிடப்பதையும் பார்த்து, இன்னமும் வருத்தப்பட்டுக் கொண்டு திரும்பி வர வேண்டும்!

இப்போது அவை அனைத்துக்கும் ஒரு 'சூ' மந்திரக் காளி'யில் மாயமாகி விடப் போகின்றன!

இப்படியெல்லாம் யோசித்து, பெரிய தந்தையின் குடும்பம் செய்த அலட்சியத்தையும் அவமானத்தையும், சுரபி நல்ல படியாகத் தாங்கிக் கொண்டாள். இரட்டையரும் அப்படியே!



அவர்களது வயதில், இது பெரிதாகப் படவும் இல்லை!

ஆனால் பரிமளத்துக்குத் தாங்குவது கடினமாகப் பட்டது!

சில தினங்களுக்கு முன்புதான், ஒரு நல்ல இடத்தி லிருந்து, சுரபியைப் பெண் கேட்டு ஆளனுப்பி இருந் தார்கள்.

பெண், பிள்ளை பார்த்து, இருவருக்கும் சம்மதமாகவும் இருந்தது. வீட்டுப் பெரியவர்களாக இருந்து, பார்த்து நடத்திக் கொடுக்க வேண்டும் என்று ஊருக்குப் போய், மைத்துனரிடம் கேட்பதாகவும், பரிமளம் திட்டமிட்டிருந் தாள். செலவுக்கு அவரிடம் கேட்கப் போவது இல்லை என்று முதலிலேயே தெளிவு படுத்தி விட்டால், அப் புறம், தாராளமாக நடத்திக் கொடுப்பார் என்று எண்ணி, ஊருக்குச் செல்வதற்காக, பரிமளம் விடுப்புக்கும் கேட் டிருந்தாள்.

அந்தச் சமயத்தில் விழுந்த இந்த அடியில் இருந்து அவளால் மீள முடியவில்லை!

மகளின் திருமண ஏற்பாடுகளைத் தொடங்கியதில் இருந்தே, அவளுக்கு அடிக்கடி கணவர் நினைவுதான்! இருவருமாக, என்னென்ன கனவுகள் கண்டிருப்பார்கள்!

இப்போதோ, கணவர் மட்டும் இருந்திருந்தால், வேண்டாத குப்பையாக, இப்படித் தங்களை ஒதுக்கித் தள்ளியிருப்பார்களா என்று, அதே நினைவில் துடி துடித்துப் போனாள். இழப்பின் துயரம் பல மடங்காகித் தாக்கியது!

சும்மாவே, சற்று அதிகப்படியான பொறுப்பும், உழைப்புமாகப் பலவீனமுற்று இருந்த உடம்பும் மனமும்,

இந்த அதிர்ச்சியில் உடைந்து, வெறும் மூன்று நாள் காய்ச்சலில், எல்லாமே முடிந்தும் போயிற்று!

நம்ப முடியாத பயங்கரத்தில் பிள்ளைகள் மூவருமே, தவியாய்த் தவித்தார்கள்!

பெரிய தந்தையும், பெரியன்னையும் பேருக்கு வந்து, பட்டுக் கொள்ளாமல் துக்கம் விசாரித்துவிட்டுப் போனார்கள்.

பாட்டிக்கு உடம்பு சரியில்லை என்றார்கள். இதைக் கேட்டதாலாம்! விவரம் சொல்லியிருப்பார்களா என்பதே, சுரபிக்குச் சந்தேகம்! நடமாட்டமே குறைந்து போய், மூத்த மகனைச் சார்ந்து வாழும் அந்த முதிய பெண்மணிக்குத் தெரிந்தாலும்தான் என்ன செய்வாள்?

அந்த உறவு அடியோடு விலகி, அன்னியமாயிற்று!

சுரபியைத் திருமணம் பேசியிருந்த குடும்பத்தார், சற்று மனிதத் தன்மையோடுதான் நடந்து கொண்டார்கள். ஒரு மாதம் கழித்து வந்து, மேற்கொண்டு நடக்க வேண்டியது பற்றிப் பேசலாம் என்று சொல்லி விட்டுப் போனார்கள்.

ஆனால் பத்து நாட்களுக்குள்ளாகவே, சுவரில் அடிபட்ட பந்து போலத் திரும்பி வந்து, மகனுக்கு வெளிநாட்டு வேலைக்கு உத்திரவு வந்திருப்பதாகவும், விரைவில் திருமணத்தை முடித்துக் கொண்டு கிளம்ப வேண்டும் என்று சொன்னார்கள்.

தம்பி தங்கையின் கதி என்ன என்று சுரபி கேட்டதற்கு, அவர்களிடம் பதில் இல்லை! மகனின் திருமணத்தை முடித்து, கணவன் மனைவியாக அவர்களை வெளிநாடு அனுப்புவது மட்டுமே அவர்களது குறியாக இருந்தது!



அந்த மனைவி சுரபியாக இருந்தால் அவர்களுக்கு சந்தோஷம் ஆனால் எப்படியும் மனைவியோடுதான் மகன் கிளம்பப் போகிறான். அப்படி அவன் கிளம்புவதும் நிச்சயம்!

அந்த மகனுக்கும், அதுவே உடன்பாடாக இருந்தது!

சுரபிக்கு அன்றிரவு தூக்கமில்லை. தனிமையில் அமர்ந்து, அவள் வெகுவாக யோசித்தாள்.

அவளுக்கு, முக்கியமான முடிவு எடுக்க வேண்டியிருந்தது!

குடும்பத்துக்காக, யோசிக்க அன்னை இல்லாத நிலையில் தப்பான எதையும் அவள் தீர்மானித்து விடக் கூடாதே.

தாயார் மருமகனாக்கிக் கொள்ள விரும்பிய மனிதன்! ஆனால், அந்தத் தாயார் இல்லாத இன்றைய நிலை!

இப்போது எது நல்லது? எல்லோருக்கும்?

சாதக பாதகங்கள், நன்மை தீமை அத்தனையும் பலவாறு யோசித்து, அன்றிரவில் அவள் ஒரு முடிவுக்கு வந்தாள்.

அதன்படி, மறுநாள் வந்தவர்களிடம் வேறு பெண் மூலம் அவர்கள் குடும்பம் செழிக்க, நல்வாழ்த்துச் சொல்லி அனுப்பினாள்.

''என்னக்கா?'' என்று திகைத்த தம்பி, தங்கையை அதைப் பற்றிப் பேச விடாமல், அவர்களது மேற்கல்வி குறித்து கலந்து ஆராய்ந்தாள்.

நல்ல மதிப்பெண்கள் வாங்கியிருந்த அவர்கள் இருவருக்குமே, அவர்கள் விரும்பிய கம்ப்யூட்டர் துறையில், இடம் இலகுவாகக் கிடைத்தது!

''பணம்?'' என்று அவர்கள் யோசித்தபோது, தமக்கை இலகுவாகக் கட்டவும், இருவரும் திகைத்தனர்.

''எப்படிக்கா?'' என்று கேட்டு விஷயம் தெரிந்து கொண்டனர்.

''என்னக்கா...'' என்று விசித்த தங்கையைத் தேற்றி, படிப்பில் கவனத்தைச் செலுத்தச் சொன்னாள். அவளுக்கு நாலு ஆண்டுகள் முந்திப் பிறந்தவள்..!

ப்ளஸ் டூ முடித்திருந்த அந்த பதினேழு என்பது, உலகம் அறியக் கூடிய பெரிய வயது அல்லதான்.

ஆனால், தாயை இழந்து துவண்டிருந்த அந்த நேரத்தில், தமக்கையின் தியாகம், அந்த இருவரையும் மனதால் வளரச் செய்து, பொறுப்பறிய வைத்தது.

தங்கள் படிப்புதான். அந்தத் தியாகத்துக்கு உரிய கைமாறு என்று புரிந்து இருவருமே நன்கு படிக்க முடிவு செய்து, அதைக் கடைப்பிடிக்கவும் செய்தனர்.

துடிப்பும், ஆர்வமும் உடையவர்கள் என்பதோடு, பொறுப்புணர்ச்சியும் சேர்ந்துகொள்ள, இப்படியிப்படி வாழ்வது என்று மூவருமாகச் சிலபல விதிமுறைகளைத் தீட்டி, அதன் வழியே நடக்கலாயினர்.

இந்த வாழ்வு விரைவிலேயே இயல்பாகி, அதிலேயே சந்தோஷமாக இருக்கவும் பழகிக் கொண்டனர்.

வேலைகளையும் மூவரும் சேர்ந்து செய்தனர். ஓய்வு நேரங்களையும் மகிழ்ச்சியுடனேயே கழித்தனர்!

எப்போதாவது அபூர்வமாக, மற்ற உறவுகள் பற்றிப் பேச்சு எழுவதுண்டு. ஆனால் தேவையற்றதாய், உடனேயே அதை ஒதுக்குவதில், மறந்தும் போய்விடும்.



பல வீடுகளைக் கொண்டிருந்த அந்த அடுக்கு மாடிக் கட்டிடத்தில் மலர்ந்த முகத்துடன் வளைய வந்த அந்த மூவருக்கும் நல்ல பெயர் இருந்தது! அக்கம் பக்கத்தாரின் பிரியமும் இருந்தது!

பக்கத்து வீட்டு ஆன்ட்டிக்கு மூட்டுவலி என்றால், தைலம் தேய்த்து விடுவது. சௌமினிதான். அடுத்த பிளாக் முதல் வீட்டு அங்கிளுக்குப் பென்ஷன் வாங்கிவர, குணசீலன்தான் கூடப் போவான்.

எனவே, மூவருக்குமாக ஒரு தரம் காய்ச்சல் வந்த போது, பக்கத்து ப்ளாட்டில் இருந்து, முழு உணவே வந்தது!

பொதுவாக, வருஷப் பிறப்பன்று எல்லோரும் ஒன்று கூடிக் கொண்டாடும்போது, சின்னவர்களின் பங்களிப்பு, சிறப்பாகத் தெரியும்!

உதவியாகட்டும், பாசமாகட்டும், எதுவும் ஒரு வழிப் பாதையாக இல்லாததால், நிலைத்தும் இருந்தது!

மூன்றாவது ப்ளாட் மருமகள், அவளுடைய தந்தைக்கு உடம்பு சரியில்லை என்று முன்பே ஊருக்குப் போய் விட்டாள். அவருக்கு 'சீரியஸ்' என்று தகவல் வர, அம்மா, பிள்ளை இருவரும் கிளம்பிப் போனார்கள். சாமான் ஒதுக்கிக் கிளம்புவதில் அவர்களுக்கு உதவி செய்யப் போனதில், சௌமினிக்கு 'அசைன்மென்ட்' வேலை சற்றுப் பின் தங்கிப் போயிற்று. அவ்வப்போது நடப்பது தான்.

இரவே அதை முடித்துவிட வேண்டும் என்று, அவள் உட்கார்ந்து வேலை செய்ததில், பன்னிரண்டு மணிக்கும் மேல் ஆகிவிட்டது!

பிரிண்ட் அவுட் எடுத்து, கம்ப்யூட்டரை மூடி வைத்து விட்டுச் சோம்பல் முறித்தவண்ணம், ஜன்னல் அருகே சென்று வெளியே பார்த்தாள்.

எப்போதுமே, இரவின் அமைதியில் இப்படித் தனியே நின்று வெளியுலகைப் பார்க்க, சௌமினிக்கு ரொம்பப் பிடிக்கும்.

ஒரே இருட்டாக இல்லாமல், பாதுகாப்புக்காக அங் கங்கே எரியும் விளக்கின் ஒளியில் அசைந்தாடும் பசிய மரக் கிளைகள், தூரத்தில் தெரியும் வண்ண நியான் விளம்பர எழுத்துக்கள், தூரத்தே தரை இறங்கும் விமானத் தின் பளிச் பளிச் ஒளி... உலகம் எவ்வளவு அழகாக இருக்கிறது!

சற்று நேரம் நின்று ரசித்து விட்டுப் படுப்பதற்காகத் திரும்பிய சௌமினிக்குச் சட்டென்று, இதயம் தொண டைக்குள் வந்து துடிக்கலாயிற்று.

மூன்றாம் வீட்டில் ஆட்கள் இல்லை! மின்சாரச் சிக் கனம் அதிகம் பார்க்கும் ஆன்ட்டி, அனைத்து விளக்கு களையும் அணைத்து விட்டுப் போனது, அவளுக்குத் தெரியும்!

அப்படியிருக்க, அந்த வீட்டு ஜன்னல் வழியே வெளிச்சம் எப்படி வெளியே விழ முடியும்? யாரோ திருடன்!

# 3



சற்று நேரம், சௌமினிக்கு ஒன்றுமே ஓடவில்லை.



இப்போது என்ன செய்வது?

அந்த அடுக்கு மாடிக் கட்டிடங்களின் பாதுகாப்புக்கு என்று, இருவர் இருந்தனர். பகல் வேளைக்கு ஒருவர். மற்றவர் இரவுக்கு! வாரம் ஒரு முறை, வேலை நேரத்தை மாற்றிக் கொள்வார்கள்.

இருவருமே சற்று வயதானவர்கள். அதனால் இரவில் எல்லா வாகனங்களும் வந்தபின், அவ்வப்போது கண் காணிப்பது தவிர, சற்றுப் படுத்துக் கொள்ள, கோழித் தூக்கம் போடவும் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு இருந்தது!

அது ஒரு பிரச்சினையாக, இதுவரை ஆளில்லை!

ஆனால் இப்போது?

பிரச்சினை என்றதும், வழக்கம்போல சௌமினியின் மனம், தமக்கையை நாடிற்று!

ஆனால், பகல் முழுவதும் வேலை செய்துவிட்டு, வீட்டிலும் தம்பி தங்கையோடு கலகலப்பாகப் பேசியபடி, இரவு உணவைப் பார்த்துவிட்டு, சுரபி இப்போது, அடித்துப் போட்டாற்போலத் தூங்கிக் கொண்டிருப்பாள்!

அவளை எழுப்புவது பாவமாகும்!

சற்று நேரம் அசையாமல் நின்று உற்றுக் கவனித்துப் பார்த்தாள்.

ஜன்னல் வெளிச்சத்தில், எந்த விதமான சலனமும் தெரியவில்லை!

திருடிவிட்டுப் போய் விட்டானா?

அல்லது, வெகு கெட்டிக்காரத்தனமாக, வெளிச்சத்தில் பட்டுக் கொள்ளாமல், மூட்டை கட்டுகிறானா?

எதுவானாலும், தாமதிப்பது தப்பு என்று தோன்றிவிட, சத்தமின்றிப் போய், குணசீலனை எழுப்பினாள்.

இருவருமாக, அடிமேல் அடியெடுத்துச் சத்தமில் லாமல் போய்ப் பார்த்தால், கதவு உட்புறமாகத் தாளிடப் பட்டிருந்தது!

சத்தமின்றியே, வெளிப்புறத் தாளை இழுத்து மாட்டி விட்டு, செக்யூரிட்டி ஆளைக் கூப்பிடப் போனான் குண சீலன்.

கதவைத்தான் வெளிப்புறமாகப் பூட்டியாயிற்றே என்று தைரியமாக நின்ற சௌமினிக்கு ஏதோ உறுமல் சத்தம் போலக் கேட்கவும், வெலவெலத்து விட்டது!

இது ஏதேனும் சங்கேதக் குரலா? இந்தத் திருடன், துணையாக இன்னொருவனையும் கூட்டி வந்திருந்தால்? இந்தச் சத்தம் கேட்டு, அவன் வந்து, அவளைக் குத்தி விட்டால்?

அய்யோடா! வீட்டுக் கதவை வேறு, சும்மாதானே சாத்திவிட்டு வந்தார்கள்!

இவனுடைய கூட்டாளி, அவர்கள் வீட்டுக்குள் புகுந்து விட்டால்? ஓடிப்போய் அவர்களது வீட்டுக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொள்ளலாமா என்று சௌமினி நினைத்தது. ஒரே ஒரு தரம்தான்! அது நடக்காத காரியம் என்று, உடனேயே தெரிந்து விட்டது!

முதல் காரணம், கூடப் பிறந்தவன், இன்னமும் வெளியே இருக்கிறான். திருடர்களின் எண்ணிக்கை அதிகம் இருந்தால், உடனே பிறந்தானைக் கைவிட்டு, கோழையாக ஓடி ஒளிவது, அவளால் முடியாத காரியம்!



அடுத்தது, இந்தத் திருடனைப் பிடிக்காமல் விட்டால், தொடர்ந்து இதே போலக் குற்றங்கள் பெருகக் கூடும் என்பது!

'அது வெறும் சொத்தை ப்ளாட்டுப்பா. எத்தனை பூட்டை உடைத்தாலும் யாரும் கண்டு கொள்ள மாட் டார்கள்' என்று. அந்தத் திருட்டு சாம்ராஜ்ஜியத்தில் தகவல் பரவி விடாதா? அப்புறம், இங்கே தினம் ஒரு திருட்டல்லவா, நடக்கும்?

எனவே, நடுக்கத்தை அடக்கிக் கொண்டு, இல்லாத தைரியத்தை இருப்பது போலக் காட்டிக் கொண்டு சௌமினி அங்கேயே அசையாது நின்றாள்.

காவலாளியைக் கூட்டிக் கொண்டு, குணசீலன் வந்து சேருமுன், உள்ளிருப்பவனின் உறுமல் ஒலி, மேலும் இருதரம் கேட்டு விட்டது! ஆனால் நல்லவேளையாக, இந்த சைகையை ஏற்று, வேறு யாரும் அங்கே வந்து விடவில்லை!

அவனது வயதுக்கு, ஓட்டமும் நடையுமாகக் காவ லாளி, வேகமாகத்தான் வந்தான்.

ஆனால், சௌமினி நின்ற இடத்தைப் பார்த்ததும், "அட, இதுக்காகத்தான் என்னை எழுப்பிக் கூப்பிட்டி யாந்தீங்களாக்கும்? உள்ளார இருக்கிறது, திருடன் இல்லையம்மா. இந்த வீட்டு விருந்தாளி. இவுக விவரம் எல்லாம் சொல்லி, வந்ததும் கொடுக்கச் சொல்லி, சாவியை என்கிட்டே கொடுத்து விட்டுத்தானே, அந்தய்யா கிளம் பிப் போனாக! அதும்படி, நான்தான் உள்ளே இருக்கிற அய்யாகிட்டே சாவியைக் கொடுத்து அனுப்பினேன்!" என்று அவன் கூறவும், இரட்டையர் இருவருக்கும் சொத்தென்றாகி விட்டது!

இப்போது மற்ற யாரும் எழுந்து வருமுன் எப்படிக் காவலாளியை அனுப்பி விட்டு ஓசைப்படாமல் எப்படித் தங்கள் வீட்டுக்குள் புகுந்து, கதவைப் பூட்டிக் கொள்வது என்ற யோசனையில், இருவரும் இருந்த வேளையில், வீட்டினுள்ளிருந்து, மறுபடியும் அந்த உறுமல்... அல்லது முனகலோ... சத்தம் கேட்டது!

''என்னம்மா சத்தம்?'' என்று பக்கவாட்டில் லேசாகச் சாத்தியிருந்த ஜன்னலை நன்கு திறந்து எட்டிப் பார்த்த காவலாளி ''அடக் கடவுளே!'' என்றான்.

''என்ன, வாட்ச்மேன், என்ன?'' என்று பரபரப்புடன் சௌமினி கேட்க, காவலாளியை விலக்கி நிறுத்திவிட்டு எட்டிப் பார்த்த குணசீலன் ''அந்த ஆளுக்கு உடம்பு சரியில்லை போல இருக்கிறது, மின்னி!'' என்றான்.

அதாவது, முனகல்தான். உறுமல் இல்லை!

''அய்யோ! இந்த வேளையில் யாரையம்மா எழுப்பு கிறது? செகரட்டரி சார் கோவிச்சுக் கிடுவாரே!'' என்று புலம்பினான் வயதான காவலாளி.

சற்று யோசித்துவிட்டு ''நீங்கள் போங்கள், வாட்ச்மேன், நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம்'' என்று அவனை அனுப்பி வைத்தாள் சௌமினி.

''என்ன பார்ப்பாய், மின்னி?'' என்று குணா கேட்பதைக் கூட நின்று கேளாமல், விட்டேன் பிழைத்தேன் என்று வேகமாகச் சென்று மறைந்தான் காவல்காரன்.

''வீட்டில் ஏதாவது மாத்திரை இருக்கும், குணா. அக்கா விடம் கேட்டு, வாங்கி வருகிறேன். நீ அதற்குள், அவரை மெல்லக் கூப்பிட்டு, எப்படியாவது கதவைத் திறக்கச் செய். ஒன்றும் செய்யாமல் போனால், நமக்கே தூங்க முடியாது'' என்று சொல்லிவிட்டு சௌமினி செல்ல, ''உண்மைதான்'' என்று தலையாட்டிவிட்டு, ''சார், சார் இங்கே பாருங்கள்!'' என்று ஜன்னல் வழியாகவே கூப்பிட்டு, உள்ளிருந்தவரை எழுப்ப முயன்றான் குண சீலன்.



காய்ச்சலின் வேகத்தால் அயர்ந்து உறங்க முடியாமல் உடம்பை முறுக்கி உள்ளே சோபாவில் புரண்டு கொண் டிருந்த அவனும், குரல் கேட்டு உடனேயே விழித்து விட்டான்.

தள்ளாடியவாறு, அவன் வந்து கதவைத் திறந்துவிட்டு, அப்படியே சரிய, அவனைப் பாதித் தாங்கிப் பிடித்தவாறு, மறுபடியும் சோபாவுக்கே அழைத்துச் சென்று படுக்க வைத்தான் குணசீலன்.

''பக்கவாட்டில் மூன்றாவது வீடு சார் எங்களது. நீங்கள் முனகுகிற சத்தம் கேட்டு வந்தோம். இதோ அக்கா வந்து விடுவாள்'' என்று குணா சமாளித்து விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, தங்கையைப் பின் தொடர்ந்து மருந்துப் பெட்டியுடன் சுரபி வந்து விட்டாள்.

சுரபிக்கு மருத்துவத் துறையில் ஒரு தோழி உண்டு. அவள் மூலமாகச் சின்னச் சின்ன சுகவீனங்கள், அவசரத் துக்கான ஆபத்தற்ற மருந்துகள் ஒரு சில வீட்டில் எப் போதும் இருக்கும்.

அன்னையின் எதிர்பாராத மறைவுக்குப் பிறகு செய்த ஏற்பாடு! அதன் மூலமாகப் பலமுறை படுக்கையில் விழுவது, வீட்டில் தவிர்க்கப்பட்டிருக்கிறது!

அக்கம் பக்கத்தாருக்குக் கூட உதவியிருக்கிறது. பக்கத்து வீட்டு ஆன்ட்டியின் மூட்டு வலித் தைலம் கூட அந்த மருத்துவத் தோழியின் ஆலோசனையே!

இப்போதும், மருந்துப் பெட்டியோடு வந்து, காய்ச்சல் விவரம் கேட்டுவிட்டு, ஏதோ மாத்திரையை எடுத்துக் கொடுத்தாள் சுரபி.

அதற்குள், உள்ளே போய் வென்னீர் போட்டுக் கொணர்ந்தாள் சௌமினி.

சோபாவில் சாய்ந்து அமர்ந்தபோதும், மாத்திரையை விழுங்க, நோயாளி சற்றுத் தயங்குவது போலத் தோன்றவே ''சும்மா போட்டுக் கொள்ளுங்கள் சார்! எங்களுக்கெல்லாம் அக்கா மருந்துதான். எங்கள் அக்கா முக்கால் வைத்தியர் மாதிரி!'' என்றாள் சௌமினி.

அவன் ஆச்சரியமாகப் பார்க்கவும் ''அரை வைத்தியன், ஆயிரம் பேரைக் கொன்றுதானே, முழு வைத்தியர் ஆக வேண்டும் என்று சார் யோசிக்கிறார் போல! பயப்படாதீர்கள் சார்! அக்கா வைத்தியத்தில் நானே ஆயிரம் முறை செத்துப் பிழைத்திருக்கிறேன். அந்த 'ஆயிரம் ஆபத்து' தாண்டி விட்டதால், நீங்கள் தைரியமாக மாத்திரையை முழுங்கலாம்!'' என்றான் குணசீலன்.

''ஷ்! அவர் ஒழுங்காக மாத்திரை எடுத்துக் கொள்ள விடமாட்டீர்கள் போல இருக்கிறதே! ஒன்றும் பயப்படாதீர்கள் சார். வெறும் 'பாராசெட்டமால்'தான். காய்ச்சலைக் குறைக்குமே தவிர, வேறு ஒன்றும் பண்ணாது! காலையில் ஒழுங்கான வைத்தியரைப் பார்க்கலாம். அடுத்த பிளாக்கில் கூட, ஒரு மருத்துவர் இருக்கிறார்! அவரிடமே கூடப் போகலாம்! மின்னி, அந்த வென்னீரைக் கொடு. இந்தாருங்கள் சார்! காலையிலேயே அந்த டாக்டரைப் பார்த்து விடலாம்!'' என்று அமைதியான குரலில் கூறியவாறே மாத்திரையின் உறையைப் பிரித்து, ஆனந்தனிடம் நீட்டினாள் சுரபி.



அவன் மாத்திரையை விழுங்கும் வரை காத்திருந்து ''குணா, இன்றைக்கு நீ இங்கேயே படுத்துக் கொள். இரவில் சாருக்கு ஏதாவது தேவை என்றால், எடுத்துக் கொடுப்பதற்கு வசதியாக இருக்கும்'' என்று தம்பியிடம் கூறினாள்.

பலவீனமான குரலில், புதியவன் தடுக்க முயன்ற போது, ''பாருங்கள் இது என்ன மாதிரிக் காய்ச்சல் என்று தெரியாது. இப்போதைக்கு உடல் சூடு மிக அதிகம் ஆகாதிருக்க மட்டும்தான் இந்த மருந்து பயன்படும்! இதிலேயே குணமாகி விட்டால் நல்லதுதான். ஆனால் வேறு பிரச்சினை என்றால், இங்கே உங்களுக்கு ஒரு துணை இருப்பது நல்லது! இது போன்ற உதவியெல்லாம் குணாவுக்குப் பழக்கம்தான். அதனால், அவனைப் பற்றிக் கவலைப்படாமல், உங்கள் உடம்பு குணமாகிற வழியைப் பாருங்கள். படுத்துத் தூங்குங்கள்'' என்று சுரபி முடிக்க ''ஆமாம் சார்! ப்ளீஸ் சார்! ஒரு ராத்திரியேனும், இவனது குறட்டைத் தொல்லையில் இருந்து, எங்களுக்கு விடுதலை தாருங்கள், சார்! உங்களைக் கெஞ்...சிக் கேட்டுக் கொள்ளுகிறேன், சார்!'' என்று சௌமினி பரிதாபமாகக் கேட்ட விதத்தில், எல்லோருக்கும் சிரிப்பு வந்தது!

''என்னது? நானா? குறட்டை விடுவது நானா? உன் கொர், கொர் தாங்காமல், நானல்லவா, காதில் பஞ்சைத் திணித்து வைத்துக் கொண்டு தூங்குகிறேன்! இதில் அலாரம் அடிப்பது கூடத் தெரியாமல், தூங்கி, பரீட்சைக்குப் படிக்க நேரம் இல்லாமல், இரண்டு மார்க், உன்னை விடக் குறைவாக வாங்கினேனே!'' என்றான் குணா.

''ஐ.ஐ. என்னை விட மோசமாக மதிப்பெண் வாங்கியதைச் சமாளிக்க, இப்படி ஒரு சால்ஜாப்பா? பொய். பொய்! இவனை நம்பாதீர்கள், சார்! நான் கெட்டிக்காரி! அதனால் கூடுதலாக மார்க் வாங்கினேன்! உண்மையை ஒத்துக் கொள்ளாமல், அழுவணி ஆட்டம் ஆடுவதைப் பார்!'' என்று கிண்டலாகச் சிரித்தாள் சௌமினி.

''பார்ப்போமே, அடுத்த முறை விழித்திருந்து படித்து, உன்னை விட அதிக மதிப்பெண் எடுத்துக் காட்டு கிறேன்! அப்போது, நீ என்ன சொல்லுகிறாய் என்று அப்போது பார்ப்போம்!'' என்று சவால் விட்டான், பையன்.

''அப்போதென்ன? அப்படி ஓர் அதிசயம் ஒரு வேளை நடந்ததானால், என் பதில் இப்போதே தயார், உன் குறட்டைச் சத்தம் தாங்காமல் காதில் பஞ்சை வைத்துத் தூங்கியதில்... டட்டடாய்ங்!'' என்ற சௌமினியின் பதிலில் எல்லோருக்கும் சிரிப்பு வந்தது என்றால், ''அடிப்பாவி! இதிலே கூடவா, காப்பியடிப்பாய்?'' என்ற குணாவின் கேள்வி. அவர்களை அடக்க மாட்டாமல் நகைக்க வைத்தது!

ஆனாலும், உடனே சிரிப்பை அடக்கி, ''போதும், போதும்! மணி ஒன்று தெரியுமா? அவர் உடம்பு சரியில் லாதவர். உங்கள் வாலைக் கொஞ்சம் சுருட்டி வைத்துக் கொண்டு அவரைத் தூங்க விடுங்கள்! நீ வா, மின்னி. குணா, வந்து கதவைப் பூட்டிக் கொள், நீங்கள் தூங்குங்கள் சார்!'' என்று அவரவர் செய்ய வேண்டியதைச் சொல்லி, சுரபி கிளம்பினாள்.

''சாரில்லை, ஆனந்தன்'' என்று மெல்லக் கூறியவாறே படுக்கையில் சாய்ந்தான் காய்ச்சல்காரன்.



மறுநாள் காலையில் சௌமினி எழுந்து, குளித்து வந்தபோது, மணக்க மணக்கப் பூண்டுக் கஞ்சி தயாராக இருந்தது!

அவ்வப்போது, வீட்டில் செய்வதுதான். பூண்டும் அரிசியும் குழைய வேக வைத்து, பால் கலந்து, சுக்கு, சீரகம் சேர்த்துச் செய்வது. உடம்புக்கு நல்லது என்று. பரி மளம் மாதம் இருமுறையாவது செய்வதுண்டு. அதையே சுரபியும் பின்பற்றினாள்.

''கஞ்சியா?'' என்று குணா முகத்தைத் தூக்கினாலும், தேங்காய்த் துவையலோடு சேர்த்து, அதிகம் உண்பது, அவனேதான்.

சட்டி காலியானதும், ''கஷ்டப்பட்டு செய்த அக்கா மனது கஷ்டப்படக் கூடாதே என்று சிரமப்பட்டு விழுங் கினேன்!'' என்று சிரிப்பான்.

இப்போதும், சௌமினியைக் கண்டதும் கண் சிமிட்டி ''பாவம் மிஸ்டர் ஆனந்தன்!'' என்று விட்டுக் கஞ்சியைத் தூக்கிப் போனான் அவன்.

''இப்போது காய்ச்சல் இல்லையாம். காலையிலேயே டாக்டர் அங்கிளிடம் போய்ப் பார்க்கச் சொன்னேன். அவரும் பரிசோதித்துவிட்டு கவலைப்படும்படியாக எதுவும் இல்லை என்றார். முடிந்தால், நாளை வரை இப்படிப் பத்தியச் சாப்பாடு கொடுக்கச் சொன்னார். மதியத்துக்கு ரசம் சாதம் செய்து, செல்லோவில் வைத்துக் கொடுத்து விடலாம். காற்றுப் புகாத டப்பாவில் அப்பளம் பொரித்து வைத்து விட்டால்... அப்புறம், மாலையில் வந்து பார்த்துக் கொள்ளலாம். அதுவரை... பகல் காவல் காரனை, அவ்வப்போது வந்து பார்த்துக் கொள்ளச் சொல்ல

வேண்டியதுதான். அதற்கு, நம் செகரட்டரியிடம் பேச வேண்டும்... மூர்த்தியண்ணனும், ஆன்ட்டியும் சீக்கிரமாக வந்து விட்டால், அப்புறம் அவர்கள் பார்த்துக் கொள் வார்கள். நீ கிளம்பி விட்டாய் என்றால், வா. நாம் இருவரும் போய்ப் பார்த்து விட்டு, மதியச் சாப்பாட்டைக் கொடுத்து விட்டு வரலாம்!'' என்றாள் சுரபி.

பொறுட்பேற்றுச் செய்கிறவள்தான். ஆனாலும் தமக்கை யிடம் ஏதோ வேறுபாடு தெரிந்தது சௌமினிக்கு. சுரபி யின் வழக்கமான அமைதி, மறைந்து போயிருந்தது! ஏதோ ஒரு பரபரப்பு!

அறிமுகமற்ற ஓர் அன்னியன் என்பதாலா?

''மிஸ்டர் ஆனந்தனுக்கு வேண்டியவர், உறவினருக் குத் தகவல் கொடுத்து விடலாமேக்கா!'' என்று வழி சொன்னாள் தங்கை.

சுரபி உடனே பதில் சொல்லவில்லை! ரசத்தை ஒரு பாத்திரத்தில் ஊற்றி வைத்துவிட்டு, ''அதை நாமாகக் கேட்டால், செய்யப் பிடிக்கவில்லை. தொல்லையாகக் கருதுகிறோம் என்று, சொல்லாமல் சொல்வது போல ஆகாதா, மின்னி? அக்கம் பக்கத்தோருடன் நல்லுற வோடு இருக்க வேண்டும் என்பது, நாம் சேர்ந்து தீர் மானித்த கொள்கைதானே? அப்படியே இருந்துவிட்டுப் போகலாம்'' என்றாள்.

அக்காவின் குரல், சற்று உயர்ந்திருந்ததோ? ஆனால், ஏன்?

அத்தோடு, அக்கம் பக்கத்தார் வீட்டுக்கு வருகிறவர் கள்கூட, அக்கம் பக்கத்தார் ஆவார்களா என்றொரு சந்தேகமும், சௌமினிக்கு வந்தது.



ஆனாலும், அது பற்றி... எதைப் பற்றியுமே தமக்கை யிடம் விவாதிக்க மனமின்றி, ''சரிக்கா...'' என்று ஒப்பி னாள் தங்கை.

ஆனந்தனிடம் காலை உணவைக் கொடுத்துவிட்டு, குணசீலன் திரும்பி வந்து, அவனது வேலையைப் பார்க்கப் போனான்.

பெண்கள் இருவருமாக ஆனந்தனின் மதிய உணவு அடங்கிய பாத்திரங்களோடு சென்றபோது வாயில் அருகே தயங்கி, சௌமினியை முதலில் உள்ளே போகச் சொன் னாள் சுரபி.

அதுவும், சௌமினிக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது! தம்பி, தங்கையைப் போல, விழுந்தடித்துக் கொண்டு ஓட மாட்டாள் என்றாலும், அவர்களை முன்னிறுத்தி, அவள் பின்னே செல்வதுமில்லை!

என்னவோ நெஞ்சுக்குள் குறுகுறுத்தபோதும் அதை யும் வெளிக்காட்டாமல், ''என்ன சார், எப்படி இருக் கிறீர்கள்?'' என்று கேட்டவாறு உள்ளே சென்றாள் அவள்.

''உங்கள் மூவரின் உதவியால், எவ்வளவோ, சுகம்!'' என்றவாறே, தலையை நீட்டி வாயிலைப் பார்த்தான் ஆனந்தன்.

கையிலிருந்த பாத்திரங்களை, ஹாலின் ஒரு பகுதியி லேயே இருந்த சாப்பாட்டை மேஜை மேல் வைத்தவாறே, ஆனந்தனின் பார்வையைத் தொடர்ந்த சௌமினி, இப்போது ரொம்பவே திகைத்துப் போனாள்.

கன்னங்களில் இளம் சிவப்பும், உதட்டோரம் புன்னகையு மாக மென்னடை நடந்து உள்ளே வருவது அவளுடைய தமக்கை சுரபியேதானா?

ஆஹா, தேவதை மாதிரி என்ன அழகு அவளுடைய அக்கா!

பிரமித்துப்போய் சௌமினி பார்த்துக் கொண்டிருக்கும் போதே, ''தேவதை மாதிரி வந்து உதவியதற்கு மிக்க நன்றி!'' என்றான் ஆனந்தன்.

தேவதை! அவனுக்கும் அப்படியே தோன்றியதா?

ஆனால், தோற்றத்தில் மட்டுமா, சுரபி தேவதை? அக்காவின் பரிவும் பாசமும் இல்லாமல் போயிருந்தால், அவளும் குணாவும் என்ன ஆகியிருப்பார்கள்? இந்தத் தேவதைக்குத் தகுதியான ஒரு நல்ல வாழ்வு அமைய வேண்டுமே!

தம்பி, தங்கைக்காக அவள் தியாகம் செய்வதை விடவும் உயர்வான வாழ்வு!

சௌமியின் எண்ணங்கள் ஓடும்போதே, சுரபி உள்ளே வந்து, ''இப்போது உடம்பு கொஞ்சமேனும் திடமாகத் தெரிகிறதா? அல்லது, ஹார்லிக்ஸ், வீவா மாதிரி ஏதேனும் வாங்கி வரச் சொல்லவா?'' என்று கேட்டாள்.

''அந்தப் பூண்டுக் கஞ்சிக்கு மேலாக வேறு என்ன இருக்கக்கூடும்? இப்போதே, ஸ்கிப்பிங் பண்ணலாம் போல இருக்கிறது! ஆனால் அலுப்புப் படுத்திக் கொள்ளக் கூடாது என்று டாக்டர் சொன்னதால், சும்மா இருக்கிறேன்'' என்றான் ஆனந்தன்.

''ஆமாம், அது முக்கியம். டாக்டர் கூட, நீங்கள் ஓய்வு எடுத்துக் கொண்டாலே, சீக்கிரமாக நன்றாகி விடும் என்றார். உங்களுக்கு மதியச் சாப்பாடு, ரசம், சாதம், செல்லோவில் இருக்கிறது. அப்பளமும். வேறு ஏதாவது உதவி தேவை என்றால், எங்கள் செகரட்டரியின் செல்



எண் எழுதி வைக்கிறேன். அவர் மூலமாக, வாட்ச் மேனைக் கூப்பிட்டுச் செய்யச் சொல்லுங்கள்...''

''அப்படியானால் நீங்கள்...'' என்று ஒரு திகைப்புடன் குறுக்கிட்ட ஆனந்தன். ஏதோ நினைவு வந்தவனாகப் பாதி வாக்கியத்திலேயே நிறுத்தி நெற்றியில் தட்டிக் கொண டான். ''சாரிம்மா, நீ வேலைக்குப் போக வேண்டுமில் லையா? டாக்டர் சொன்னார். வேறு பேச்சில் மறக்குமுன், இதையும் சொல்லி விடுகிறேன். டாக்டரை அனுப்பியது உட்பட, நீங்கள் மூவருமாக, எனக்குச் செய்திருக்கும் உதவிகள் அத்தனைக்கும் ரொம்ப ரொம்ப நன்றி! இது வெறும் வார்த்தைகள் மட்டுமல்ல, மனதாரச் சொல்வது!'' என்றான்.

குரலில் உண்மை தெரிந்தது!

சுரபி ஏதோ சொல்ல வாயெடுத்துவிட்டு, அடக்கிக் கொண்டாள்.

ஆனால் சௌமினி கேலியாக நோக்கி, ''மனதாரச் சொல்வது என்கிறீர்கள். ஆனால் 'மறக்கு முன்' என்றும் சொல்லுகிறீர்களே! முரண்பாடாக இல்லை?'' என்று கேட்டாள்.

''நிச்சயமாக முரண்பாடுதான்'' என்று ஆனந்தனும் ஒத்துக் கொண்டான். சுரபியை ஒரு தரம் பார்த்து விட்டு, மேலே அவனே தொடர்ந்து, ''ஆனால் உங்களைப் பார்க் கையில் மனதில் அன்னியராகவே தோன்ற மாட்டேன் என்கிறது! யாரோ, ரொம்பவும் சொந்தம் போலவே உணர்வதால், நன்றி சொல்லும் எண்ணமே வருவ தில்லை! அதனால்தான், கட்டாயமாக ஞாபகப்படுத்திக் கொண்டு, சொன்னேன்'' என்று விளக்கினான்.

அவனது விளக்கம், சுரபிக்குப் பிடித்தது போலும், புன்னகை செய்து ''அதற்கென்ன? ஏதோ தூரத்து உற வாகவே எண்ணிக் கொள்ளுங்கள். சுற்றிச் சுற்றிப் பார்த் தால், நாம் எல்லோருமே ஆதாம், ஏவாளின் பிள்ளை களின் வழி வந்தவர்கள் என்றுதானே, பைபிள் சொல்லு கிறது. ஏதேனும் ரத்தத் தொடர்பு இருக்கத்தான் செய்யும்!'' என்றாள் ஒப்புதலாக.

''ஐயோ, வேண்டாம்க்கா!'' என்று பதறினாள் சௌமினி.

இருவரும் திகைத்து நோக்குகையில், ''நமக்கு அம்மா வைத்துவிட்டுப் போயிருப்பதே, இந்த ஒரு வீடுதான். ரத்தத் தொடர்பு என்று, ஆனந்தன் சார் அதிலேயும் பங் குக்கு வந்து விட்டால்? இவர், மூர்த்தி அண்ணன் வீட்டு விருந்தாளியாகவே, இருந்து சும்மா நாமும் உதவிய தாகவே இருக்கட்டும்!'' என்று அவள் பயந்தது போலக் கூற, எல்லோருமாக நகைத்தனர்.

''எங்கள் வீட்டு இரட்டையர் இருவருமே பொல்லாத வால்கள்! வாய் கொடுத்து மீளவே முடியாது!'' என்றாள் பெருமைக் கலந்த குரலில், சுரபி.

''போக்கா! எங்களை வெற்று லொடலொடாக்கள் என்று, சார் நினைக்கப் போகிறார்!'' என்று குறைபட்டாள் தங்கை.

''நிச்சயமாக மாட்டேன். ஏனென்றால், எங்கள் வீட்டிலும் இதே போல ஒரு லொட லொடா இருக்கிறது! அவன் வாயையும் லேசில் அடைக்க முடியாது! அம மாவே, அவனிடம் பதில் சொல்ல முடியாமல், கடைசி யில் தலையாட்டி விடுவார்கள், தெரியுமா?'' என்றான் ஆனந்தன், சுரபியின் பெருமைக் குரலிலேயே!



''அம்மாவை அடக்குவது பெருமை என்பதானால், உங்கள் அம்மா சற்று அதிகம் பேசுவார்கள் போலத் தெரிகிறதே!''

''ஷ், மின்னி! பெரியவர்கள் பற்றி, இப்படியெல்லாம் பேசக் கூடாதும்மா!'' என்று தங்கையை லேசாக அதட்டி னாள் சுரபி.

''இருக்கட்டும்.. இருக்கட்டும்! சின்னப் பெண்ணைப் போய், அதட்டாதீர்கள்! எவ்வளவு கெட்டிக்காரத்தனமாக, ஒரு வார்த்தையில் விஷயத்தைப் பிடித்து விட்டாள், பார்! ஆனால், மின்னி, எங்கள் அம்மா அதிகம் பேசுவதாகச் சொல்ல முடியாதும்மா... ஆனாலும் அவர்களைப் பேச்சில் ஜெயிப்பது கடினம். அங்கே மொத்தத் தொழிலை அம்மாவே பார்ப்பதால், அப்படி இருந்தால்தான் சமாளிக்க முடியும். ஆனால், என் தம்பி மட்டும் அம்மாவிடம் பேச வில்லையென்றால், நான் இந்தப் பயணம், சென்னைக்கு வந்திருக்கவே மாட்டேன்!'' என்று ஆனந்தன் வெளிப் படையாகப் பேசியது, சௌமினிக்கு வியப்பாகவும், கூடவே, ஓர் இதமாகவும் இருந்தது!

''ஆனால், வந்து காய்ச்சலில் மாட்டிக் கொண்டீர்களே!'' என்று வருந்தினாள் சுரபி.

''அதற்கென்ன? காய்ச்சல் வராமல், உங்கள் அறிமுகம் கிடைத்திருக்குமா? சொல்லப் போனால், அதற்காக இந்தக் காய்ச்சலுக்கு நன்றிதான் கூற வேண்டும்!'' என்றான் ஆனந்தன்.

இப்போதும், அவன் பேச்சில் உண்மையே தொனித் தது!

ஆனால், முன் நாள் இரவில், ஆனந்தன் ஆ, ஊ என்று உறுமி, முனகியதை நினைக்கையில், இது ரொம்ப அதிகப்படியாகவே, சௌமினிக்குத் தோன்றியது!

''ஆனாலும் அறிமுகக் காய்ச்சல், அத்தோடேயே நிற்கட்டும், சார். எதற்காகவும், காய்ச்சலை இன்னமும் அதிகமாக ஏற்றிக் கொண்டு விடாதீர்கள்! அப்புறம் தனியே, கிடந்து, துன்புற வேண்டியிருக்கும்'' என்று எச்சரித்தாள் சின்னவள்.

வேடிக்கை பேச்சுதான் என்றாலும், அது எச்சரிக்கையே!

எச்சரிக்கை, ஆனந்தனுக்கு மட்டுமல்ல!

# 4



மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக, அன்னையை இழந்த துக்கத்தை ஒதுக்கி, எதிர்காலம் பற்றி மூவருமாகத் திட்டமிடும்போது, அம்மா போல, எல்லோருக்கும் உதவி செய்ய, நல்லவர்கள் என்ற பெயரை எடுக்க வேண்டும் என்றொரு கொள்கை வகுத்தார்கள். அத்துடனேயே, சிறு வயதுப் பெண்கள் இருவர் இருப்பதால், ஆண்களிடம் அதிகம் பேச்சு வைத்துக் கொள்ளக் கூடாது என்றும் முடிவெடுத்திருந்தனர்.

கறுப்பாக வாந்தி எடுத்ததை காக்காய், காக்காயாக வாந்தி எடுத்ததாகக் கூறுகிற உலகம் இது! இதில்தான் நாமும் வாழ்ந்தாக வேண்டும்! அதுவும், பெயரளவுக்குக் கூட எந்தப் பெரியவர்களின் பாதுகாப்பும் இல்லாமல்...!



தங்களுக்குத் தாங்களே வகுத்துக் கொண்ட அந்த விதிமுறைகள், இன்று வரை கடைப்பிடிக்கப்பட்டு வந்தன!

என்னவோ, அந்த நேரத்தில் சுரபிக்கு அதை நினைவுபடுத்த வேண்டுமோ என்று சௌமினிக்குத் தோன்ற, வேறு எதையும் யோசியாமல், குறிப்பாகக் கூறியும் விட்டாள்! சொன்ன பிறகோ, அவளுக்கு உள்ளே உதைத்தது!

எப்போதுமே சுரபிக்கு எதையும் சொல்லி நினைவுபடுத்தத் தேவையிராது! அத்தோடு, அக்காவுக்கே எடுத்துச் சொல்லும் அளவு, சௌமினி என்ன பெரிய ஆள்?

அக்கா வருத்தப்படவோ, அன்றி அதிர்ந்தோ போகக் கூடும் என்று எண்ணி, அதை எப்படி எதிர்கொள்வது என்று தயக்கத்துடன் தமக்கையைப் பார்த்த சௌமினிதான் அப்போதைக்கு திகைத்துப் போனாள்.

தங்கையின் பேச்சைத் தனக்கான நினைவூட்டலாக, சுரபி எடுத்துக் கொள்ளவே இல்லை!

அதற்குப் பதிலாக, ஆனந்தனிடம் அதிகக் காய்ச்சலை இழுத்துக் கொள்ள வேண்டாம்! என்று தங்கை எச்சரித்ததுதான் அவளைக் கலங்கடித்தது போலும்!

அதாவது, ஆனந்தன் மறுபடியும் உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்வானோ என்ற அச்சம்தான் அவளுக்கு! அது மட்டும்தான் என்பது, அவளது பேச்சிலேயே தெரிந்தது!

கவலையோடு ஆனந்தனிடம் ஓடிப்போய் ''ஆமாம் ஆனந்தன், எவ்வளவுதான் வேலை இருந்தாலும், அதைச்

சற்று தாமதமாகவே செய்து கொள்ளலாம்! உடம்பு பலப் படுமுன், வேலை செய்து, ஆரோக்கியத்தை அதிகமாகக் கொடுத்துக் கொள்ள வேண்டாம்'' என்றாள் கெஞ்சுதலாக.

''இவ்வளவு அழகான பெண், இப்படிக் கனிவும் கரிசனமுமாகக் கூறும்போது, அதை நான் என்ன, மகா மகா முனிவர்கள் கூட மீற மாட்டார்களே!'' என்று கிண்ட லாகவே என்றாலும், அவளது ஆலோசனையை ஏற்பதா கவே ஆனந்தன் தெரிவிக்கவும், சுரபியின் முகம் மலர்ந்து பூரித்தது!

இந்த மகிழ்ச்சியில், சௌமினியின் எச்சரிக்கை என்ன, சௌமினி அங்கே இருப்பதே மூத்தவளுக்கு நினை விருக்கிறதோ, என்னவோ?

என்னவோ, அந்தத் தங்கைக்கு, நிலைமை சரியாகப் படவில்லை!

எனவே, அதற்குத் தக ''அக்கா என்னதான் வாட்ச்மேன் விவரம் சொன்னாலும், அதை நாம் மூர்த்தி அண்ண னிடம் சரி பார்த்துக் கொள்ள வேண்டும்தானே? இந்த ஆனந்தன் சார் பக்காத் திருடனாக இருந்து, யாரும் இல்லாத நேரத்தில் வீட்டைத் துடைத்து வைத்துவிட்டுப் போய் விட்டால் என்ன செய்வது?'' என்று தமக்கையிடம் மெல்லக் கேட்டுப் பார்த்தாள்.

ஆனந்தனைப் பற்றி, ஆராயும் எண்ணம், சுரபிக்கு வரவேண்டும் என்பதுதான் அந்தத் தங்கையின் குறிக் கோள்.

சுரபி விழி விரித்துப் பார்க்கவும், முயற்சியில் வெற்றி பெற்று விட்டதாகக் கருதி, ''கூட இருந்து உபசாரம் செய்தீர்களா என்று போலீஸ் நம் மீது பாயவும் வாய்ப்பு



இருக்கிறதே என்று, அதுதான் எனக்குப் பயம்!'' என்று, கதையை மேலும் வளர்த்தாள்.

அக்காவும் தம்பியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''அவ்வப்போது, இதற்கு மேல் மாடி காலி என்று நான் சொன்னால், என்றைக்காவது நீ ஒத்துக் கொண்டிருக் கிறாயாக்கா? இதற்கு மேல் என்ன ஆதாரம் வேண்டும், சொல்லு?'' என்று கண் சிமிட்டினான் குணசீலன்.

முறுவலித்து, ''எப்போதும் புத்திசாலியாகப் பேசுவாய்! இப்போதென்ன, மின்னி?'' என்று சுரபி தங்கையிடம் கேட்டாள்.

''அது... எதற்கும் எச்சரிக்கையாக இருப்பது, அவசியம் தானேக்கா? முன்னேப் பின்னே தெரியாதவர் ஆயிற்றே என்றுதான்...'' என்றவள், தமக்கை விசித்திரமாகவே பார்க்கவும், ''எனக்கும் ஆனந்தன் சாரைப் பிடித்துதான் இருக்கிறது! ஆனாலும் ஆண்டுக் கணக்கில் சாதுவாக வேஷம் போட்டு வாழ்ந்துவிட்டு, என்னென்னவோ பயங்கரவாதம் பண்ணுகிறார்கள் என்று பத்திரிகைகளில் படிக்கிறோமே! யாரை நம்புவது என்றே தெரியவில்லை, பார்! அ... அந்தப் பயம்தான் அக்கா!'' என்று சமாளித்தாள் அவள்.

''பயமே வேண்டாம். ஆனந்தன் சாரை நிச்சயமாக நம்பலாம். நேற்று இரவிலேயே, அவருக்கு வீட்டில் இருப்பது வசதியாக இருக்கிறதா என்று கேட்க, மூர்த்தி அண்ணன் போன் செய்தார். காய்ச்சல் என்றதும், கொஞ்சம் பார்த்துக் கொள் என்று என்னிடமே கேட்டுக் கொண்டார். ஆனால் மூர்த்தி அண்ணன் பேசுமுன்பாகவே,

எனக்கு ஆனந்தன் சாரிடம் நம்பிக்கைதான். அவர் முகத்தைப் பார்த்தால் தெரியவில்லை?'' என்று கேட்டான் குணா.

'ஆமாம்! இவன் பெரிய மன இயல் வல்லுனர்! முகத்தைப் பார்த்தாலே, மனதைப் படித்துவிடுவான். சரியான பேக்கு...' என்று உள்ளூரப் பொருமியபோதும், சௌமினியும் அவனோடு கூடச் சேர்ந்து அவன் பேச்சுக்கு ஆமாம் போடத்தான் வேண்டியிருந்தது!

ஓர் இருபது வயது ஆண் மகனைவிட, இருபது வயதுப் பெண்ணுக்கு மன முதிர்ச்சி அதிகம். அதனாலேயே, தமக்கையிடம் ஏற்பட்டிருந்த சிறு மாற்றத்தை, சௌமினியால் உடனேயே உணர முடிந்தது!

அதன் காரணம், ஆனந்தனே என்பதையும் புரிந்து கொள்ள முடிந்தது!

உண்மையில் அவளுக்குமே அந்த ஆனந்தனிடம் நல்ல அபிப்பிராயம்தான்.

ஆனால், அவனைப் பற்றிய ஐயத்தை... ஐயம் என்று கூடச் சொல்ல முடியாது.

ஒரு குழப்பத்தையும், அதன் மூலமாக ஒரு தயக்கத்தையும் சுரபிக்கு ஏற்படுத்துவதே தேவையோ என்று அவளுக்குத் தோன்றியிருந்தது!

காலமெல்லாம், சுரபி தனக்காகவும், தம்பிக்காகவும் உழைத்துக் கொட்ட வேண்டும் என்ற எண்ணம், அவளுக்கு குணாவுக்கும் கூட நிச்சயமாகக் கிடையாது! இந்தக் கடைசி ஆண்டுப் படிப்பை முடித்ததும், 'காம்பஸ் செலக்ஷனிலேயே எப்படியாவது தேர்வாகி, நல்ல வேலையில் சேர்ந்து, அக்காவின் பொறுப்பைத் தாங்கள்



எடுத்துக் கொள்ள வேண்டும். பணம் சேர்த்து, அவளுக்குத் திருமணம் செய்த பிறகுதான் வேறு எதுவுமே என்று இரட்டையர் இருவருமாகத் தனிமையில் பேசிக் கொள்வார்கள்.

இந்த ஆனந்தன், தோற்றத்தில் தமக்கைக்குப் பொருத்தமாகவே இருந்தான்.

ஆனால், மற்றபடி?

இந்தச் சென்னைப் பயணத்தையே தம்பியின் உபயம் என்று அவனே சொன்னானே!

பெற்ற தாயிடம் பேசி, பயணத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியாதவன், இந்தப் பெண் வேண்டாம் என்று தாயார் சொன்னால், மீறி மணப்பானா? பார்த்தால், பெரிய இடத்து மனிதனாகவும் தெரிகிறான்!

அக்கா வீணாக ஆசையை வளர்த்துக் கொண்டு, அப்புறம் வருத்தப்படக் கூடாதே என்கிற கவலை!

ஆசை, காதல் என்கிற நிலைக்கு, சுரபி போய் விடவில்லைதான்.. ஆனால், ஒரு சலனம் முளை விட்டிருக்கிறதோ என்ற சந்தேகம் சௌமினிக்கு!

சற்று யோசித்தால், இது புரிந்து, சுரபியே ஒதுங்கி விடுவாள். கிட்டத்தட்ட நிச்சயமான திருமணத்தையே வேண்டாம் எனவில்லையா? அத்தோடு ஒப்பிடும்போது, இது தூசுதானே?

'ப்பூ' என்று ஊதினால், கண் காணாத இடத்தில் போய் விழுகிற சிறுதுரும்பு!

இதுவே, ஒருவன் வீட்டிலிருந்து இவ்வளவு தூரம் வந்து, தனிமையில் காய்ச்சலில் கிடப்பதால், ஏற்பட்ட பரிதாபமாகக் கூட இருக்கலாம்!

சற்று யோசிப்பது மட்டும்தான், சுரபி செய்ய வேண்டியது!

அந்த யோசனையைத் தூண்டி விட முயன்று தோற்றவளுக்குக் கூடப் பிறந்தவன் மீதுதான் எரிச்சல் வந்தது!

இவன் என்ன, இன்னமும் புரியாத, வெறும் பொடியனாக இருக்கிறானே என்று!

நல்லவேளையாகக் காய்ச்சல் சீக்கிரமாகக் குணமாகி விட்டது! இனிமேல், சீக்கிரமே வேலையைப் பார்ப்பான். வேலை முடிந்தால், கிளம்பிப் போய்விடுவான்.

கண்ணால் பாராதது, கருத்தில் நிலைக்காதது என்பதற்கு இணங்க, ஆனந்தன், அவனது ஊருக்குப் போய் விட்டால், அப்புறம் இங்கே பழையபடி வாழ்வுதானே?

அதன் பிறகு, சின்னவர்கள் இருவரும் திட்டம் போட்டபடி, எல்லாம் நல்லபடியாக நடக்கும்!

கிட்டத்தட்ட சௌமினி எண்ணமிட்டது போலவே தான் எல்லாம் நடந்தது! நடந்த மாதிரிதான் முதலில் தோன்றியது!

மறுநாளே, ஆனந்தனுக்கு உடம்பு நன்கு குணமாகி, அவன், தன் வேலையைப் பார்க்கப் போனான்.

பெரும்பாலும், பகல் முழுவதிலுமே வேலை, வேலை என்று அவன் வெளியேதான் இருந்தான்.

தன்னை அதிகம் நம்பாத தாயாரிடம், வேலையை நல்ல படியாகவும், விரைவாகவும் முடித்துக் காட்டும் பிடிவாதத்தோடு, ஆனந்தன் முனைந்து செயல்பட்டான்.



அலுவலகங்களில் பார்த்தது போக, முக்கியமான ஆட்களை அவரவர் வீட்டிலும் பார்த்து வேலை முடிய ஏற்பாடு செய்தான்.

அந்த வகையில், எண்ணியதைக் காட்டிலும் சீக்கிரமாகவே வேலை முடிந்து, அவனது 'செக்'கைக்கும் கிடைத்தது.

அப்பாடி, இனிச் சீக்கிரமாகக் கிளம்பி விடுவான் என்று சௌமினி நிம்மதியடைந்தபோது, ஒரு நாள், தம்பி தங்கை உண்டு. படித்து முடித்துப் படுக்கச் செல்லுகிற சமயம், சுரபி அவர்களை ஹாலுக்கு அழைத்து உட்காரச் சொன்னாள்.

அன்னை இறந்த பிறகு, இப்படித்தான் உட்கார்ந்து பேசினார்கள்!

அப்போது, அந்த திருமணத்தை நிறுத்திவிட்ட விவரம், சுரபி சொன்னாள், இப்போது?

வயிற்றுக்குள் பட்டாம்பூச்சி பறக்க, சௌமினி பார்க்க, பெரியவள் இன்றும் ஒரு விவரம் சொன்னாள்!

சின்னவள், அஞ்சிய உள்ளூர எதிர்பார்த்த விவரமே!

சுரபியும் ஆனந்தனும் காதலிக்கிறார்கள். திருமணம் செய்து கொள்வதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். அதுவும், உடனேயே!

''ஹையா, சூப்பர்!'' என்று கை கொட்டினான் குணசீலன், ''நாதசுரம், மேளம், புதுத்துணி, பலகாரம்! எவ்வளவு கொண்டாட்டமாக இருக்கும்!''

அப்போதும், தன் இரட்டையை விட சில பல ஆண்டுகள் மூத்தவளாக உணர்ந்தாள் சௌமினி.

சகோதரன் துள்ளி முடிக்கும் வரை பொறுத்திருந்து, ''வெறும் ஒரே ஒரு வாரம், ஏழே நாட்களுக்குள்ளாகவா, அக்கா?'' என்று அமைதியாகக் கேட்டாள் அவள்.

முறுவலித்து, ''சீதைக்கும் ராமனுக்கும் ஒரு வினாடி தானே தேவைப்பட்டதாம்'' என்றாள் சுரபி.

''அப்படி மணந்துவிட்டு, யாரோ ஏதோ சொன்னார்கள் என்று மனைவியைக் காட்டுக்கு அனுப்பிய ராமன் கதையெல்லாம் இப்போது வேண்டாம், அக்கா! ஆனந்தன் சாரைப் பற்றி, உனக்கு நிச்சயம்தானா?'' என்று கண்டிப்பான குரலில் கேட்டாள் தங்கை.

''நூறு சதவீதம்!'' என்றாள் சுரபி.

''ஓ! சீக்கிரமே திருமணம் என்றாயே, அவர்கள் வீட்டில் ஒத்துக் கொண்டு விட்டார்களா? எல்லாரும்?''

மறுப்பாய் தலையசைத்தாள் பெரியவள். தொடர்ந்து, முழு விவரமும் வந்தது!

ஆனந்தனுடைய அன்னை, நிச்சயமாக இதை ஒப்பப் போவதில்லையாம்! திருமணத்தைத் தடுப்பதற்கு, இயன்றவரை முயற்சி நடக்குமாம். பெற்றவள் ஒரேடியாக மறுத்து, அந்தத் தாயாரை மீறிச் செய்ததாக ஏன் இருக்க வேண்டும்? திருமணத்தை முடித்துக் கொண்டு போனால் எப்படியும் ஒத்துக் கொண்டு தானே ஆக வேண்டும்? கொஞ்சம் கோபம் வரக்கூடும். கொஞ்சமென்ன? நிறையவே வரத்தான் செய்யும். ஆனால் தம்பி கெட்டிக்காரன். அவன் கட்டாயம் புரிந்து கொள்வான். அவனை வைத்துத் தாயாரைச் சரிக்கட்டி விடலாம்!

இரண்டு வாரத்தில் முடியக் கூடிய வேலை! ஏழே நாட்களில் முடித்தாயிற்று!



இன்னும் மூன்று நாட்களில், ஒரு நல்ல முகூர்த்த நாள் இருக்கிறது! அன்று திருமணத்தை முடித்துக் கொண்டு, அப்புறம் எல்லோருமாக, ஆனந்தனின் வீட்டுக்குப் போகலாம்! அங்கே நடப்பதை, உரிய விதத்தில் எதிர்கொள்ளலாம்!

இது, ஆனந்தனின் திட்டம். சுரபியும் சந்தோஷமாகத் தலையாட்டி விட்டாள்.

''மூன்று நாட்களில் கல்யாணமா? நான் ஆனந்தன் சாரைப் பார்த்து வாழ்த்துச் சொல்லிவிட்டு வருகிறேன். தூங்கியிருக்க மாட்டாரில்லையா?'' என்று எழுந்து ஓடினான் குணா.

புன்னகையோடு தம்பியைப் பார்த்த தமக்கையின் முகத்தைக் கவனித்த சௌமினிக்கு நெஞ்சு கனத்தது!

தாயற்ற பெண்! மாமியாரின் பாசமும் கிடைக்காது என்பது நிச்சயமாகி விட்டது! இந்த விதமாகக் குடும்பத்துக்குள் வருகிறவளிடம் அன்பு காட்டுவது கடினம் தான்.

தம்பி என்று ஒருவனை, ஆனந்தன் சார் இவ்வளவு நம்புகிறாரே! அவனும் தாயின் பக்கம் சாய்ந்து விட்டால்?

அங்கே தொழிலிலும், வாழ்விலும் என்னென்ன மாதிரிப் பிரச்சினைகள் வரக்கூடுமோ? தனக்கு லாபம் என்றால், அவனும் மாறத்தானே செய்வான்?

எப்படியுமே, அங்கே யாருமேதான், சுரபியை நல்லபடியாக நடத்தப் போவதில்லை! தமக்கைக்கு வேதனையாகிவிடுமோ என்று, அந்தத் தங்கையின் மனம் துடித்தது.

''அக்கா, அங்கே உன்னைத் தப்பாக எண்ண மாட்டார்களா? தனியாக வந்தவனைச் சாப்பாடெல்லாம்

கொடுத்து மயக்கிப் பிடித்ததாகப் பழி சொல்ல மாட்டார்களா?'' என்று மென்மையாகச் சொல்லிப் பார்த்தாள்.

ஆனால் சுரபியும் அதையெல்லாம் யோசித்தே இருந்தாள் போல! ''கட்டாயம் சொல்வார்கள்'' என்று உடனே ஒத்துக் கொண்டாள்.

''பி... பின்னே?''

''ஆனால் என்னால் ஆனந்தனை மறக்க முடியாதே!'' என்றாள் தமக்கை.

''மின்னி, நான் அதிகம் ஆசைப்பட்டதில்லை! முன்னே அம்மா விரும்பியது என்றதற்கு மேல், பெரிதாக நினைத்தது இல்லை! அம்மாவுக்குப் பிறகோ, திருமணத்தை நினைத்துப் பார்த்தது கூடக் கிடையாது! ஆனால், இவர் இல்லாவிட்டால், நான் மூச்சு முட்டியே செத்துப் போவேனே, மின்னிம்மா!''

உள்ளே நடுங்கிவிட்டது, தங்கைக்கு!

இவ்வளவு தீவிரமாக உணரும்போது, இப்படித்தான் நடந்தாக வேண்டும்! வேறு வழியே கிடையாதே!

அத்தோடு, ஆனந்தனிடமும் இதே எதிரொலி இல்லாவிட்டால் அவனது உறவுகளை ஒதுக்கி, இந்தத் திருமணம் நடப்பதும் உறுதியாகியிராது!

அங்கே எதிர்ப்பை எதிர்பார்த்துதான் இந்த ஒதுக்கலும் கூட.

எனவே இங்கேயேனும் சிறு உறுத்தல் கூட இல்லாமல் கவனித்துக் கொள்ள வேண்டும்!



சற்றுப் பொறுத்து, குணாவின் கையைப் பிடித்துக் கொண்டு வந்த ஆனந்தனைப் புன்னகையோடு எதிர் கொண்டு, வாழ்த்துக் கூறினாள் சௌமினி.

''இன்னமும் இருவரும் தூங்கப் போகவில்லை என்று, குணா சொன்னான். அதுதான்... யாருக்கும் தொந்திரவாக இராது என்று, சும்மா வந்தேன்'' என்றான் ஆனந்தன்.

''இனி, இது உங்கள் வீடும்தான். ஆனந்தன் சார். அதனால், நீங்கள் எப்போது வேண்டுமானாலும் இங்கே வரலாம்'' என்றாள் சௌமினி.

''ஆனால், ஆனந்தன் சார் என்று சொல்லக் கூடாதாம், மின்னி! அத்தானாம்! அங்கேயே, ஆ... இல்லை, அத்தான் சொன்னார்.''

''ஓ!... ஆ... ஆமாம்தானே? உறவுக்காரர் ஆகிறாரே! உறவு முறை சொல்லித்தான் அழைக்க வேண்டும்! உட்காருங்கள், அத்தான். ப்ரிட்ஜில் பால் இருக்கிறது. சூடு பண்ணி எடுத்து வருகிறேன். சர்க்கரை கலந்து, இனிப்பாக அருந்தலாம்'' என்று உள்ளே சென்றாள்.

ஆனால் சௌமினி கொண்டு வந்தது, பாயசமே! கொஞ்சம் சாதத்தை மிக்சியில் அடித்து கலந்து ஏலக்காய் பொடித்துப் போட்டு, குங்குமப்பூ, கரைத்து விட்டுப் பாயசமாக அவள் கொணர்ந்ததைப் பார்க்கையில், சுரபிக்கு கண்ணீரே வந்தது.

முதலில் தங்கை தட்டிப் பேசியதெல்லாம், அவளது மனதின் உறுதியைத் தெரிந்து கொள்வதற்காகவே என்று அந்தத் தமக்கைக்கு அப்போது தோன்றியது!

ஆனந்தனும் சுரபியும் யோசித்துத் திட்டமிட்டபடி, அவர்களது திருமணம் நல்லபடியாக நிறைவேறியது!

அக்காவின் எதிர்காலம் என்பதற்காக மட்டுமின்றிச் சும்மாவே ஆனந்தனைச் சின்னவர்கள் இருவருக்குமே பிடித்துப் போயிற்று! அந்த அளவுக்கு அவன், அவர்களிடமும் அன்பு காட்டினான்.

அந்த வார முடிவில், எல்லோரையும் ஆனந்தன் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

''சீக்கிரமே, எல்லாம் சரியாகிவிடும்'' என்று ஆனந்தன் திருப்பித் திருப்பிச் சொல்லச் சொல்ல மற்றவர்களின் உள்ளூர இருந்த உதைப்பு, மெல்ல மெல்ல மறையலாயிற்று!

சுழன்று சுழன்று மலைப்பாதையின் இருபுறமும் கண்ணுக்கெட்டியவரை, காணப்பட்ட இயற்கை அழகின் வலிமை, அப்படி! பயணம் செய்தவர்களின் ரசிக மன நிலையும் அப்படியே!

''இங்கிருந்து நம் குடும்பத்துக்குச் சொந்தமான பிரதேசம் தொடங்குகிறது'' என்று ஆனந்தன், வெளிப்புறம் கை நீட்டிப் பரவலாகக் காட்டிக் கூறினான்.

'நம் குடும்பம்' என்று ஆனந்தன் சொன்ன விதம், சின்னவர்கள் இருவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியைத் தர, அந்த அழகான மலைச்சாரலில், பறந்த காக்காய் குருவியைக் கூட அதிசயத்துடன் ரசித்துப் பார்த்து மகிழ்ந்தனர்.

சுற்றிச் சுற்றி மலைப் பாதையில் செல்லும்போது, தூரத்தில் சிறு கோயில் ஒன்று தெரிந்தது! கோயிலில் குடிகொண்டுள்ள அம்மன் மிகவும் சக்தியுள்ள தெய்வம் என்று ஆனந்தன் விளக்கம் சொல்ல, சுரபி கண் மூடி வேண்டிக் கொண்டாள்.



அழகான பாப்பா வேண்டும் என்று வேண்டிக் கொண்டாயா என்று தமக்கையைக் கேலி செய்தார்கள் இரட்டையர்கள்.

''அப்படித்தானா?'' என்று ஆனந்தன் சந்தோஷமாகச் சிரித்தான்.

ஆனால், இந்த மனநிலையை அடியோடு மாற்றும் விதமாக ஆனந்தனுடைய தாயார் வரலட்சுமி.

வீட்டின் சுற்று மதில் கேட்டைக் கூடத் திறக்கவில்லை!

# 5



ஆனந்தனுடைய தாயாரான வரலட்சுமி அம்மாளின் கோபம் மகன் எதிர்பார்த்ததுதான்.

திருமணத்துக்கு மறுப்பு வரும் எனும்போதே, மறுப்பதற்கு வழியில்லாமல் திருமணத்தை முடித்தால், கோபம் வரும் என்பதும், எதிர்பார்க்கப்பட வேண்டியதே!

கோபம் அப்படி மகன் மணந்து கொண்ட பெண் மீது ஆத்திரம், அவளது குடும்பத்தினரிடம் வெறுப்பு எல்லாமே, அந்த எதிர்பார்ப்புப் பட்டியலில் இடம் பெற்றவைதான்.

ஆனால், சுரபியின் அமைதியும் அழகுமான முகத்தைப் பார்க்கும்போதே, அம்மாவின் கோபம் பாதி குறைந்து போகும், அப்படியே கோபத்தை இழுத்துப் பிடித்துக்

கொண்டே இருந்தாலும், அவளிடம் நேருக்கு நேரே காட்ட, அன்னைக்கு மனம் வராது. பார்க்கப் பார்க்க பாசமும் வந்துவிடும் என்று ஆனந்தன் எண்ணியிருந்தான்.

எப்படியும் ஒரு சில நாட்களிலேயே, பெற்றோரற்ற இந்தக் குடும்பத்தின் நடத்தையைப் பார்த்துத் தாயின் மனம் கட்டாயம் இளகிவிடும் என்பது அவனது கணிப்பு.

ஒரு பெண் குழந்தைக்கு ஏங்கியவள் தாய் என்பதும், ஆனந்தனுக்கு நன்றாகத் தெரியும். அழகும் குணமுமாக இருக்கும் இந்த இரு பெண்களிடம், அவளது கோபம் நீடிக்காது, என்றும் நினைத்தான்!

ஆனால், அவர்களைக் கண்ணால் பார்க்கவே மறுத்து, இப்படி கேட்டை மூடி வைக்கக் கூடும் என்று அவன் கனவிலும் கருதவில்லை!

இப்போது வேலையாளைக் கூப்பிட்டுத் திறக்கச் சொல்லி, அவன் எஜமானியின் சொல்படிப் பூட்டியிருப்பதாகக் கூறிக் கதவைத் திறக்க மறுத்தால், ரொம்பவே கேவலமாகிப் போகும்!

தம்பிக்கு போன் செய்து பேச எண்ணி, ஆனந்தன் செல்லை எடுக்கும்போதே, பின்னோடு இன்னொரு கார் வந்து நின்று, அதிலிருந்து சதானந்தன் இறங்கி வந்தான்.

''இங்கே நின்று பேச வேண்டாம், அண்ணா. உன் பொறுப்பில் இருக்கிற எஸ்டேட் பக்கம் இருக்கும் பண்ணை வீட்டுக்குப் போகலாம். அங்கேதான்...'' என்று ஆனந்தன் வந்த காரைக் காட்டி, ''இவர்கள் எல்லோரும் தங்க ஏற்பாடாகி இருக்கிறது'' என்றான் வேகமாக.



''காரில் ஏறு. முதலில் அங்கே போகலாம்'' என்று அவன் வந்த காருக்குத் திரும்பினான்.

''ஆனால், சதா, அது கோடவுனாக அல்லவா...'' என்றவனை இடைமறித்து, ''அதுதான் அங்கே போய்ப் பேசலாம் என்றேனே! என் பின்னோடு வா!'' என்று காரைக் கிளப்பினான் தம்பி.

கார் ஜன்னலோரமாக அமர்ந்து எல்லாம் கேட்ட சௌமினிக்கு, அத்தானை, இந்த அதட்டு அதட்டுகிறானே... இருவரில் அத்தான் ஆனந்தன் அண்ணனா? இந்த சதானந்தன் அண்ணனா என்று, ஆத்திரம் வந்தது.

தாயார், அத்தானிடம் ஒட்ட விடாமல், தம்பியேதான் தடுக்கிறானோ என்று சந்தேகமும் வந்தது! இவன், அம்மாவைச் சரிப்படுத்தி விடுவானாக்கும்!

இருந்திருந்து, இந்த ஆளைப் போய் அத்தான் நம்புகிறாரே!

கார்கள் போய் நின்ற இடம் 'ஆனந்தவனம்' என்ற பெயருடன், பெயருக்கேற்றபடி சுற்றிலும் அழகிய இயற்கைக் காட்சிகளுடன் கண்ணையும், கருத்தையும் கவர்ந்து மகிழ்விப்பதாகவே இருந்தது!

விசித்திரமாக பலவிதமான பூக்கள் வேறு!

''இது, ஆர்க்கிட் என்று நினைக்கிறேன் குணா!'' என்று மரத்தின் மீது படர்ந்திருந்த ஒரு மலர்கொடியைக் காட்டிச் சொன்னாள் சௌமினி.

''ரொம்ப அழகாக இருக்கிறது! ஆனால், வா சாமான் எடுத்து வைக்கப் போவோம்!'' என்று குணா அழைக்க, இருவருமாகக் காரிடம் சென்றார்கள்.

மறுப்பின்றித் தம்பியோடு கூடப் போனபோதும், சௌமினியின் பார்வை, அந்த மலர்க் கொடியிடமே இருந்தது! கொத்துக் கொத்தாக, எவ்வளவு அழகான பூக்கள்!

சுற்றிச் சுற்றிப் பார்க்கையில், சிறு சிறு வேறுபாடு களுடன் எத்தனை விதங்கள்!

காரிலிருந்து சாமான்களை எடுக்கச் சென்றால், "இந்த வேலைகளைச் செய்வதற்கு இங்கே ஆட்கள் இருக் கிறார்கள். உதவி செய்வதாகச் சொல்லிக் கொண்டு, வழியில் நின்று தொல்லை பண்ணாமல் இருந்தால் போதும்!" என்று சிறு எரிச்சலுடன் சதானந்தன் கூறவும், இருவரும் அப்படியே ஒதுங்கிக் கொண்டார்கள்!

சாமான்கள் உள்ளே போகவும், "அவ்வளவுதானேப்பா? காரை ஷெட்டில் நிறுத்திவிட்டு வா" என்று, அந்தப் பணியாளை அனுப்பி வைத்தான்.

"எல்லா சாமானும் வந்து விட்டதா என்று பாருங்கள்" என்று பொதுவாக சதானந்தன் கூற, "ஆமாம் எல்லோரும் உள்ளே போகலாம்" என்று ஆனந்தன் அழைத்தான்.

வீடு அவசரமாகக் கழுவிச் சுத்தம் செய்யப்பட்டிருந்தது, தெரிந்தது.

ஈரம் போகத் துடைத்து, முடித்துக் கொண்டிருந்தான் ஒரு பணியாள். அவனை "மாதையா!" என்று அழைத்து, எல்லோருமே வந்து விட்டார்கள், பார். உன் மனைவி யுடைய தங்கை இங்கே வேலை செய்ய வருவாள் என் றாயே. நீ உடனே போய் அவளை அழைத்து வா. இன்னும் சுற்று வேலைக்கு, சன்னாசி தன் பேத்தியை அனுப்புவதாகச் சொன்னான். அவனிடமும் ஒரு வார்த்தை



நினைவு படுத்திவிட்டு, அப்புறமாகப் போய், மூட்டை களை அடுக்கு" என்று பணிந்தான்.

"அய்யா, என் கொளுந்தியா மாராயி முந்தியே வந்து விட்டாளுங்க. இப்ப, அடுப்படியைத் தொடைத்துக்கிட்டு இருக்கிறாளுங்க" என்று அந்த மாதையன் சொல்லவும், சுரபி அவன் அடுப்படி என்று அவன் சைகையால் காட்டிய வீட்டின் பின் பகுதிக்குச் செல்லலானாள்.

அண்ணன் தம்பிக்கு இடையே நிற்க விரும்பாமல், இரட்டையரும், தமக்கையை வால் பிடித்துக் கொண்டு பின்னே சென்றனர்.

தோட்டம் என்று இல்லாவிட்டாலும், வீட்டின் பின் பக்கமும், பூக்கள் செறிந்ததாகவே இருக்கவே, அந்தப் பூக்களைப் பார்க்க "அக்கா வீடு அழகாக இருக்கிற தில்லை?" என்றபடி பின் புறத்துப் படியிறங்கி, பூச்செடி களைப் பார்க்கச் சென்றனர்!

யாருமற்ற இந்த நிலையைப் பயன்படுத்தி ஆனந் தனை வாயிற்புறமாகக் கூட்டி வந்து, "என்னண்ணா, இப்படி அசட்டுத்தனம் பண்ணி விட்டாயே!" என்று கேட்டான், அடுத்தவன்.

"என்னடா செய்வது? சுரபி இல்லாமல், என்னால் வாழ முடியாது என்று, எனக்கு நிச்சயமாகத் தெரிந்து போயிற்று! அம்மாவும் நிச்சயமாகவே, ஒத்துக் கொள்ளப் போவ தில்லை. நான் என்ன கேட்டாலும், மறுப்பு! என்ன செய் தாலும் தப்பு என்பதுதானே, நம் அம்மா! என் விருப்பம் என்பதற்காகவே, வேண்டுமென்றே புரிந்து கொள்ள மாட்... மறுக்கவே செய்வார்கள்! மறுத்து மீறுவதை விட, இது மேல் என்று எண்ணினேன்!" என்றான் பெரியவன்.

ஆனந்தனின் பேச்சில் உண்மை இருந்ததால், அவனது திருமணத்தைப் பற்றி சதானந்தன் மேலே பேசவில்லை.

சிறு மௌனத்தின் பின் அவன் வேறு பேசினான், ''சரி, காதலித்தாய். மணந்தாய்! போகட்டும்! கூடவே இந்தப் பராரிக் கூட்டத்தையும் கூட்டி வர வேண்டுமா? அந்தப் பையனின் படிப்பு, பெண்ணின் திருமணம் என்று எல்லா வற்றுக்கும் உன்னை ஒட்ட ஒட்ட உறிஞ்சப் போகி றார்கள்...''

தம்பியின் பேச்சில் குறுக்கிட்டு ''அதெல்லாம் செய் யவே மாட்டார்கள்!'' என்று உறுதியோடு மறுத்தான் பெரி யவன்.

''நினைத்துக் கொண்டிரு! இந்தக் கல்லூரிக்கு இவ் வளவு. அந்தக் 'கோச்சிங்'குக்கு இத்தனை ஆயிரம் என்று செக் வெட்டும்போதுதான் உனக்குப் புரியும். கலங்கிய குட்டையில் மீன் பிடிக்க வந்திருக்கிறார்கள். அங்கும் இங்கும் பார்க்கிற ஆசைப் பார்வையே சொல்லவில் லையா? ஆனால், அதற்காக வேறு, அம்மாவிடம் போய் நிற்காதே! ஒரேடியாகத் தொலைத்துக் கட்டி விடுவார்கள். அதனால், என்னிடமே...''

மறுபடியும் ஆனந்தன் தம்பியின் பேச்சில் குறுக்கிட் டான். ''அதற்கெல்லாம் அவசியமே இராது என்று நினைக் கிறேன், சதா. எங்கே பிடுங்கலாம் என்று அலைகிற குடும்பம் இல்லை. அது! சந்தோஷமான குடும்பம். இயல்பாக இருக்கிறார்கள். சொல்லப் போனால், அதுதான் என்னை வெகுவாக ஈர்த்ததே! பொதுவாகப் பணப் பேச்சு, அவர்களது உரையாடலில் வருவதே இல்லை எனலாம்'' என்று தம்பிக்குப் புரிய வைக்க முயன்றான் அவன்.



ஆனால், உச்சுக் கொட்டி, அலட்சியமாகத் தோளைக் குலுக்கினான். சின்னவன் ''அப்படியே நம்பிக் கொண்டு இரு! எல்லாம், 'டிராக்குலா' தன் கோரைப் பற்களைக் காட் டும்போதுதான், மெய் என்ன என்று உனக்கு உறைக்கும். ஆனால், அந்த நேரம் வரும்போது, என்னதான அதிர்ச்சி என்றாலும், அம்மாவிடம் மூச்சு விடாதே! என்னிடமே... வேண்டாம் அண்ணா! மோகத்தால் நீ கண் மூடி இருக்கும் இந்த நேரத்தில் அவர்களைப் பற்றிய விவாதம், நமக்குள் வேண்டாம். ஆனால் நான் சொன்னதை மட்டும் முழுதாக மறக்காமல் மனதில், ஒரு மூலையில் போட்டு வை! எந்தக் காரணம் கொண்டும், அம்மாவிடம் எதுவும் வேண்டாம்! அங்கே, உள்ளே அசைவு தெரிகிறது. நம் பேச்சுக்கிடையே வரலாமா கூடாதா என்று தயங்கி, உன் மனைவி சமையல் அறையிலேயே சுற்றிக் கொண்டு இருக்கிறாள் என்று நினைக்கிறேன். நீ அங்கே போ! ஓரளவு. எல்லா சாமானும் வாங்கி வைத்திருக்கிறேன். இப்போதைக்கான உணவும் இருக்கிறது. மாதையனை இங்கேயே நிறுத்திக் கொள். மற்றது... பிறகு பார்ப்போம். நீ இப்போது உள்ளே போ!'' என்று விடைபெறும் வித மாகக் கையாட்டிவிட்டு கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து, தனக்குப் பின்னே கதவைச் சாத்தி விட்டுத் திரும்பியவன் ஒரு கணம் திகைத்தான்.

'டிராக்குலா' மீன் பிடிக்க வந்தார்கள் என்றெல்லாம் அவன் யாரைப் பற்றி அவ்வளவு நேரமும் மகா மட்டமாகப் பேசினானோ அவர்கள் இருவருமே, திகைப்பும் அதிர்ச் சியுமாகச் செக்கச் சிவந்த முகத்துடன், அங்கே நின்று கொண்டு இருந்தனர்!

அவனுக்கும் அதிர்ச்சியே!

அண்ணன் தம்பியின் உரையாடலை ஒட்டுக் கேட்ப தற்காகச் சமையல் கட்டிலிருந்து, பின்புறமாக வீட்டைச் சுற்றிக் கொண்டு, பரக்கப் பரக்க இங்கே ஓடி வந்து நிற்பார்கள் என்று அவன் எண்ணவில்லையே!

அவன் எதிர்பார்த்ததை விடவும் அதிகக் கெட்டிக்காரர் கள்தான்!

ஆனால் வினாடிக்குள் சமாளித்துக் காரை நோக்கி நடந்தபடியே, ''ஒட்டுக் கேட்பது வேறா? ஒட்டுக் கேட்கிற வர்கள் நல்லதைக் கேட்பது இல்லை என்று ஒன்று சொல்வார்களே, தெரியாது? ஆனால் இதுவும் நல்லது தான். உங்களை அறிந்தவன் ஒருவன் இங்கே இருப்பது, உங்களை வாலாட்ட விடாமல் அடக்கி, வைக்கும்!'' என்றவாறு காரில் ஏறினான்.

''நாங்களெல்லாம்...'' என்று இருவரும் பேச வாயெடுக் கும்போதே, காரை ஓட்டிக் கொண்டு போய் விட்டான்.

ஒருவர் பேசிக் கொண்டிருக்கும்போதே, நின்று கேளாமல், பாதியில் போவதா? அவமதிப்பில்லை? உதாசீனமில்லை?

உடன்பிறந்தோர் இருவருக்கும் மனம் கொதிக்கத்தான் செய்தது.

''நேரே உள்ளே போய், அக்கா, அத்தானிடம், அந்த ஆள் நடந்து கொண்ட விதம் பற்றி புகார் பண்ண வேண் டும். எவ்வளவு கேவலமாக நம்மை நடத்தி விட்டான்!'' என்று துடித்தான் குணசீலன்.

ஆனால் சௌமினிக்கு அது பிடிக்கவில்லை!

சும்மாவே, புயல் அடிக்கிற கடலில் படகுப் பயணம் போல, அக்காவின் வாழ்வு தொடங்கியிருந்தது. இதில்



இன்னுமொரு சூறாவளியை, இவர்களும் உருவாக்கு வதா?

மீண்டும், தன் இரட்டையை விடப் பெரியவளாக உணர்ந்து, அவனை அமைதிப்படுத்தினாள். ''வேண்டா மடா, குணா. ஏற்கனவே அவர்களுக்குப் பிரச்சினை இருக்கிறது! நம்மால் வேறு, அது கூட வேண்டாம். இந்த ஆளுடைய ஊகம் என்ன? நாம் அட்டையாக அத்தானை உறிஞ்சப் போகிறோம் என்பதுதானே? அப்படியில்லை என்று தெளிவாகக் காட்டி விட்டால்? நாம் எதையும் கேட்கப் போவது, வாங்கப் போவது இல்லை என்று நிச்சயமாகத் தெரியும்போது, அந்த ஆளுக்கும் நம்மைப் பற்றித் தெரிந்து தானாகப் புரியும். அப்போது அசடு வழிவான் இல்லையா? அதைப் பார்த்து ஏளனமாகச் சிரித்துக் குத்திப் பேசி, இவனைப் பழி வாங்கலாம். ஆனால் பழி வாங்கியே தீர வேண்டும்!'' என்று ஆத்திரத் துடன் கறுவினாள் அவள்.

''ஆனால், அதுவரை நாம் பொறுமையாகத்தான் இருக்க வேண்டும்.''

ஆனால் இப்போதைக்கு... என்று அதற்கும் ஒரு திட்டம் தீட்டினர்.

தேவைக்கு மேல் ஒரு நாள் கூட, இங்கே தங்கக் கூடாது! ஓசிச் சாப்பாட்டுக்காக உட்கார்ந்திருப்பதாக, அந்த வில்லாதி வில்லன் நினைக்கக்கூடும்!

திருமணம், அது இதென்று, விடுமுறை எடுத்ததோடு சரியாகப் படிக்கவும் முடியாமல் போயிற்று. பாடம் நிறைய இருப்பதால், உடனே சென்னைக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற காரணத்தோடு தமக்கை முன் நின்றனர் இருவரும்.

பாடம் என்று சொல்லும்போது, மறுத்துப் பேச முடியாமல் சுரபி திணறினாள். கூடவே ''இரண்டு பேருமாக மட்டுமாக எப்படி இருப்பீர்கள்?'' என்று தவித்தாள்.

ஒன்றும் பேசாமல் ஆனந்தன் அவளது தோளைத் தட்டிக் கொடுக்க தம்பி, தங்கை இருவரும் அவளைத் தேற்றினர்.

''என்னக்கா, எல்லாம் முன்னே திட்டமிட்டதுதானே? வேலைக்காரம்மா, இனிச் சமையலையும் ஓரளவு சேர்த்துப் பார்க்கப் போகிறாள். எனக்கும் கொஞ்சம் தெரியும்தானே? அவசியம் என்றால், எல்லாமே செய்து விடுவேனே! ஏதோ உப்பு, புளி சற்று முன்னேப் பின்னே இருக்கும். சமாளித்துப் பழகிக் கொள். குணா, உன் எதிர்காலத்துக்கு நல்லது..! என்று சற்றுக் கெத்தாக சௌமினி கூறவும், சற்று வியப்பாகத்தான் மற்ற மூவரும் அவளை நோக்கினர்.

''எ... என் எதிர்காலம் என்றா, சொன்னாய்?''

''நிச்சயமாக அப்படித்தான் சொன்னேன்! சாட்சாத் உன் எதிர்காலத்துக்கு நல்லது என்றுதான் சொன்னேன்! என்றாள் அவள் அழுத்தம் திருத்தமாக.

''அதெப்படி? உன் கண்ணராவிச் சமையலைச் சாப்பிட்டு, வயிறு கெட்டுப் போகாமல் இருந்தால் போதாதா? இதற்கு மேல் பட்டினி மேல் என்று நான் சாப்பிடாமல் கிடந்து, இன்றைக்கு அரிசி பருப்பு மிஞ்சும் என்றால் சொல்லு! ஒத்துக் கொள்ளலாம்! என் எதிர்காலத்துக்கும் உன் சமையலுக்கும்... ஊகூம்!''

''இருக்கிறதடா!'' என்றாள் சௌமினி விடாமல்.



''ஏதோ தொடர்பு கொண்டு வந்து விடுவாள் பாருங்கள்'' என்று கணவனிடம் சொல்லிவிட்டு, சுரபி ஆர்வத்தோடு கவனிக்க, தங்கை தொடர்ந்தாள்.

''இது பழைய காலம் அல்ல! இன்றைக்கு, உங்களோடு... அதாவது ஆண்களோடு போட்டி போட்டுக் கொண்டு பெண்களும்... அதுவும் உங்களை விட நன்றாகவே படிக்கிறோம். அதாவது, என்னைப் போல...''

''அதெல்லாமில்லை!''

அவன் பேசாதது போலவே பாவித்து சௌமினி தொடர்ந்தாள்.

''....... படிப்பே, முழுக் கவனத்தையும், நேரத்தையும் கூட, முழுங்கி விடுவதால், இந்தச் சமையல் மாதிரி முக்கியம் இல்லாத மற்ற சில்லரை விஷயங்களைக் கற்றுக் கொள்ள அவகாசமே இருப்பதில்லை! நாளைக்கு உன் மனைவியாக வருகிறவளும், இப்படித்தானே இருப்பாள்? அந்தச் சமையலைச் சாப்பிட, இன்றைக்கே பயிற்சி எடுத்து விட்டால், நாளைக்கு அவளோடு சண்டை போட நேராமல், உன் குடும்பம் அமைதியாக இருக்கும் அல்லவா? அது, உனக்கு நல்லதுதானே, சொல்லு?''

அவளை மடக்கும் விதமாக ஒன்றும் பதில் சொல்லத் தோன்றாமல், ''அப்பாடி! ஒரு வழியாகத் தலையைச் சுற்றி மூக்கைத் தொட்டு விட்டாளப்பா! பெரிய சாதனைதான்!'' என்றான் குணசீலன் எரிச்சலாக.

சுரபியும் ஆனந்தனும் சிரிப்பதைப் பார்த்துவிட்டு, ''மெய்யாகவே நான் சாதனைக்காரிதான்!'' என்றாள் சௌமினி! ''அதாவது படிப்பு, பாட்டு, சமையல் எல்லாம்

தெரிந்த சகலகலாவல்லியாக இருப்பதைச் சொன்னேன்!'' என்று விளக்கமும் கொடுத்தாள்.

''அப்படி என்று நீ சொன்னால் ஒத்துக் கொள் கிறேன்மா!'' என்று குணா பொய்ப் பணிவுடன் கூற, எல்லோரும் நகைத்தனர்.

சிரித்த முகமாகவே ''எப்படியும், நாங்கள் உடனேயே கிளம்பி விட்டால், விட்ட படிப்பை முடிப்பதற்கு வசதியாக இருக்கும், அக்கா! ப்ளீஸ் அத்தான், அதற்கு ஏற்பாடு பண்ண முடியுமா?'' என்று குணசீலன் கேட் டான்.

கணவனும், மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

பிறகு, ''ஆனால், அப்படியென்ன திடீரென்று பாடம் அவசரமாகி விட்டது? சில நாட்கள் தங்கிப் போகலாம் என்று தானே, வந்தீர்கள்?'' என்று ஆனந்தன் வினவி னான்.

வெறும் வினவல் அல்ல. கூர்ப் பார்வையுடன் கூடிய விசாரிப்பு!

குணா வழிந்தாலும், சௌமினியிடம் பதில் தயாராக இருந்தது. ''அத்தான், முதலில் அக்காவின் புதுக் குடித்தனத்துக்கு சாமான்களை எடுக்க, அடுக்க என்று அக்காவுக்கு எங்கள் உதவி தேவைப்படும் என்று எண்ணியிருந்தோம். அதனால் திரும்பிச் சென்ற பிறகு, பரீட்சைக்குப் படிப்பது போல, பத்து நாட்கள் தூக்கம் விழித்து, இரவும் பகலுமாகப் படித்து முடித்துக் கொள்ள லாம் என்றும் நினைத்தோம். ஆனால் இப்போதுதான் அக்காவுக்கு உதவிக்கு இரண்டு வேலையாட்கள்



வருவார்கள் போலிருக்கிறதே. அவர்களை வைத்துக் கொண்டு, இங்குள்ள வேலையை அக்காவே பார்த்துக் கொள்ள முடியும். நாங்களும் இரவு விழித்து உடம்பைக் கெடுத்துக் கொள்ளாமலே படித்து விடலாமில்லையா? அதனால்தான், உடனே கிளம்ப ஏற்பாடு செய்யும்படி கேட்டோம்!''

என்னதான் கோவையாக இயம்பினாலும், சௌமினி யின் பேச்சில் ஒரு பெரிய ஓட்டை இருந்தது! அவர்களது முதல் திட்டம், ஆனந்தனுடைய தாயாரின் கோபத்தைச் சகித்து, குடும்ப வீட்டிலேயே வசிப்பதுதான். அப்போது, சௌமினி குறிப்பிட்ட எடுத்தல் அடுக்கலுக்கு அவ சியமே இருந்திராது!

ஆனால், அது பற்றிய யோசனை தோன்றுமுன் பெரியவர்களின் கவனத்தை மாற்றுவதற்காக, அவசரமாக, அவளே தொடர்ந்து பேசினாள். ''இங்கிருந்து சென் னைக்கு, பஸ்ஸில் செல்ல முடியும் என்றால், அதையே கூடப் பார்க்கலாம்'' என்று பயணத்தைப் பற்றிய யோசனையில் பேச்சைத் திருப்பி விட்டாள்.

''அதெல்லாம் வேண்டாம். அவ்வளவு தூரத்து பஸ் பயணம் என்றால், ரொம்பவும் உடம்பு சோர்ந்து போய்விடும். போகிற நோக்கமே வீணாகி, படிக்கவும் முடியாது! அதைவிடப் போகாமல் இருப்பதே மேலானது. எப்படிப் போவது என்று, மெல்ல யோசிப்போம்'' என்று ஆனந்தன் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே, ''யார் எங்கே போகிறார்கள், அண்ணா?'' என்று கேட்டபடி, சதானந்தன் உள்ளே வந்தான்.

ஓசைப்படாமல் பூனை போல வருவதைப் பார். வேவு பார்க்கிறானாக்கும்! ஆனால் எங்களிடம் ஒளிவு

மறைவெல்லாம் கிடையாதுப்பா என்று உள்ளூரக் கொதித்தாள் சௌமினி. அதைக் காட்ட முடியாத ஆத்திரம் வேறு!

குணாவுக்கும் அதே உணர்வே என்பது, அவன், அவளைப் பார்த்த விதத்தில் தெரிந்தது!

ஆனந்தனோ, சுரபியோ ஏதும் பேசித் தடுத்து விடு முன், "நாங்கள் இயன்றவரை விரைவாக, முடிந்தால் இன் றைக்கே சென்னைக்குக் கிளம்புவதாக இருக்கிறோம். எப்படிப் போவது என்று, அதைத்தான் பேசிக் கொண் டிருக்கிறோம்" என்றாள் சௌமினி.

'உன் அண்ணன் சொத்தில் உட்கார்ந்து சாப்பிட வரவில்லையப்பா, சாமி' என்று உள்ளம் பொருமியதைச் சொல்லிக் காட்ட முடியாவிட்டாலும், காலில் சுடு தண் ணீரை ஊற்றிக் கொண்டு விட்ட மாதிரி, இப்படி அவசர மாகக் கிளம்புவதேனும், இவனுக்கு உண்மையை உணர்த்தாதா?

உணர்த்தியதோ, இல்லையோ, ஒன்றையும் முகத்தில் காட்டிக் கொள்ளாமல், "ஓ, ரொம்ப அவசரம்போல! அப்படியானால், போவது ஒன்றும் பிரச்சினை அல்ல! அண்ணா, நம் கோவை அலுவலகத்தில் இவர்கள் இரண்டு பேருக்கும் ரயிலில் டிக்கெட் வாங்கச் சொல்லி விடலாம். நானே, இப்போது கோவை செல்ல வேண்டி யிருப்பதால், இவர்களைக் காரில் கூட்டிப்போய், ரயில் நிலையத்தில் விட்டு விடுகிறேன்" என்றான் சதானந்தன்.

இரட்டையர் இருவருமே ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தனர்!



இவன், அவர்கள் இருவரையும் அடியோடு வெறுக்கும் இந்த சதானந்தன், அவர்களை வசதியாகக் காரில் கூட்டிப் போகிறானாமா?

வழியில் எங்கேனும், உருட்டிக் கொன்றுவிட எண்ணு கிறானா என்று யோசித்துவிட்டு, இராது என்ற முடிவுக்கு சௌமினி வந்தாள்.

இரண்டு பேருக்கு, இவன் ஒற்றை ஆள் என்பதோடு, அப்புறமாக, அத்தான், அக்காவுக்குப் பதில் சொல்லியாக வேண்டுமே!

அடியாள், கொலை எல்லாம், டி.வி. சீரியல்களில்தான், சர்வ சாதாரணமாக வரும்! இயல்பு வாழ்க்கையில் அப்படி நடக்காது!

ஆனாலும், அவனோடு காரில் செல்வது பிடிக்காமல், "எங்களால் யாருக்கும் சிரமம் வேண்டாம், அத்தான். மதுரைக்கு வழி வாயிலே, இங்கே பஸ்சில் ஏற்றி விட்டாலே போதும். நாங்களே கோவைக்குப் போய், உங்கள் இடத்துக்கும் போய், டிக்கெட்டை வாங்கிக் கொண்டு ரயிலுக்கும் போய் விடுவோம்!" என்றாள் சௌமினி.

குணாவுக்கு, இதில் ஒப்புதல் இல்லை என்பது, அவன் பார்வையில் தெரிந்தது!

பஸ்சில் போய், அங்குமிங்கும் அலைவதற்கு, இவ னோடு காரில் போவது வசதியாகத்தானே, இருக்கும்? எதற்கு விடுவது என்பது, அவனுக்கு! இவனால் கிளம்பும் போது, இதாவது செய்யட்டுமே!

பத்து நிமிஷம் முந்திப் பிறந்தவளைப் பார்த்து, அவன் லேசாக உறுத்து விழித்தான்.

அதற்குள் ''எனக்கு என்ன சிரமம்? நான் செல் லும்போது, காரில் கூட வரப் போகிறீர்கள். அவ்வளவு தானே? அல்லது.. பஸ், பஸ் என்பதைப் பார்த்தால் அண்ணா, நம் வழித்தட பஸ், அடிக்கடி பழுதாகி நின்று விடுவது பற்றி சொல்லியிருக்கிறாயோ என்று சந்தேகமாக இருக்கிறதே! பஸ் நின்று விட்டால், அப்புறம்...'' என்று கேலி போல இழுத்தான் சதானந்தன்.

பஸ் நின்று விட்டால், அதுதான் சாக்கு என்று மீண்டும் வந்து, அவன் அண்ணன் வீட்டில் வந்து உட்கார்ந்து கொள்வார்களாம்!

சட்டென உள்ளர்த்தம் புரிபட, சௌமினியின் முகம் சிவந்து சூடாயிற்று!

எந்த வழி என்றாலும், இங்கிருந்து இன்று போயே தீர வேண்டும்!

இந்த மனிதனை நம்ப முடியாதுதான் என்றாலும், இப்படிப் பேசுகிற இவனை, இங்கிருந்து கிளம்புவதில், பயன்படுத்திக் கொள்வதில் தப்பே கிடையாது!

முடிந்தால், நாங்கள் ஒன்றும், சோற்றுக்கு விதியற்று, இங்கே வரவில்லை என்று வழியில், இவனிடம் சொல் லிக் காட்டியும் விடலாமே!

எனவே, 'வருகிறோம்' என்று சொல்லி விடலாம் என்று அவள் வாயைத் திறக்கு முன் ''ஐயையோ! அப்படி யானால், நாங்கள், உங்களோடேயே கோயம்புத்தூருக்கு வந்து விடுகிறோம். சதானந்தன் சார். ஆனால், அங்கிருந்து சென்னைக்கு டிக்கெட் கட்டாயம் கிடைக்கும்தானே? கிடைக்கவில்லை என்று திருப்பிக் கூட்டி வந்துவிட மாட்டீர்களே?'' என்று முந்திக் கொண்டு கேட்டான் குணசீலன்.



மறுபடியும், சௌமினி மறுத்து எதுவும் சொல்லி விடுவாளோ என்று பயந்து விட்டான் போல!

அப்படியில்லையடா என்று, அப்புறமாகச் சொல்ல வேண்டும் என்று அவள் எண்ணமிடுகையிலேயே, ''நிச்சயமாக மாட்டேன்! காட் பிராமிஸ்! தலை கீழாக நின்றேனும், உங்கள் இருவருக்கும் டிக்கெட் வாங்கியே தீர வேண்டும் என்று, இப்போதே அலுவலகத்தில் சொல்லி விடுகிறேன்! படிக்கிற பிள்ளைகளைக் கெடுக்க லாமா? ஆனால், மதியம் இரண்டு மணி அளவிலேனும் கிளம்பி விட வேண்டும். இங்கிருந்து கோவை செல்ல, நாலைந்து மணி நேரமேனும் ஆகும்! அதனால், இரண்டு மணிக்குக் காருடன் வருகிறேன்'' என்று கிளம்பினான் சதானந்தன்.

வாயிலருகே நின்று ''நிச்சமாகக் கிளம்பி விடுவீர் கள்தானே? அனாவசியமாக என்னை அலைய வைக்கக் கூடாது!'' என்று ஒரு மாதிரிக் குரலில் கூறினான்.

''நிச்சயமாக! காட் ப்ராமிஸ்! தலை கீழாக நின்றேனும். இன்றைக்கு நாங்கள் சென்னைக்குக் கிளம்பியே தீருவோம்!'' அவன் சொன்ன வார்த்தைகளையே திருப்பிச் சொல்லித் தங்கள் உறுதியைத் தெரியப்படுத்தினாள் சௌமினி.

ஆனால், ''அதை நான் வந்த பிறகு பார்ப்போம்!'' என்று அப்போதும் அண்ணனுக்கு முன் கேலி போலவே, தன் நம்பாமையைச் சின்னவர்களுக்கு வெளிப்படுத்திவிட்டே கிளம்பினான் சதானந்தன்.

இப்படி ஒரே பிடிவாதமாக அவர்களைச் சந்தேகப் படுகிறவனுக்கு, எப்படி, என்ன செய்து புரிய வைப்பது? எப்படியும் அவன் மனதை மாற்றியே தீர வேண்டும் என்று, சௌமினியின் பெண் மனம் துடியாய்த் துடித்தது!

# 6



அது பற்றிப் பேசியபோது, ''அத்தான் நம்மைப் புரிந்து கொண்டு, பிரியமாக இருக்கிறார். அதற்கு மேல், இந்த ஆள் என்ன, சுண்டைக்காய்! அவர் என்ன நினைத்தால் என்ன வந்தது'' என்றான் அலட்சியமாகக் குணசீலன்.

சுண்டைக்காயா? ஆறடி உயரத்தில், அண்ணாந்து பார்க்கும்படி நிற்கிறான். அவனைப் போய் சுண்டைக்காய் என்பதா?

குணாவிடம், அவள் அதைச் சொல்ல, ''என்ன பெரீய்ய உயரம்? நீ குள்ளக் கத்தரிக்காய்! என்னைக் கூடத்தான் அண்ணாந்து... கொஞ்சம் தலையைத் தூக்கித்தானே, பார்க்கிறாய்!'' என்றான், அப்போதும் அவன் அலட்சிய மாகவே!

''நான் ஒன்றும் குள்ளக் கத்திரிக்காய் இல்லை! ஐந்தரை அடி உயரம் இருக்கிறேன். உனக்கு ஆண் பிள்ளை வளர்த்தி, அவ்வளவுதான். ஆனால், உன்னையே பெரி தாக நினைக்கிறாயே, அந்த ஆள் உன்னை விடவும்



உயரம் ஆயிற்றே!'' என்றாள் கூடப் பிறந்தவள் பதி லுக்கு.

''உன்னைக் குள்ளக் கத்தரிக்காய் என்றது தப்புதான்'' என்று அவளிடம் ஒத்துக் கொண்டுவிட்டு, சதானந் தனைப் பற்றிப் பேசினான் குணசீலன். ''அத்தான், அவர் தம்பி இருவருமே நல்ல உயரம்தான், மின்னி. என்றாலும் இந்த சதானந்தன், அத்தானுக்குத் தம்பிதானே? அத்தான் பெரியவர் என்றால், இந்த ஆளைச் சின்னவர் என்றுதானே சொல்வார்கள்? அதனால்தான், சுண்டைக்காய் என்றேன். அத்தோடு பெரியவர்கள் சத்தத்தை உயர்த்தினால், சின்னவர்கள் அடங்கிப் போவதுதானே முறை! அதனால், இந்த சதா நம் அத்தானிடம் வெறும் சாதாதான். இவர் அளவு மீறாமல், அண்ணனாக, அத்தான் பார்த்துக் கொள்வார். அதனால் நீயும், இந்த அண்ணன் சொல் வதைக் கேட்டு நிம்மதியாக இரு தங்கச்சி!'' என்று வாய்ப்பை விடாமல், அவளைத் தங்கையாக்கி முடித்துச் சிரித்தான் குணா.

ஐந்தே தினங்களுக்கு முன், குணாவுக்கு இந்தக் கடைசி வார்த்தையை, சௌமினி எளிதில் விட்டிருக்க மாட்டாள்.

'தம்பி', 'தங்கை'க்காக சகோதரனுடன் மல்லுக் கட்டிய பழைய சீண்டல்களை நினைக்கையில், இன்று சௌமினிக்கு சிறு பிள்ளைத்தனமாகத் தோன்றியது.

'அக்கா' என்ற பாதுகாப்பிலிருந்து வெளிவந்து, தானாக வாழ இருப்பதால் வந்த முதிர்ச்சியா? ஆனால், குணா விடம் வேறுபாடு இல்லையே!

உள்ளூர இருந்த குழப்பத்தைக் காட்டாமல், புன்னகை புரிவதோடு நிறுத்திக் கொண்டாள் அவள்.

குணசீலனும் வளர்ந்திருக்கிறான் என்பது, தமக்கையின் பாதுகாப்பு பற்றிய அவனது கவலையில் தெரிந்தது!

கிளம்புகிற நேரம் நெருங்க, நெருங்க அவனுக்கு, அது தவிர, வேறு எண்ணமே இல்லாது போயிற்று.

''உன்னை இங்கே தனியே விட்டுவிட்டுப் போவதுதான் கஷ்டமாக இருக்கிறது!'' என்று அவன் மூன்றாவது தரமாகச் சொல்லவும், ''அதுதான் சொல்லுகிறேன், கூடுதலாக இரண்டு நாட்களேனும் தங்கி, அக்கா இங்கே எப்படி இருக்கிறாள் என்று பார்த்துவிட்டுப் போனால், உனக்கு நிம்மதியாக இருக்கும் அல்லவா? பேசாமல், பயணத்தை நிறுத்தி விடுங்கள்!'' என்றான் ஆனந்தன்.

கண்களில் நீர்த் திரையுடன் நின்ற மனைவியை ஒரு தரம் பார்த்துவிட்டு, ''என்ன சொல்கிறாய் சதா?'' என்று சின்னவர்களை அழைத்துச் செல்ல வந்திருந்த தம்பியிடம் கேட்க வேறு செய்தான்!

அபிப்பிராயம் கேட்பதற்கு, அத்தானுக்கு வேறு ஆளே தெரியாதா என்று எண்ணியவாறே, அவனை முந்திக் கொண்டு ஆனந்தனை மறுத்துப் பேச, சௌமினி வாயெடுக்கையில், ''நிச்சயமாக அண்ணா!'' என்றுரைத்து, அவளை அதிசயப்பட வைத்தான் சதானந்தன்.

ஆச்சரியத்துடன் விழி விரித்து அவள் பார்க்க, அவன் தொடர்ந்தான் ''இவர்களது நோக்கமே அதுதான் எனும் போது... என்னண்ணா விழிக்கிறாய்! சகோதரி நன்றாக இருக்க வேண்டும் என்பதுதானே, இந்த அன்பே உருவான தம்பி, அழகான தங்கையின் குறிக்கோளாக இருக்கக் கூடும்? அதைத்தான் சொன்னேன். விருப்பம் போல,



இங்கேயே இருந்துவிட்டுப் போகட்டும்! அப்படியானால், நான் மட்டுமாகக் கிளம்பட்டுமா?'' என்று எழுந்தான்.

இவன் பேச்சின் உள்ளர்த்தம் வேறு!

இரட்டையர் இருவரும், இங்கேயே டேராப் போடுவதற்காக, அக்கா பேரைச் சொல்லி, அன்பு வேஷம் போடுவதாகச் சொல்லாமல் சொல்லுகிறான்.

''இல்லை... இல்லை! போகாதீர்கள்'' என்றாள் சௌமினி அவசரமாக.

அவன் ஒரு தோள் குலுக்கலுடன் நிற்கவும், குணாவிடம் திரும்பி, ''அக்காவை அத்தான் பார்த்துக் கொள்வார், குணா. நாம் எதற்காகக் கிளம்பினோம் என்று மறந்து விட்டதா? பாடம்! படிப்பு! நம் குறிக்கோள், நோக்கம், விருப்பம் எல்லாமே, அதுதானில்லை? அதை விட்டுப் பாசம் அது இது என்று சோம்பி உட்கார்ந்தால், அக்காவுக்கே பிடிக்காதே! என்னக்கா? அப்படித்தானே? அதனால், சதானந்தன் சார், தயவு பண்ணி எங்களைக் கோவைக்குக் கூட்டிக்கொண்டே போய் விடுங்கள்! அப்படியே நீங்கள் போகாவிட்டால் அது உங்கள் விருப்பம். பஸ்சில்... அல்லது, ஒரு டாக்சி பிடித்தேனும், நாங்கள் போய்த்தான் ஆக வேண்டும்! அ... அப்படித்தானே, குணா?'' என்றாள், அவனையே பார்த்து.

தலையை உலுக்கிக் கொண்டு, ''ஆ... ஆமாம்டி! நா...ன் பாடத்தை மறந்து போனேன், பார்! நாங்கள் போய்த்தான் தீர வேண்டும். ஆனால்... ஆனால், நீ அடிக்கடி போன் பண்ண வேண்டும், அக்கா! உன் குரலையாவது கேட்டால் தான், நி... நிம்மதியாக இருக்கும்!'' என்றவனின் குரல் கரகரத்தது.

''குணாம்மா...'' என்று சுரபியும் கண்ணீர்க் குரலில் தொடங்கவே, சௌமினி இடையே புகுந்தாள்.

''அக்கா!'' என்று அழுத்தமான குரலில் கூப்பிட்டு, ''படிப்பு முக்கியம். படிப்பு, முக்கியம் என்று நீ எத்தனை தடவை எங்களிடம் சொல்லியிருப்பாய்? இப்போது, படிப்பு முதன்மையாகக் கருதி நாங்கள் ஒன்று செய்தால், சந்தோஷப்பட வேண்டுமே தவிர, அழக்கூடாது! ஆனால், ஒன்று மட்டும் நன்றாக நினைவு வைத்துக் கொள். இரண்டு நாட்களுக்கு ஒரு தரம், நீ எங்களோடு பேசவில்லை என்றால், பாடம் போய்த் தொலைகிறது என்று, நேரிலே இங்கே துப்புத் துலக்க, நாங்கள் வந்து விடுவோம்!'' என்று உருகக் கூறினாள்.

கிண்டல் போல என்றாலும், சொன்னது, சதானந்தனுக் காகவே!

அத்தோடு நில்லாமல், சதானந்தனைப் பார்த்து, ''அது போலக் கஷ்டங்கள் எதுவும் நேராமல், நீங்கள் பார்த்துக் கொள்வீர்கள் என்று நினைக்கிறேன். இப்போது நாங்கள் கிளம்புகிறோம், சதானந்தன் சார்! உங்களால் கூட்டிப்போக முடியாவிட்டால் சொல்லுங்கள். நாங்கள், வேறு எப்படி யாவது போய்க் கொள்வோம்'' என்று தன் துணிமணிகள் அடங்கிய பையை எடுத்துத் தோளில் மாட்டி நிச்சயமாகக் கிளம்பி விட்டதைக் குறிப்பால் காட்டினாள்.

குணாவும் அவளைப் பின்பற்றித் தன் பையை எடுத் தான்.

''நல்ல ஏசி காரில், சுகமாக வழுக்கிக் கொண்டு செல் வதை விட்டு, பஸ்சும், டாக்சியுமா? உங்கள் அக்கா மனது தாங்குமா? வேண்டாம். நானே கூட்டிப் போகிறேன்!'' என்றான் சதானந்தன்.



பேச மாட்டாமல் கண் கலங்க நின்ற தமக்கை, அவளைத் தேறுதலாகத் தோளோடு சேர்த்து நின்ற ஆனந்தன் இருவரிடமும் விடைபெற்று, ஒரு வழியாகச் சின்னவர்கள் இருவரும் கிளம்பினர்.

கார் சவாரி, நிஜமாகவே மிகவும் சுகமாக இருந்தது!

அவர்கள் மீது, சதானந்தனுக்கு இருந்த வெறுப்புக்கு, எந்த விதமான வசதியும் இல்லாத, ஜீப் மாதிரி எதை யாவது கொண்டு வந்திருந்தால் கூடப் பொருத்தமாக இருந்திருக்கும்! ஏன் காலையில் அவன் பயன்படுத்திய கூட, சாதாரண வகைதான். இப்போது எதற்கு இந்த விலை உயர்ந்த கார்?

நினைத்ததைக் கேட்டாள் சௌமினி. அக்காவோ, அத்தானோ இல்லாத இடத்தில், எதற்காக நடிப்பது?

''என்ன திடீர் உருக்கம்? பஸ்சிலோ, டாக்சியிலோ ஏற்றி விட்டிருந்தால் கூடப் போதுமே!'' என்றாள்.

''ம்ம்ம்... உருக்கம் என்று ஒன்றுமில்லை...'' என்று இழுத்தான் சதானந்தன்.

''பின்னே?''

வலிக்க ஒரு குத்து விழக்கூடும் என்று தெரிந்தும், அவளால் கேட்காமல் இருக்க முடியவில்லை! அவனும் ஏமாற்றவில்லை.

''கைக்கும் வாய்க்கும் இடையே எவ்வளவு தூரம்? ஏதாவது காரணம் காட்டி திரும்பி வந்துவிடக் கூடா தில்லையா? அப்படி எதுவும் நேர்ந்து விடாமல் நீங்கள் கிளம்புவதை உறுதிப்படுத்திக் கொள்கிறேன். அத் தோடு, மனைவியின் உறவினருக்காக இந்தக் காரை

எடுத்து வந்தேன் என்பதில், அண்ணனுக்கு உச்சி குளிரும். என்மேல், சிறு சந்தேகம் கூட வராது! யாராவது கோள் மூட்டினால்கூட!'' என்று அவனும் வெளிப்படை யாகவே பதில் சொன்னான்.

''நாங்கள் ஒன்றும்...'' என்று ஆத்திரத்துடன் தொடங் கிய குணாவை, சௌமினி அடக்கினாள்.

''சும்மா விடு, குணா நாம் கோள் சொல்ல மாட்டோம் என்று, தெரிந்தே, சும்மா சொல்கிறார். கோள் சொல்வ தானால், நேற்றே சொல்லியிருக்க மாட்டோமா? வெற்றுச் சீண்டல்... ஆனால், மற்றது மெய்யாகத்தான் தெரிகிறது'' என்றாள் அவளும் வெளிப்படையாகவே.

இந்த அளவு வெளிப்படையை, சதானந்தனும் எதிர்பார்க்கவில்லை போலும்!

சற்று நேரம், காரினுள் சத்தமே இல்லாதிருந்தது!

அமைதியின் பின் ''ஆனால் நானும் சாதனையாளன் தான். ஒரே நாளில் உங்களைக் கிளப்பி விட்டேனே!'' என்றான் சதானந்தன். சிறு கர்வத்துடன்.

சா....தனை...?

சுரபியைச் சிரிக்க வைப்பதற்கான அவர்களது உரையாடலை, சதானந்தன் கேட்டிருக்கிறான் என்பது புரியவும், ''ஒட்டுக் கேட்பது மகா மட்டமான குணம். ஒட்டுக் கேட்பவர்கள் நல்லதைக் கேட்பதில்லை என்று வழக்கே இருக்கிறது என்று யாரோ சொன்னார்களே!'' என்றாள் சௌமினி ஆத்திரத்துடன்.

''ஊருக்குத்தான் உபதேசம்'' என்கிற தினுசு போலிருக் கிறது மின்னி!'' என்று குணாவும் தன் கோபத்தைக் காட்டினான்.



அவன் அசைவதாக இல்லை ''ஒட்டுக் கேட்பது, தப்புதான். ஆனால், ஒற்றறிதல் என்று வள்ளுவர் ஓர் அதிகாரமே எழுதியிருக்கிறார். அன்று தேச நலனுக்காகச் செய்தது! இன்று, குடும்ப நலனுக்காகச் செய்ய வேண்டி யிருக்கிறது!''

''குடும்பம் என்றாலே என்ன என்று தெரியாதவர், குடும்ப நலன் பற்றி என்ன பேசுவது? அதற்கு ஒரு தகுதி வேண்டாம்?'' என்று சீறினாள் சௌமினி.

''தகுதி பற்றி நீ பேசாதே. நீ ஒன்றும், அறியாப் பரு வத்துச் சின்னப் பாப்பா அல்ல! வெளி ஆளாக இருந்து, இந்தத் திருமணத்தைச் சித்தரித்துப் பார்! தனியாக வந்தவனை, அதுவும் உடம்பு சரியில்லாத சமயத்தில்... இல்லை, வேண்டாம். ஊருக்குப் போய்க் கொண்டிருக் கிறாய். அதிகப்படியாகப் பேசி, மனதைக் காயப்படுத்திக் கொள்ள வேண்டாம். உனக்குத்தான், பூ, செடிகொடி, மரம் எல்லாம் பார்க்க, மிகவும் பிடிக்குமாமே! இரண்டு பக்கமும் பார்த்துக் கொண்டே வா. பொழுது சந்தோஷ மாகவே போய்விடும்!'' என்றான் சதானந்தன்.

பெயரைப் பார்! சதானந்தனாம்! இந்த ஆளோடு இரண்டு வார்த்தை பேசினால் போதும்! இருக்கிற ஆனந்த மும் அடியோடு மறைந்து போகும்!

ஆத்திரத்தில் ஏதேதோ நினைத்தபோதும், அவனுக் குக் கோபமாகப் பதில் சொல்லவும் அவளால் முடிய வில்லை!

இந்த மாதிரி, மற்றவர்கள் பேசக் கூடுமே என்று, தமக்கையிடம் முதலில் சொன்னவளே அவள் அல் லவா?

இப்படித்தான், யார் பார்வைக்கும் தோன்றும்! பிரிந்தால் 'மூச்சு முட்டிச் செத்துவிட' கூடியதான, அக்காவின் அன்பு, யாருக்குப் புரியும்?

இவர்கள் குடும்பத்தில் இவ்வளவு பணம் இல்லாமல் இருந்திருந்தால், ஒருவேளை... ஆனால், யாரோ மடத்தனமாக ஏதோ நினைக்கிறார்கள் என்பதற்காக, சுரபி எதற்கு செல்வ வளத்தோடு வாழக்கூடாது?

அவளது அன்புக்கும், குணத்துக்கும், அழகுக்கும் அவள் மகாராணியாக இருக்கவே தகுந்தவள்தான்! எப்படியும் ஒருநாள், இவனுக்கும் புரியத்தான் போகிறது! அன்றைக்குப் பேசிக் கொள்ளலாம்!

ஏதேதோ யோசித்துவிட்டு, நிகழ்வுக்கு வந்தால், குணசீலனும், சதானந்தனும், இயல்பாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

இயல்பாக! இவனோடு சாதாரணமாகப் பேசவும், இந்தக் குணாவுக்கு வாய் வேறு வருகிறதே என்று ஆத்திரப்பட்டபடி பேச்சைக் கவனித்தாள், ஏதோ கார் ரேஸ் பற்றிய பேச்சு!

குணா கார் ரேஸ் பைத்தியம் என்று இவனுக்கு எப்படித் தெரிந்தது? எப்போதாவது ஓய்வு நேரம் கிடைத்தால், டி.வி.யில் 'விர்விர்' என்று ஏதேனும் ரேசைத்தான் அவன் பார்த்துக் கொண்டிருப்பான்.

ஏதோ 'ஃபார்முலா ஒன்' 'கிராண்ட் ப்ரீ' அப்படி இப்படி என்று. அவ்வப்போது சகோதரியிடமும் குணா கூறுவது தான்.

ஆனால், கிரிக்கெட், ஹாக்கி, டென்னிஸ் போல, கார் ரேசிங்கில் அக்கா, தங்கை இருவருக்குமே, அதிக ஆர்வம்



இருந்தது இல்லை! தம்பி ஏதோ ஆர்வமாகச் சொல்லுகிறானே என்பதற்காகக் கேட்டுவிட்டு, உடனே மறந்தும் போய்விடுவார்கள்.

அப்படி மறக்கிறவர்களுடன், அவன் எப்படி, அது பற்றி அலசி ஆராய முடியும்?

ஆனால், இப்போது அவன் அதைத்தான் செய்து கொண்டிருந்தான்! அலசி ஆராய்தலை! அவனுக்குச் சரியாக விலாவாரியாக, இந்த வில்லன் சதானந்தனும், அவனோடு பேசிக் கொண்டிருந்தான். ஒரு நரேன் கார்த்திகேயனை, ஓகோ என்று புகழ்ந்து கொண்டிருந்தான். அவரும் இந்தப் பக்கம்தானாம். கோயமுத்தூர்க்காரராம். ஒரு தடவை, நேரிலேயே பார்த்துப் பேசினானாம்! ரொம்ப நல்ல குணமாம்!

அவ்வளவுதான்! இந்த சதானந்தனின் காலிலேயே விழுந்து கும்பிட, குணா தயாராகி விட்டான்!

ஆக, இதற்காகத்தான், குணாவை முன்புறம், அவன் பக்கத்தில் உட்காரச் சொன்னான் போல! சின்னப் பையனிடம் நைசாகப் பேசித் தன் பக்கம் இழுப்பதற்காக!

பெரிதாக, ''நான் இந்தக் காரை ஓட்டப் போகிறேனே தவிர, இந்தக் காரின் காரோட்டியாகப் பணி புரிகிறவன் இல்லை. அதனால், முன்புறம் என் அருகில் உட்கார்'' என்றபோது, அதை வார்த்தையளவில் ஏற்று, உண்மை தானோ என்றல்லவா சௌமினியும் எண்ணிவிட்டாள்.

சகோதரியைப் போலவே எண்ணிய குணாவும், மறுப்பின்றியே முன்புறமாக ஏறி அமர்ந்திருந்தான்.

இப்படி ஒரு திரிசமனை எதிர்பாராதது மட்டுமின்றி, இன்னமும் கண்டுபிடிக்கவும் இல்லாமல், கார் ரேசிங்

பற்றிய சதாவுடன் ரொம்பத் தீவிரமாகப் பேசிக் கொண்டு மிருந்தான்.

இப்போது என்ன பேசி குணாவைத் திருப்புவது?

இரண்டு முறை உரக்க அழைத்த பிறகுதான், அவன் திரும்பியே பார்த்தான். அதுவும் ''ஒரு நிமிஷம் சார்!'' என்று அவனிடம் அனுமதி கேட்டுக்கொண்டு!

ஒரு வழியாக அவன் திரும்பவும், ''குணா, நமக்கு இரவு உணவுக்கு ஏதாவது பார்க்க வேண்டுமடா! அக்கா விடம், ரயில் நிலையத்தில் பார்த்துக் கொள்ளுவதாகச் சொல்லிவிட்டேன். இந்த ரயில் நிலையத்தில் சரியாகக் கிடைக்குமோ, என்னவோ? அதனால் நல்ல ஹோட்டல் எதிலாவது, வாங்கிக் கொண்டு போய் விடலாமா? கண்ட இடத்தில் வாங்கி வயிற்றைக் கெடுத்துக் கொள்ள கூடாதில்லையா? நாளைக்குக் கல்லூரிக்குச் செல்ல முடியாமல் போய்விடக் கூடும். கோயம்புத்தூரில் நல்ல ஹோட்டல் எது என்று கேட்டுக்கொள்...'' என்று வாயில் வந்ததை எல்லாம், இயன்றவரை கோவையாக அவள் பேசிக் கொண்டே போக, பொறுமையிழந்து, குணசீலன் குறுக்கிட்டான்.

''மின்னி, அதைக் கோவை சென்ற பிறகே பார்த்துக் கொள்ளலாமே. இப்போது ரொம்ப முக்கியமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். என்ன?'' என்று மறுபடியும் சதானந்தனை நோக்கி, ''ஆனால் சார், மூன்று ஆண்டு களுக்கு முன்பாக நடந்த இட்டாலியன் கிராண்ட் ப்ரீயில், அலான்ஸோ...'' என்று விட்ட இடத்திலிருந்து பேச்சைத் தொடரலானான்.

ஆத்திரத்துடன் அவனை உறுத்து விழித்துவிட்டுப் பார்வையைத் திருப்பியவள் ஒரு கணம் திகைத்தாள்.



பின்புறம் பார்ப்பதற்கான கண்ணாடியில், சதானந் தனின் கண்கள், அவளைத்தான் ஏளனமாகப் பார்த்துக் கொண்டிருந்தனவா?

அடடா! அவன் பார்க்க குணாவை முறைத்து விட் டாளே!

அதனால் வந்ததுதான் ஏளனமா?

திட்டம் போட்டுக் குணாவைத் தன் பக்கம் இழுத்தது மட்டுமின்றி. உடன் பிறந்தோருக்குள் பிளவையும் ஏற்படுத்தி விட்ட கர்வம்!

ஆனால் அவன் அறியாதது ஒன்று உண்டு! இந்த ஒரு பேச்சில், குணா அவன் பக்கம் சாய்ந்துவிட மாட்டான். ஏனெனில், அவர்களைப் பற்றி, இந்த சதா கேவலமாகப் பேசியதை, அவனும் கேட்டிருக்கிறான்!

அதை அவன் லேசில் மறந்துவிட மாட்டான். மறக் கும்படி, சௌமினி விட்டு விடவும் மாட்டாள்!

கண்ணாடித் தோற்ற வட்டத்தை விட்டுச் சற்று அகன்று அமர்ந்து கொண்டு வெளியே பார்வையைப் பதித்தாள் அவள்.

கோவையை அடைந்த பிறகு, வேண்டும் என்றே, உணவு பற்றிய பேச்சை அவள் எடுக்கவே இல்லை!

மற்ற இருவருக்குமிடையே, காரிலிருந்து, பைக் ரேசுக்குப் போய், அங்கிருந்து விமானம் ஓட்டுவது பற்றி, சூடாகப் பேச்சு நடந்து கொண்டிருந்தது!

இருக்கட்டும், ஓடுகிற ரயிலில் காலி வயிறு கடமுடா எனும்போதுதான், இவ்வளவு நேரப் பேச்சும், வீண், உப்புப் பெறாத விஷயம் என்று, குணாவுக்குப் புரியும்!

செலவுக்குப் பார்த்திருப்பான் அந்த சதானந்தன் என்று கூட, ஏற்றி விடலாம்!

அவளுக்கும் பசிக்கும்... ஆனால் கஷ்டப்பட்டால் தானே ஜெயிக்கக முடியும்!

சௌமினி என்னென்னவோ கற்பனை செய்து கொண் டிருக்க, கோவை ரயில் நிலையத்தில் டிக்கெட்டோடு, இரவு உணவும் அவர்களுக்காகக் காத்திருந்தது!

சூடு குறையாமல் 'தெர்மோ பாட்'டில் வைக்கப்பட் டிருந்த உணவுப் பாக்கெட்டைத் திறந்து பார்த்த இரு வருமே திகைத்துப் போயினர்.

ஃப்ரைட் ரைஸ், நூடுல்ஸ் என்று எல்லாமே, சற்று அதிகப் பணம் பிடிக்கிற உயர்வகை உணவு! தகுந்த வியஞ்சனங்களோடு!

''என்ன மின்னி. இந்த ஆள் இவ்வளவு செய்கிறார்? அத்தான் பேரைச் சொல்லி, டிக்கெட் காசும் வாங்க மறுத்துவிட்டார்!'' என்றான் குணா ஆச்சரியத்தோடு!

அவளுக்கும் ரொம்பவே வியப்புதான். கண்டுகொள்ள மாட்டான் என்றே எண்ணியிருந்தாள். அப்படியே, உணவை நினைத்தாலும் பேருக்கு ஒரு தயிர்சாதப் பொட்டலத்தைக் கடனே என்று வாங்கிக் கொடுத்தால், அவன் குணத்துக்குப் பொருத்தமாக இருந்திருக்கும்... இது...

சட்டெனக் காரணம் புரிந்தது.

அங்கே திரும்பிப் போய், அத்தானிடம் உத்தமனாகக் காட்டிக் கொள்ள வேண்டுமே! இதை, அதை வாங்கிக் கொடுத்தேன் என்றால், அம்மா, முகத்தைத் திருப்பி



னாலும், தம்பியை தங்கக் கம்பியாக எண்ணி, அண்ணன் ஏமாறுவார் அல்லவா?

''தங்கக் கம்பியோ, பித்தளைக் கம்பியோ? அதை அப்புறம் பார்ப்போம். இப்போது பசி வயிற்றைக் கிள்ளு கிறது. சாப்பிட வா, அல்லது உன் பங்கையும் சேர்த்து நானே விழுங்கி விடுவேன்'' என்று முள் கரண்டியை எடுத்தான் குணா.

தங்கமா பித்தளையா என்பதில், உனக்கு சந்தேகம் வேறு வந்து விட்டதா என்று எண்ணினாள் சௌமினி.

ஆனால், அதை அப்போது வாய்விட்டுச் சொல்லாமல், ''எனக்கும் பசிதானடா!'' என்று, தானும் ஓர் உணவுப் பாக்கெட்டைத் திறந்தாள்.

# 7



தமக்கை இல்லாத வீடு மிகவும் வெறுமையாகத் தோன்ற, இருவருக்குமே கண்ணீர் வந்தது! அவளோடு, இரண்டு நாட்கள் தங்கி வரக்கூட முடியாத நிலை, இன்னும் அதிக வேதனையைத் தந்தது.

ஆனால், துன்பத்தை நினைக்க நினைக்க, அது சோர்வைத்தான் அதிகமாக்கும் என்பதால், அதிலிருந்து மீள்வதற்கான முயற்சிகளை எப்படிச் செய்ய வேண்டும் என்று அவர்களுடைய அன்பான சகோதரி, அவர்களுக் குக் கற்றுக் கொடுத்திருந்தாள்.

பெற்ற தாயின் மறைவிலிருந்து அவர்கள் மீண்டது, அப்படித்தான். மறந்துவிடாது. நீறு பூத்த நெருப்பாக, உள்ளே வருத்தம் இருக்கத்தான் செய்யும். ஆனால், அடுத்தடுத்த வேலைகளில், கவனம் செல்லச் செல்ல, வலி சற்றுக் குறையும்.

அதன்படி, சோர்வைப் பிடிவாதமாக உதறி, அடுத்துச செய்ய வேண்டிய வேலைகளை, இருவருமாகத் திட்டமிட்டனர். அன்றளவில், வீட்டுச் சுத்தம், சாமான் அடுக்குவது என்று, வேலைகளைத் தேடிப் பிடித்துச் செய்தனர்.

அடுத்து, குறிக்கோள். அவர்களது செல்வ நிலையை உயர்த்தக் கூடிய படிப்பு! அதை அடைவதற்கான அடிப்படை முயற்சிகள் பற்றித் தீவிரமாக யோசித்தார்கள்!

தம்பி, தங்கையின் படிப்புச் செலவுக்காக, சுரபி தன் திருமணத்தையே நிறுத்தி மிகப் பெரிய தியாகம் செய்தவள்.

அந்தத் தியாகம் வீணாகக் கூடாது என்று, திருமணத்துக்காக விடுப்பு எடுத்த தினங்களில், என்னென்ன பாடங்கள் நடந்தன என்று விசாரித்து, அவைகளைப் படித்தனர்.

இதிலேயே ஓரளவு மனது சமனப்பட்டு விட்ட போதும், குணாவும் சௌமினியுமாக இன்னும் ஆலோசித்தனர்.

இருவரும் நன்றாகப் படிக்கிறவர்கள் என்பதால், இன்னும் மேலே படிக்கும்படி, ஆசிரியர்கள், அவர்களுக்கு ஏற்கனவே ஆலோசனை வழங்கி இருந்தனர்.



ஆனால் அந்தப் படிப்பு சும்மா வராது! பெரும் பணம் தேவைப்படும் என்பதால், சுரபியிடம் அது பற்றி அவர்கள் இருவருமே சொல்லாமலே வைத்திருந்தார்கள்.

ஆனால், இப்போது வளர்ச்சி, வளர்ச்சி என்று அது பற்றியே தீவிரமாக ஆராய்ந்ததில், அதற்கும் ஒரு வழி தென்பட்டது!

அவர்கள் இருக்கும் ப்ளாட் சொந்தமானது. அதை ஈடுகாட்டி, கல்விக்கடன் பெற்று படிக்கலாமே.

அப்போதும், ஒரே இடத்தைக் காட்டி, இருவருக்கும் கடன் பெற இயலாது. அதனால், ஒருவர் வேலை செய்து, பொருள் ஈட்டி மற்ற செலவுகளைப் பார்க்க, அடுத்தவர் படிக்க வேண்டும். அப்புறம், முதலில் படித்து முடித்தவர் சம்பாதித்து, மற்றவரையும் படிக்க வைக்க வேண்டும்!

நாலே ஆண்டுகளில், இருவருமே, நல்ல உயர் நிலைக்கு வந்து விடுவார்கள்!

யார் முதலில் மேல் படிப்பு படிப்பது என்பதைக்கூட, இருவரும் இலகுவாகவே முடிவு செய்தார்கள். இருவருமே நன்றாகப் படிக்கிறவர்களே என்றாலும், ஓரிரு மதிப்பெண்கள், அவ்வப்போது கூடுவதும் குறைவதும் உண்டு. அதன்படி, பட்டம் பெறும்போது, யாருக்குக் கூடுதலாக மதிப்பெண் கிடைக்கிறதோ, அவர்கள் முதலில் மேல் படிப்புப் படிக்க வேண்டும்!

இதையெல்லாம் யோசித்து, பேசி முடித்தபோது, சௌமினி, குணசீலன் இருவருக்குமே, மனம் லேசாகி இருந்தது!

சுரபியைக் கஷ்டப்படுத்தாமலே, அவர்களே வளருவார்கள்! கஷ்டப்படுத்தாமல் மட்டுமில்லை. அவள் மகிழ்ச்சியடையும் விதமாகவும்!

இத்துடனும் கூட அவர்கள் விட்டு விடவில்லை!

தாயார் வாழுகிற காலத்தில் மூத்த பெண்ணின் திருமணத்தைக் கருத்தில் கொண்டு, அவளுக்காக நிறையச் சேர்த்த போதும், இளைய மக்களுக்காகவும் புத்திசாலித்தனமாகச் சில முதலீடுகள் செய்து வைத்திருந் தாள்.

தாயைப் பின்பற்றி, சுரபியும் அதே போன்று நம்பக மான நிதிகளில், தம்பி தங்கைக்குச் சேமித்துக் கொண்டே தான் இருந்தாள்.

எனவே, அவற்றின் மூலமாக அன்றாடச் செலவு களுக்குப் பணம் தாராளமாகவே வந்து கொண்டே இருந்தது! அப்படிப்பட்ட வருமானம் மட்டும் இல்லை என்றால், ஆனந்தனை என்னதான் உயிராக நேசித்தாலும், அவனைத் திருமணம் செய்ய, அவர்களுடைய அன்புத் தமக்கை சம்மதித்திருக்கவே மாட்டாளே!

அக்காவின் அன்பை எண்ணிச் சற்று நேரம் உருகிவிட்டு, இருவரும் மறுபடி யோசித்தனர்!

முன் போலப் படிப்பை மட்டும் பார்த்துக் கொண்டு, டி.வி. நண்பர்கள், என்று பொழுதைப் போக்கிக் கொண்டு, இப்போது அவர்கள் இருக்க முடியாது! கணவன் தவிர, சுரபிக்குப் புகுந்த வீடு சரியாக இல்லாததால், ஒரு கௌரவமான பிறந்த வீடாகவும், சின்னவர்கள் இருக்க வேண்டியிருந்தது!

கௌரவமான பிறந்த வீடு என்றால், அதன் அர்த்தம் பணம் அல்லவா?

இருவருமாக யோசித்து, கல்லூரி முதல்வரைப் போய் பார்த்ததில், அதற்கும் வாய்ப்பு கிடைத்தது!



நல்ல மாணவர்களைக் கண்டால், ஆசிரியர்களுக்குப் பரிவும், பாசமும் ஏற்படும்தானே?

கல்லூரியின் சோதனைக் கூடத்திலும், வாசக சாலை யிலும் பகுதி நேரப் பணி, ஊதியத்தோடு கிடைத்தது! இரண்டு பேரின் ஊதியமுமாகக் கையில் கணிசமாகப் பணமும் சேர்ந்தது!

ஐந்து நிமிஷங்களே என்றாலும், தினமும் தமக்கை யோடு சற்று நேரம் ஏதாவது அரட்டை அடிப்பார்கள். ஏதாவது ஒரு ஜோக்கில் பேச்சை முடிப்பது ஒரு கட் டாயம்!

''நீ இல்லாமல், வீட்டில் அதிக நேரம் இருப்பது கஷ்டமாக இருப்பதால்...'' என்று வேலை பார்ப்பதைப் பற்றி லேசாகச் சொன்னார்கள்.

ஆனந்தனின் அன்பு, வேலையாட்களின் பழகுமுறை எல்லாம் கேட்டு சந்தோஷப்பட்டார்கள்.

பலமுறை, ஆனந்தனோடு, பண்ணையைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்ததாகக் கூறுவாள்.

மாமியார், மைத்துனன் பற்றி, சுரபி ஏதும் சொல்லாத தில் இருந்தே, அவர்கள் இன்னமும் சரிவரப் பழக வில்லை என்று ஊகித்தார்கள்.

அவர்களைப் போலவே, கஷ்டத்தைத் தெரிவிக்காமல் மறைக்கிறாள்!

வெகு சில சமயங்களில், ஆனந்தன் தம்பியோடு வெளியே போயிருப்பதாகச் சொல்லுவாள்!

அந்த 'சில' சமயங்களில் 'பல'வாக, சதானந்தனைப் பற்றிப் பேசும்போது, சுரபியின் குரலில் இறுக்கம்

குறைந்திருப்பதாக, தம்பி, தங்கை இருவரும் எண்ணினர்.

''சாதாரணமாகப் பேசும்போது, சதா சார் நன்றாகத்தான் பேசுகிறார், மின்னி. அக்கா திருமணத்தையும் பணத்தையும் சேர்த்து எண்ணும்போதுதான், ஆளே மாறி விடுகிறார்!'' என்றான் குணசீலன்.

''மனிதனின் குணம் நிமிஷத்துக்கு நிமிஷம் மாறாதுடா! எப்போதுமே, அந்த ஆளுக்குக் கோரை பல்லும், கூர் நகமும்தான். ஏதாவது காரணத்துக்காக, அவ்வப்போது மறைத்து, நாடகமாடக் கூடும்!'' என்று திட்டவட்டமாகக் கூறினாள், கூடப் பிறந்தவள்.

''ஏய், ஏய் அப்படியில்லைடி. அன்றைக்குக் கார் ரேசிங் பற்றிப் பேசும்போது, கொஞ்சம் கூடப் பந்தாவே இல்லாமல், ஒரு சினேகிதனோடு பேசுகிற மாதிரி ரொம்ப சாதாரணமாகப் பேசினார், தெரியுமா?''

''ஏம்பா?'' என்று கேட்டாள், மற்றவள், ''எதற்காக?''

குணா விழிக்கவும் ''நமக்குள்ளே ஒரு சிறு உரசலை உண்டு பண்ணலாமே என்றுதான்! முதலில் என்னவெல்லாம் சொல்லி, நம்மைக் கிளம்ப வைத்தார்! கைக்கும் வாய்க்கும் இடையிலே என்று சொல்லி, நம்மை ரயிலில் ஏற்றி, ரயில் கிளம்பும் வரை, திரும்பிச் சென்று விடுவோமே என்று கூடவே இருந்தாரே! எவ்வளவு கேவலமாக நம்மை மதித்திருந்தால், அப்படிச் செய்திருப்பார்? நாம் அப்படிப் பட்டவர்களா, குணா?'' உணர்ச்சி வேகத்தில் குரல் நடுங்கக் கூறினாள் சௌமினி.

''நீ சொல்வது சரிதான், மின்னி. ஆனால், அக்கா வீட்டிலிருந்து எதுவுமே நமக்கு வராமல், நாமே பார்த்துக் கொண்டால், அதுதான், அவருக்குச் சரியான மூக்கறுப்பு, இல்லையா? கவனமாக இருக்க வேண்டும்!'' என்றான் குணா!



''அது மட்டுமல்ல. சொல்லிக் காட்டவும் வேண்டும்! அந்த ஆள் பதில் சொல்ல முடியாமல் திணறுவதைப் பார்த்தே ஆக வேண்டும்! அதுவரை, என் மனம் ஆறவே ஆறாது!'' என்ற சகோதரியைச் சற்று வியப்புடன் நோக்கினான் குணசீலன்.

''கட்டாயம் செய்வோம், மின்னி! அதற்குத் தேவையானபடி, திட்டம் கூடப் போட்டாயிற்றே! தேவையற்று மனதைப் போட்டுக் கசக்கிக் கொள்ளாதே! நேரில் போகும்போது, பார்த்துக் கொள்ளலாம்!'' என்றான்.

செப்டம்பர், அக்டோபரில், வரும் விடுமுறை நாட்களில், ஓர் ஆசிரியர் 'கோச்சிங்' கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார் என்று கூறி, குன்னூர்ப் பயணத்தைத் தவிர்த்தார்கள்.

ஆனால், தீபாவளிக்குக் கட்டாயம் வந்தே ஆக வேண்டும் என்று, சுரபி, ஆனந்தன் இருவருமே, ரொம்பவும் சொல்லவும், மீற முடியாமல், போயிற்று! அத்தோடு, கையிலும் ஓரளவு நன்றாகவே பணம் சேர்ந்திருந்ததால், அதிகம் தடை சொல்லாமல், அவர்களுமே, ஆசையாகவே அக்கா வீட்டுக்குக் கிளம்பி விட்டார்கள்.

ஆனந்தனும், சுரபியும் கோவைக்கே வந்து, இரட்டையரை வீட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

சந்தோஷமாகச் சளசளத்தபடியே வீட்டுக்குப் போனால், அங்கே துணிமணிப் பெட்டிகள் அருகில் கிடக்க, காபி

அருந்தியபடி, சதானந்தன் ஹாலில் சுகமாக உட்கார்ந் திருந்தான்!

வாயெல்லாம் பல்லாக, மாராயி அவனிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருப்பது, காரில் இருந்து இறங்கும் போது, ஒரு கோணத்தில் வெளியே தெரிந்தது!

''அன்றைக்குச் சொன்னார் பார், ஒற்றறிதல் என்று! அக்கா இல்லாத நேரத்தில், அக்கா வீட்டு வேலைக்காரியிடம் விசா ரித்துக் கொண்டிருக்கிறான், பார்!'' என்று அருகில் வந்து நின்ற குணாவின் காதோடு முணுமுணுத்தாள் சௌமினி.

ஆனால், வேறுபாடாக எதுவும் ஆனந்தனுக்குத் தெரிய வில்லை போலும்!''

''ஹேய் சதா, நீ எப்போதடா வந்தாய்?'' என்று சந் தோஷமாகவே விசாரித்தபடி, தம்பியின் அருகில் சென்று அமர்ந்தான்.

ஓர் அவசர ''வாருங்கள்!'' சொல்லிவிட்டு உள்ளே விரைந்த சுரபி, தீபாவளிக்குச் செய்து வைத்திருந்த பல காரங்களில் சிலதை, ஒரு தட்டில் எடுத்து வந்து, மைத்துனனின் முன்னே வைத்தாள் ''சாப்பிடுங்கள்!'' என்ற உபச்சாரத்துடன்.

''நான் சாப்பிடுவது இருக்கட்டும். ரயிலில் வந்த விருந் தாளிகளுக்கு அல்லவா, பசியும் சோர்வுமாக இருக்கும்! அவர்களுக்கும் எடுத்து வாருங்கள்!'' என்று சுற்றிலும் பார்த்துவிட்டு, ''நான் போய், வரவேற்றுக் கூட்டி வரு கிறேன்!'' என்று எழுந்து வந்தான்.

''என்ன? வாயிலிலேயே நின்று விட்டீர்களா? என்னைப் பார்த்தால், உள்ளே வரப் பயமா?'' என்று சின்னவர்களின் அருகில் வந்து கேட்டான்.



''நீங்கள் என்ன சிங்கமா, புலியா, உங்களைக் கண் டதும் பயப்படுவதற்கு? உங்களுக்குத்தான் நன்றாகத் தெரியுமே, சூதுவாதற்றுப் பசேல் என்றிருக்கும் செடி, கொடிகளைப் பார்ப்பதில், எங்களுக்கு ஆர்வம் அதிகம் என்று! கண்ட மனிதர்களைப் பார்த்து, மனநிலை கெடுவ தற்கு முன்னராக, முதலில் நல்லதைப் பார்த்து, சந் தோஷப்பட்டு விடலாம் என்ற எண்ணம்!'' என்றாள் சௌமினி, குத்தல் குரலில். ''ஆனால் நீங்கள் என்ன, பெட்டி பொட்டிகளுடன் இங்கே வந்து உட்கார்ந்து விட்டீர்கள்? உங்களுக்கும் அங்கே கல்தாவா?''

நேரடித் தாக்குதல்! சிறு தயக்கத்துடன் ஏதோ சொல்ல வாயெடுத்துவிட்டு, குணா சும்மா இருந்து விட்டான்.

ஆனால், சதானந்தன் தயங்குகிறவன் இல்லையே! ''தவறான ஊகம்! போன தடவை, நான் கவனிக்கிறேன் என்றுதானே, உடனே ஓடிப் போனீர்கள்? திரும்ப வந்திருக்கிறீர்கள் என்றால், மேலே என்ன திட்டமோ? அது நடக்காமல் கூடவே இருந்து கண்காணிப்பதற்காக வந்திருக்கிறேன்!''

பணம் என்பதற்கு மேலாகப் பாசம் என்று ஒன்று உண்டு என்று தெரியவில்லை என்றால், அது பரிதாபம் தான்!

ஆனால், என்ன மாதிரி நெருப்பை வாரிக் கொட்டு கிறான்!

குணா முகம் கன்றி நிறக, சௌமினி புருவங்களை உயர்த்தினாள்.

''என்னது? அழையாத விருந்தாளியாகவா?'' என்றாள் கிண்டலாக.

இப்போதும், அவனது பதில் உடனே வந்தது!'' என் தாத்தாவின் இந்த வீடு என்னதுதான். இங்கே வர, எனக்கு யாருடைய அழைப்பும் தேவையில்லை. வேண்டு மானால், என் அண்ணனிடமே கேட்டுப்பார்! எங்களுக் குள்ளும், நாங்கள் யாரையும் வரவிட்டதில்லை!''

உன் அக்கா கூட, வெளியே நிற்பவள்தான் என் கிறானா?

இராது. இவனிடம் கூடச் சொல்லாமல், அண்ணன் மணம் புரிந்த கோபத்தில் சொல்லுகிறான் என்று சௌமினி நினைத்தாள்.

ஆனால் இவனால் வேறு, சுரபிக்குத் தொல்லை வந்து விடக் கூடாதே!

எனவே, அமைதியாகவே, ''யோசித்துப் பாருங்கள் சதானந்தன், அக்கா, அத்தான் திருமணம் நடந்து நாலு மாதங்களுக்கு மேல் ஆகிறது. நீங்கள் சொல்லுகிற மாதிரி எண்ணம் இருந்தால், இதற்கு அத்தானிடம் ஏதாவது கேட்டு வாங்கியிருக்க மாட்டோமா?'' என்று வினவினாள் அவள்.

''ஆமாம் சார்! இன்று வரை, அதுபோல ஏதாவது நடந்திருக்கிறதா? யோசித்துப் பாருங்கள்!'' என்று குண சீலனும் கூடச் சேர்ந்து கேட்டான். கெஞ்சுவது போலக் கூட!

ஆனால், சதானந்தனின் ஏளனப் பார்வை, மாறுவ தாகவே இல்லை! சொல்வதானால், அவனது பார்வையில் கூர்மை கொஞ்சம் கூடிற்று என்றுதான் கூறலாம்!

லேசான உதட்டுப் பிதுக்கலுடன், ''ஓடு மீன் ஓட, உறு மீன் வரும் வரை, வாடியிருக்குமாம் கொக்கு'' என்பார்கள்.



சரியான தருணத்துக்காகக் காத்திருக்கிறீர்களோ, என் னவோ? இங்கே நான் வந்திருந்து, உங்கள் எண்ணத்தைக் கெடுத்து விட்டேன், இல்லையா?'' என்ற, தன் நிலையிலேயே பிடிவாதமாக நின்றான் அவன்.

இரட்டையர் இருவரும் அவனை வெறித்துப் பார்த் தார்கள். பிறகு, சௌமினி குணாவைப் பார்த்து ''மகா பாரதம் படித்திருக்கிறோமில்லையா, குணா? கெட்ட தையே பார்க்கிற துரியோதனனுக்கு, நல்லது என்றைக்குப் புரிந்தது? இந்த யுகத்திலும், அப்படிப்பட்ட முசுடுகள் இருப்பார்கள் என்று, இப்போதுதான் தெரிகிறது. இவர் களோடு பேசுவதே, வீண்! வா உள்ளே போவோம்!'' என்று கூறி, அவனது கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வீட்டினுள் சென்றாள்.

மீண்டும் மீண்டும், சதானந்தன் அவர்களைச் சந்தர்ப்ப வாதிகளாகவே சித்தரித்து, சொன்னதையே சொல்லிக் கொண்டு இருந்தது, குணா, சௌமினி இருவருக்குமே ஆத்திரத்தை அளித்தது!

குணசீலனுக்கு அதிர்ச்சியாகவும் இருந்தது! கார் ரேசிங் பற்றிப் பேசிய பிறகு, சதாவைக் கொஞ்சம் நல்லபடியாக எண்ணியது, இப்போது மடத்தனமாகத் தெரிந்தது!

ஆனால், தங்கள் கோபம், சீற்றம் எதையும் சுரபிக்கோ, ஆனந்தனுக்கோ காட்டிவிடாமல், இருவரும் கவன மாகவும் இருந்தனர். தமக்கையின் இன்ப வாழ்வில், அவர்களால் சிறு சலனம் கூட, ஏற்பட்டு விடக் கூடாதே!

இந்தப் பாசச் செயலைக்கூடத் தனக்குப் பயந்து, ஒதுங்கிப் போவதாகத்தான் சதானந்தன் எண்ணிக் கொள் வான். போகட்டும். உடும்பு மாதிரி, ஒன்றையே பிடித்துக் கொண்டு இருக்கட்டும்!

இங்கே இருக்கிறவரை எச்சரிக்கையோடு இருந்து விட்டு, மறுபடியும் பாடத்தையே காரணம் காட்டிக் கூடிய விரைவில் கிளம்பிவிட, வேண்டும் என்ற முடிவோடு, இருவரும் அமைதி காத்தனர்!

ஆனால், ஆனந்தனும், சுரபியுமாக, அவர்களுக்கு வாங்கி வைத்திருந்த தீபாவளிப் புத்தாடைகள், அவர்களைச் சற்று அதிர வைத்து விட்டன!

ஓரளவு எதிர்பார்த்ததுதான். என்றாலும் எல்லாமே, நல்ல உயர் வகைத் துணிகள்!

எப்போதுமே, நாலே உடை இருந்தாலும் நல்லதாக இருக்க வேண்டும் என்று, ஓரளவு உயர் ரகத் துணிகளைத்தான் சுரபி தேர்ந்தெடுப்பாள். இப்போது, இன்னமும் சிறந்தனவாக இருந்தன!

சற்று யோசித்துவிட்டு, ''அக்கா, வரும்போது, கோயமுத்தூர் ஷோகேஸ் ஒன்றில், ஒரு 'டாப்' பார்த்தேன். நீ வாங்கித் தந்திருக்கும் பாண்ட்டுக்கு, அது பிரமாதமாக இருக்கும். நானும், குணாவுமாகப் போய் வாங்கி வந்து விடுகிறோம்'' என்று சௌமினி, அன்றே செல்ல வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள்.

புரிந்து கொண்டு ''கோவை வரைதானேக்கா. பஸ்சிலேயே போய்விட்டு, விரைவாகத் திரும்பி வந்து விடுகிறோம்'' என்றான் குணசீலனும்.

சுரபிக்குச் சிரிப்பு வந்து விட்டது.

நகை முகத்துடனேயே, ''சரிம்மா. உங்கள் இஷ்டம். ஆனால், இன்று நாம் பண்ணைப் பொருட்களைக் கோவை கோடவுனுக்கு அனுப்பும் நாள். முன்புற சீட் இருவர் அமர வசதியாகவே இருக்கும் அதிலே போய் வாருங்கள்'' என்று



அனுப்பி வைத்தாள். கிளம்பும்போது, ''ஆனால் ரொம்ப செலவு பண்ண வேண்டாம், என்ன?'' என்று சொல்லியே விடை கொடுத்தாள்.

'சின்னம்மிணி'யுடைய தம்பி, தங்கை என்று, இருவருமே மரியாதையுடன் நடத்தப்பட்டனர்.

கோவையிலும், அவர்களுக்குத் தேவைப்பட்ட - இடத்துக்கு அழைத்துச் செல்ல, அலுவலகத்திலிருந்து ஆள் கூட அனுப்பினார்கள்!

இரண்டு கடை அலைந்து வாங்கும்போது, ''அக்காவுக்குப் புரிந்திருக்குமோ, மின்னி?'' என்றான் குணா.

''பின்னே? பிறந்ததில் இருந்து, நம்மைத் தெரிந்தவள், நாலு ஆண்டுகளாக, அம்மாவாகவே இருப்பவள். கண்டுபிடித்திருப்பாள். மற்றபடி அதிகச் செலவு பண்ண வேண்டாம் என்பாளா, என்ன?'' என்றாள் சௌமினி.

''பின்னே...? அக்கா, அப்படிச் சொன்ன பிறகு... எப்படி?...'' என்று அவன் தயங்க, ''அதெல்லாம் பார்க்க முடியாது, குணா. எதற்காகப் பணமாகக் கொண்டு வந்தோம்? நினைவிருக்கிறதுதானே? இப்போது, அதுதான் முக்கியம்! இதைப்பார். இந்த நிறம் நன்றாயில்லை? இதைக் கட்டினால், பொன்னால் வார்த்த சிலை மாதிரியே அக்காவுக்கு அழகாக இருக்குமே!'' என்றாள் அவள்.

நினைத்த மாதிரியாகவே எல்லாம் வாங்கிக் கொண்டு வந்து, பெருமையோடு காட்டிக் கொடுத்தார்கள்.

''அழகாக இருக்கின்றன!'' என்று கையில் வாங்கிப் பிரித்துப் பார்த்த சுரபியின் முகம் மெல்ல வாடலாயிற்று!

முன்னெச்சரிக்கையோடு இளையவர்கள் விலைச் சீட்டைக் கிழித்திருந்தபோதும், பொருளின் தன்மையில் விலை மதிப்பு தெரியத்தானே செய்யும்?

கணவனிடம் காட்டிவிட்டுக் கண்ணில் வலியோடு தம்பி தங்கையைப் பார்த்தாள் சுரபி.

''என்னடா இது? எங்களுக்குக் கொடுக்க ஆசை என்றால், பெயருக்கு ஏதேனும் வாங்கினால் போதாதா? இவ்வளவு விலையில், நீங்கள் வாங்கித் தந்துதான் ஆக வேண்டுமா? அதுவும்... அதுவும் உங்கள் இருவருக்கும் வாங்கித் தந்ததைக் கணக்குப் போட்டு, அதே அளவுக்கு வாங்கிய மாதிரி... மின்னி, குணா, என்ன இது?'' என்று வருத்தமும் கோபமுமாகக் கேட்டாள்.

அதே உணர்ச்சிகளையே காட்டியபோதும், ''ஏன்? உங்களுக்கு வாங்கித்தர, எங்களுக்கு உரிமை இல்லையா? அன்னியம் மாதிரித் திருப்பியிருக்கிறீர்கள்?'' என்ற ஆனந்தனின் கேள்வியில், சற்றுக் கடுமையும் இருந்தது!

அவனுடைய தம்பி சதானந்தனின் முன்னிலையில் கேட்கப்பட்ட இந்தக் கேள்விக்கு, என்ன பதில் சொல்வது என்று புரியாமல், குணாவும், சௌமினியும் திணறிப் போயினர்.

# 8



அக்காவும் அத்தானும் வாங்கிக் கொடுத்ததைக் கணக்குப் போட்டுத்தான், அந்தத் தொகைக்குக் குறை



யாமல் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று கணக்கிட்டுத்தான், இரட்டையர் இருவரும் அக்கா குடும்பத்துக்காக, அந்தத் துணிகளை வாங்கி வந்தனர்!

ஆனால் சும்மாவே அன்னியம் மாதிரி என்று கோபப்படும் அத்தானிடம், அதைச் சொல்ல முடியுமா?

ஒன்றையும் கவனியாதவன் போலப் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த சதானந்தனைப் பார்க்கையில், சௌமினிக்கு உள்ளே கொதித்துக் கொண்டு வந்தது! அவனது அடிப்படையற்ற, அநியாயக் குற்றச்சாட்டுதானே, இவ்வளவு தூரம் இந்தக் கணக்குப் பார்த்ததற்கும் முக்கியமான காரணம்?

ஆனால் அந்தக் கொதிப்பையும்தான் வெளிப்படையாகக் காட்ட முடியுமா?

ஒன்றுமே முடியாதே!

பார்த்தாயா என்பது போலக் குணசீலன் நோக்க, சௌமினி வேறு சொன்னாள். ''ஐயோ, அப்படி இல்லை, அத்தான். கடையில் பார்த்தால், இந்தத் துணிகள், அப்படியே உங்களுக்கென்றே தயாரிக்கப்பட்டவை போல, அவ்வளவு பொருத்தமாக, எங்கள் மனதுக்குப் பட்டன. அதிலும் இந்தச் சேலையைக் கட்டினால், அக்கா தங்கப் பதுமை மாதிரி அழகா... க இருப்பாளே என்று தோன்றியதா, வேறு எதையும் பாராமல் பில் போடச் சொல்லி விட்டோம்! அக்கா சேலைக்குப் பொருந்தும் விதமாக, உங்களுக்கும் வாங்கினோம்! நன்றாக இருக்கிறது என்று, நாங்கள் ஆசையாக வாங்கி வந்தால், என்ன வெல்லாமோ பேசுகிறீர்களே, அத்தான்!'' குரலில் ஏற்றத் தாழ்வும், குறையும் நிறையுமாக, சௌமினி அவசரமாகப்

பேசி, கடைசியில் அழாக் குறையாகக் கூறி முடிக்கவும், கணவனும் மனைவியும் ஓரளவு சமாதானமாயினர்!

''ரொம்பவே, நன்றாகத்தான் இருக்கின்றன. ஆனால் கணக்குப் பாராமல், இவ்வளவு விலையில் வாங்கியது தான் சிறு பிள்ளைத்தனமாக இருக்கிறது! இனிமேல் கவனமாக இருங்கள். இந்தப் பணத்தை...'' என்று ஆனந்தன் ஏதோ சொல்ல வருமுன், ''திருப்பித் தரக் கூடாது. நாங்கள் ஆசையாக வாங்கியது. அதில் கணக்கே பார்க்கக் கூடாது!'' என்று இருவருமே சேர்ந்து மறுக்கவும், அந்தப் பேச்சு அப்போது நின்றது.

துணிகளை அலமாரியில் வைக்க சுரபி உள்ளே போனபோது, இவ்வளவு நேரமும் அந்த அறையில் நடந்த எதிலும் பட்டுக் கொள்ளாமல் மும்முரமாகப் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த சதானந்தன், முதல் முறையாகப் பேசினான்!

''அது ரொம்பவே சரிதான்! சின்ன மீனைப் போட்டுத் தானே, பெரிய மீனைப் பிடிக்க வேண்டும்!'' என்றான் ரொம்பத் தெளிவான குரலில் பிசிரற்று!

சரக்கெனத் திரும்பினாள் சௌமினி. அண்ணன் முன்னிலையிலேயே தொடங்கி விட்டானா என்று அவன் மனம் கொதித்தது!

மனைவியின் சோர்ந்த நடையைப் பார்த்துக் கொண்டிருந்த ஆனந்தனும், தம்பியின் பக்கம் திரும்பிப் பார்த்தான். ''என்னடா? என்ன மீன்?'' என்று கேட்டான்.

அவள் புறமாகப் பாய்ந்த ஓரக் கண் பார்வையை, ஒரு தலைச் சிலுப்பலுடன், சந்தித்தாள் சௌமினி.



''அதில்லை அண்ணா. நம் ஊர்க் குளத்தில், பெரிய பெரிய மீன்கள் தென்படுகின்றனவாம்! வலை போடத் தடை. தூண்டிலில் எவ்வளவு வேண்டுமானாலும் பிடித்துக் கொள்ளலாமாம். பெரிய மீன் வேண்டும் என்றால், தூண்டிலில் புழுவை விடவும், சின்னப் பொடி மீன்களை மாட்டினால், பேசிய மீன்களை இலகுவாகப் பிடிக்க முடியும் அல்லவா? உன் விருந்தாளிகளுக்கு மீன் பிடிக்கப் பிடிக்கும் என்று நினைத்தேன். அதனால்தான் சொன்னேன்'' என்று விளக்கினான் சதானந்தன்.

சதானந்தனாம், சதானந்தன்! இவன் இருக்கிற இடத்தில் சாதாரண ஆனந்தத்துக்கே வழியிராது! இதில் சதா ஆனந்தம் எங்கிருந்து வரும்?

ஆத்திரத்துடன் எண்ணமிட்ட சௌமினி, வேறு வித மாகத் தாக்கினாள்!

''சொன்னதையே சொல்லுமாம் கிளிப்பிள்ளை! அதை, இங்கேதான் பார்க்கிறேன், அத்தான்! இந்த மீன் பிடி விவரத்தை, உங்கள் தம்பி, மூன்றாவது தடவையாகச் சொல்லுகிறார்'' என்றாள் அவள் கேலி போல.

''இன்னொரு தரம், இதைச் சொல்லி அறுத்து வைக்காதேடா சதா. சின்னப் பெண் என்றாலும், சௌமினி கெட்டிக்காரி. ஒரே தடவையில் பிடித்துக் கொள்வாள்!'' என்று மைத்துனியை மெச்சினான் ஆனந்தன்.

''சின்னப் பெண்ணா? இவளா? வெளியே போய் சம்பாதித்து, குடும்பத்தைக் கவனிக்கிற வயது, தகுதி உடையவளைச் சின்னப் பெண் என்பதா? கிடையாது! நீ சொன்னது போல, எல்லாம் புரிவதிலும் ஆச்சரியமே இல்லை! ஆ...னால், அடிக்கடி புரியாத மாதிரிச் சும்மா இருப்பது எல்லாம், வெறும் நடிப்பு என்று சொல்லு.''

''பின்னே என்ன, சதா? முகத்துக்கு நேரே, போரடிக் காதே என்று சொல்வாளா, என்ன? மரியாதையாகுமா?'' என்று அப்போதும், வெகுளித்தனமாகவே பேசினான் ஆனந்தன்.

ஆனால், இந்த மீன் பிடிக்கிற பேச்சு அத்தோடு நிற்கவில்லை!

பெரியவர்கள் இல்லாத தனிமையில் சந்திக்க நேர்ந்த போது, இதை நேராகவே, சௌமினி, சதானந்தனிடம் கேட்டாள்.

''அக்காவும் அத்தானும் அவர்களாகவே வாங்கிக் கொடுத்தாலும், என்னவோ, நாங்கள் திட்டமிட்டு, இது போலப் பிடுங்க வந்ததாகவே பேசுகிறீர்கள். அப்படி யில்லை என்று ஏதோ ஒரு வகையில் திருப்பிக் கொடுத் தாலும், அதையும் வேறு எதற்கோ அடி போடுவதாகவே சொல்லுகிறீர்கள். இந்த, வேண்டாத மருமகள் என்ன செய்தாலும் தப்பு என்பார்களே, அதுபோல் அநியாயமாக இல்லை?'' என்று எரிச்சலாகக் கூறினாள் அவள்.

புரியாத மாதிரி நடிக்காமல், சதானந்தனும் வெளிப் படையாகவே பதில் சொன்னான், ''ஒன்று சொல், சௌமினி. தீபாவளிக்கு வருகிறீர்கள்! இங்கே ஏதாவது வாங்கி வைத்திருப்பார்கள், என்று தெரியாமலா போகும்? சென்னையிலேயே, உன் சகோதரிக்கு ஏதாவது, ஏன் வாங்கி வரவில்லை? நான் கண்காணிப்பதற்கு இங்கே இருக்கிறேன் என்றதால் தானே, திருப்பித் தரவும் தோன்றியிருக்கிறது?'' என்று கேட்டான்.

''அப்படியில்லை'' என்றவளிடம் அவனுக்குச் சொல்ல உண்மையான பதில் இருந்தது.



''நாங்கள் வாங்கி வருவது, இங்கே எங்களுக்காக வாங்கி வைத்திருப்பதைவிடவும் விலை குறைந்ததாக இருந்துவிடக் கூடாதே என்பதற்காகத்தான், அங்கிருந்து பொருளாக வாங்கி வரவில்லை! மற்றபடி, அக்கா வீட் டுக்கு வருகிறவர்கள், வேறு எதற்காக இவ்வளவு பணத் தைக் கையில் கொண்டு வரப் போகிறோம், என்கிறீர் கள்?''

''தேவையில்லாது போனால், அப்படியே திருப்பிக் கொண்டு போய் விடலாமே என்று எண்ணியிருக்க லாமே!''

''சே! உங்களிடம் எல்லாம் பேசுவதே வீண்!'' என்ற படி, அங்கிருந்து அகன்று போனாள் அவள்.

வெறுமனே தோளைக் குலுக்கினான் சதானந்தன்.

மனம் வெறுத்துப் போயிற்று, சௌமினிக்கு.

என்ன சொன்னாலும், அதில் ஒரு குறையைக் கண்டு பிடித்துச் செய்யாத குற்றத்தைச் செய்வதாகச் சொன்னால், அப்புறம் அவனிடம் பேசி என்ன பயன்?

அவனிடம் இருந்து ஒரேயடியாக விலகி விடவும் முடியாமல், அவளுடைய அன்பான அக்கா, இங்கே இருக் கிறாள்! இவனும், உரிமை உள்ள உறவுக்காரனாக வந்து, இந்த வீட்டிலேயே உட்கார்ந்திருக்கிறான்!

வீட்டில்தான் முடியாது. இங்கே எங்கேனும் வெளியே...

சதானந்தனிடமிருந்து எவ்வளவு முடியுமோ, அவ் வளவு தூரம் விலகிச் செல்வதிலேயே குறியாக, சௌமினி வெகு நேரம் நடந்தாள்.

திடுமென ''அசையாதே! அசைந்தால் ஆபத்து!'' என்று அதட்டல் குரலில்.

அவளது உடம்பு தானாகப் பணிந்து, அசைவற்று நின்றது!

சற்றே சுய உணர்வடைந்து, கண்களை மட்டும் சுழற்றிப் பார்த்தால், சற்றுத் தூரத்தில் ஒரு புதர் அகில், இரு முள்ளம்பன்றிகள் அவளையே வெறித்துப் பார்த்த படி, நின்று கொண்டிருந்தன.

குத்திட்டு நின்ற முட்களைப் பார்க்கையில் ஒரு மாதிரி இருந்தபோதும், அவைகளால் என்ன பண்ண முடியும் என்றே தோன்றியது!

தோளைக் குலுக்கிவிட்டு மேலே செல்ல வேண் டியதுதான் என்று அவள் முடிவு செய்கையில், விறைப் பாக நின்ற முட்கள் படிய, முள்ளம் பன்றிகள் இரண்டும் எங்கோ ஓடிச் சென்று மறைந்தன.

பின்னிருந்து அதட்டியவன், சதானந்தன்தான் என்று, திரும்பிப் பாராமலே சௌமினியால் உணர முடிந்தது.

ஆனால், சுற்றுப்புறம் சற்று மிரள வைத்தது! அன்று வரை கால் வைத்தறியாத வனப்பகுதி! சிறு குன்றுகள் மாதிரிப் புதர்களும், தாறுமாறாக வளர்ந்திருந்த செடிகொடி களும் பொதுவாக ஆள் நடமாட்டம் இல்லாத இடம் என்று காட்டின.

வெறி பிடித்து நடந்ததில், எங்கே, என்ன என்று எதையும் கவனியாமல், நடந்திருக்கிறாள்!

அவளது நல்ல காலம், காலில் செருப்பு இருந்தது. அல்லது, எத்தனை முள் குத்திக் கால்களைப் புண்ணாக்கி இருக்குமோ?

முள் மட்டுமல்லவோ?



நல்லவேளையாகப் பகல் நேரம். சதானந்தனும் துணையிருக்கிறான்! வந்த வழியே போய் விடலாம் என்று திரும்பி, அவனோடு சேர்ந்து, மெல்ல நடக்க லானாள் அவள்.

ஆனால், வரும்போது இல்லாத கவனம். இப்போது பார்வையில், நடையில் இருந்தது! விரைந்து போவதாக எண்ணி, ஏதாவது பூச்சி, பொட்டின் மேல் மிதித்து விடக் கூடாதில்லையா?

வரும்போது நல்லபடியாகத் தப்பியதே அதிசயம்!

கூட நடந்தபடி, "பரவாயில்லை, இப்போதாவது, புத்தி வேலை செய்கிறதே!'' என்றான் சதானந்தன்,

அதே ஏளனக் குரல்!

எதற்காகக் கண் மண் பாராமல் நடந்து வந்தாள் என்பது நினைவு வர, முகம் திருப்பி விலக முயன்றாள் அவள்.

சட்டென அவளது கையைப் பற்றித் தடுத்து, "இன்னும் கொஞ்ச தூரத்தில் எல்லோரும் புழங்குகிற பகுதி வந்து விடும். அதுவரை கவனம் அப்படியே இருக்கட்டும்!'' என்றான் அதட்டலாக.

பிடித்த கையை விடாமலே, அவன் மேலே செல்ல வும், பொறுமையை இழுத்துப் பிடித்த வண்ணம், அவளும் நடந்தாள்.

வனப்பகுதி தாண்டி, வழித் தடங்கள் கண்ணில் படவும், கையைப் பலமாக உதறி விடுவித்துக் கொள்ள சௌமினி நினைத்தாள். அதற்குள்ளாகவே அவனே, அவளது கையை விட்டு விட்டு விலகிப் போனான்.

ஆத்திரத்தைக் காட்ட வேறு வழியில்லாமல், "சாது வாக ஒடுகிற முள்ளம் பன்றிகள்! அவை என்ன பண்ணும்?

சில பேருக்கு, அடுத்தவரை வறட்டு அதிகாரம் பண்ணிப் பார்க்கவே எப்போதும் ஆசை! சும்மாவேனும் மிரட்டுவது! அடுத்த முறை திருப்பிக் கொடுத்து விடுவேன்... ஜாக் கிரதை!'' என்று படபடவென்று பொரிந்து கொட்டி விட்டு, வீட்டை நோக்கி விரைந்தாள் அவள்.

அத்துடனும் அந்த விஷயம் முடியவில்லை!

இரவு உணவின் பின் தமக்கையுடன் பேசிக் கொண் டிருக்கும்போது, வேண்டும் என்றே, சௌமினி இந்தப் பேச்சை எடுத்தாள்.

சதானந்தனின் வெற்று வேட்டுத்தனத்தை, விளம்பரப் படுத்த வேண்டாமா?

இந்தப் பக்கத்து விவரம் தெரியாதவள் என்பதற்காக, ஒன்றுமில்லாத ஒன்றுக்காக, அவளை மிரட்டினானே!

''அக்கா, நான் இன்றைக்கு, இரண்டு முள்ளம்பன்றி களைப் பார்த்தேன்! உடைந்த துடைப்பக் குச்சிகளை உடம்பில் ஒட்ட வைத்த மாதிரி சிலிர்த்துக் கொண்டு...'' என்று தொடங்கினாள்.

அவ்வளவுதான் ''ஐயோ! எங்கே?'' என்று பதறிப் போனாள் சுரபி. ''இங்கே புழங்குகிற வீட்டுப் பகுதியிலா? வராதே! பொதுவாக புதர்ப் பக்கங்களில்தானே அதிகம் இருக்கும். மின்னி, குணா, இருவரும் நன்கு கவனியுங் கள். முள்ளம்பன்றிகளை எங்கேனும் கண்டால் அதுவும் முட்களை சிலிர்த்துக் கொண்டு இருக்கும்போது பார்த் தால், பாம்பைப் பார்க்கிற மாதிரி அசையாமல் நின்று விடுங்கள். அசைந்தால், அதற்கு நம்மால் ஆபத்து என்று எண்ணி, நாம் ஒரு தரம் கண் சிமிட்டு முன், பத்து முட்களை நம் மீது எறிந்துவிடும். முள் பட்ட இடம் தேள்



கொட்டியது போலக் கடுக்கும்! அதனால் அவைகளை எங்கே பார்த்தாலும், மிகவும் ஜாக்கிரதையாக இருங்கள். பன்றிகள் நகருமுன், அசையவே அசையாதீர்கள்!'' என்று பலமாக எச்சரிக்கை செய்தாள்.

சௌமினி திணறிப் போனாள்.

இந்த விஷயத்தில் சதானந்தன் நல்லதுதான் செய் திருக்கிறான்!

அண்ணனுடைய மைத்துனி என்று செய்தானோ? அல்லது, ஏதாவது இழுத்துக் கொண்டு படுத்து விட்டால், சவரட்சனை பார்ப்பது, அண்ணன் தலையில்தானே விழும் என்று எண்ணினானோ?

எப்படியும், சற்று ஆபத்தான வழியில் போவதைக் கவனித்து, பின்னோடு வந்து, சரியான சமயத்தில் எச்சரித்துக் காப்பாற்றியிருக்கிறான்.

ஆனால், எப்போதும் அவர்களைத் தப்பாகவே நினைத்து, வலிக்கப் பேசுகிற இவனுக்கு, நன்றி சொல்வது எப்படி?

இப்போது கூடக் கோபமாகத்தான் பேசி விட்டு வந் தாள்.

சூழ இருப்போருடன் நல்லிணக்கத்தோடு பழக வேண்டும் என்ற கோட்பாடோடு பல ஆண்டுகளாக வாழ்ந்ததோ, என்னவோ, இப்போது ஒரே வீட்டுக்குள் இருக்கும் ஒருவனிடம் நியாயமற்று ஆத்திரப்பட்டது, அவளை ரொம்பவும் உறுத்தியது!

ஆனால் முதலில் அந்தத் தப்பைச் செய்தது, அவன் தான். நியாயமற்று, அவர்களைத் தப்பாகப் பேசியது!

என்ன வாதாடினாலும், கிட்டத்தட்ட நிரூபிக்கவே செய்தாலும், அவன் செய்த, இன்னமும் செய்து வரும் தப்பை, சதானந்தன் ஒத்துக்கொள்வதாகக்கூட, இல்லை! இத்தனை மாதங்களில், அவர்களைப் பற்றி ஒரேடியாகப் புரியாமல் இருக்கவும் முடியாது!

ஆனால், தொண்டையில் முள் சிக்கின மாதிரியான இந்த உறுத்தல், அவனுக்கு நேர்ந்திருப்பதாகவே தெரியவில்லையே!

ஆனால், மனசாட்சி இருந்தால் அல்லவா, நியாயமும் அநியாயமும், ஒருவனுக்குப் புரியவே கூடும்?

என்னவோ? அவளைப் பொறுத்த வரையில், இப்படி மனச்சாட்சியற்று இருக்க முடியாது!

சங்கடமாகவே இருந்தாலும், உறுதியோடு சதானந்தனின் பக்கம் திரும்பி ''வந்து... எ... எனக்குத் தெரியாது... சாரி!'' என்றாள்.

''இப்போது தெரிந்து விட்டால், அது போதும்'' என்றான் சதானந்தன் சுருக்கமாக.

''என்னது? என்ன சாரி?'' என்று அவசரமாகக் கேட்டாள் சுரபி.

புகுந்த வீட்டு முக்கியமான உறவினன் சதானந்தன், என்றேனும் மாமியார் மனம் மாறி, அவர்களை ஏற்பதானால், அது, தன் தம்பியின் முயற்சியால் மட்டுமே நடக்கக்கூடும் என்று, அவளுடைய கணவன் சொல்லியிருந்தான்.

அண்ணி என்று இன்னமும் அவளை அழைத்தது இல்லைதான். என்றாலும், அண்ணன் வீடு என்று வந்து



தங்கும் அளவுக்குச் சதானந்தனே, இப்போதுதான் இளகியிருக்கிறான்! இந்தச் சமயத்தில் போய், தம்பி, தங்கையோடு ஏதாவது தகராறாகி இதுவும் கெட்டு விடக் கூடாதே என்பது அவளுக்கு!

கவலையோடு அவள் கேட்கவும் ''ஒன்றும் இல்லை யக்கா. முள்ளம் பன்றி பற்றி இப்படி ஏதோ சதானந்தன் சார் சொன்னபோது, நான் அதை ஒத்துக் கொள்ளவில்லை. இந்தப் பக்கம் பற்றித் தெரியாதவள் என்பதால், சும்மா மிரட்டல் கதை விடுகிறார் என்று நினைத்து விட்டேன். இப்போது, நீ சொன்ன பிறகுதான், அவரும் உண்மையே பேசியிருக்கிறார் என்று புரிந்தது. அவரைத் தப்பாக நினைத்ததற்குத்தான் சாரி சொன்னேன்'' என்று தமக்கை, அமைதி அடையும் விதமாக விளக்கினாள் தங்கை.

கூடவே, ஒத்துப் பேசுமாறு... குறைந்த பட்சமாக, மறுத்துப் பேசாதிருக்குமாறு, கெஞ்சலை உள்ளடக்கிய பார்வை ஒன்றையும் சதானந்தனிடம் செலுத்தி வைத்தாள்.

மதிப்பானா?

முழுதும் கவலை அகலாத முகத்துடன் சுரபி அவன் புறம் திரும்பவும், ''உப்புப் பெறாத, ஒன்றுமே இல்லாத விஷயம்! இதற்கெல்லாம் சாரி சொல்லிப் பெரிதுபடுத்துவது, ரொம்பவும் அதிகப்படி, சௌமினி!'' என்று சதானந்தன், சின்னவளிடம் நேரடியாகக் கூற, ஒருவாறு சுரபியின் முகமும் தெளிந்தது!

ஆனால், எல்லோரும் 'மின்னி மின்னி' என்று அழைக்கையில், சதானந்தனின் 'சௌமினி' பெயருக்கு சொந்

தக்காரிக்குத்தான் வித்தியாசமாக ஒலித்தது! பிடித்ததா, பிடிக்கவில்லையா என்றும் புரியாத நிலை!

அதற்குள் ''முள்ளம்பன்றி, இருக்கிற மிருகக் காட்சி சாலைக்குப் போகலாமா, கூடாதா? போனாலும், அங்கே அசையலாமா, கூடாதா என்று எனக்கு ஒரே யோசனைக்கா! ஏனென்றால், ராமபாணம் ஏழு மரங்களை ஒன்றாகத் துளைத்து வருமாமே! அதுபோல முள்ளம்பன்றி முள்ளும் எங்கிருந்தாவது வந்து தாக்கி விட்டால்?'' என்று சாதுவாக வினவினான் குணசீலன்.

''எனக்குக் கூட, அவ்வப்போது ஒரு சந்தேகம் குணாம்மா. உன் மண்டைக்குள் இருப்பது, மூளையா, சைனா களிமண்ணா என்று!'' என்று சுரபி பதில் கொடுக்க, வாய்ப்பை விடாமல், சௌமினி அங்கே திரும்பினாள்.

''இதில் சந்தேகம் வேறா? எனக்கு எப்போதோ நிச்சய மாகத் தெரியுமே! களிமண்ணேதான்! இவனைப் பற்றி, இன்னும் இது போலச் சந்தேகங்கள் எழுந்தால், என்னிடம் வாக்கா! நான் தீர்த்து வைக்கிறேன்! ஏனென்றால், இங்கே உள்ளே, அவ்வளவு இருக்கிறது!'' என்று தன் தலையைத் தொட்டுக் காட்டிச் சொன்னாள்.

''அப்படியா? அவ்வளவு நிறையாவா?'' என்று வியந்துவிட்டு ''ஆனால் என்ன பிரயோசனம், மின்னி? அந்தக் களிமண்ணை வைத்து, ஒரு சட்டி, பானை செய்யக்கூட, எனக்குத் தெரியாதே'' என்று சீரியசாகச் சொன்னாள் அவள்.

''ஹே...'' என்று குணசீலன் கைதட்ட, மற்றவர்கள் சிரிக்க, சௌமினிக்குச் சென்னையில் இருப்பது போலக் குதூகலம் உண்டாயிற்று!



அதுவும் சதானந்தனும் சிரிப்பதைப் பார்த்ததும், காற்றில் பறக்கிற மாதிரி, அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது! இவன் எப்போதும் சிரித்துக் கொண்டிருக்கக் கூடாதா என்று ஏக்கம் கூட உண்டாயிற்று!

ஏக்கமா என்று ஒரு கணம் திகைத்து விட்டு, இவன் இங்கே சிரிப்பதானால், சுரபியின் பிரச்சினை சீக்கிரம் தீருமே என்று தான் என்று, சந்தோஷத்தின் காரணத் தையும் கண்டு பிடித்தாள் அவள்.

எப்படியோ, அதற்கு மேலாக எந்தப் பிரச்சினையும் இல்லாமல், தீபாவளிக் கொண்டாட்டம் நல்லபடியாக நடந்தேறியது.

சுரபியும் ஆனந்தனுமாக, சதானந்தனுக்கும் புத்தாடை கள் வாங்கி வைத்திருந்து கொடுத்தார்கள்.

பதிலுக்குத் துணிகள் வாங்காவிட்டாலும், உயர் வகையான இனிப்புகளும், பட்டாசு, வாணங்கள் என்று சதானந்தனும் நிறையவே கொண்டு வந்தான்.

சுரபிக்கு வாங்கிக் கொடுக்க விருப்பம் இல்லாமல், இப்படிச் செய்தானோ என்று உள்ளூர நிறையவே சந் தேகம் இருந்தாலும் சௌமினி, அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ஒருவேளை, தாயாருக்காகவும் தயங்க லாம் அல்லவா? அந்தத் தாயாரின் மனம் கனிந்தால், எல்லாமே சரியாகிப் போய்விடலாம்!

அவளையும் குணாவையும் பற்றிய, சதானந்தனின் சந்தேகமும் மறைந்து போய்விடலாம்!

அந்தக் கற்பனையே மகிழ்ச்சியை அளிக்க, விழாக்கால உற்சாகம் குறையாமலே, தீபாவளியைக் கொண்டாடி விட்டு, உடனேயே கல்வியைக் காரணம் காட்டி மீண்டும்

சென்னை வந்து சேர்ந்து, இருவரும் முழு மூச்சாகப் படிப்பைத் தொடர்ந்தனர்!

கடைசி செமஸ்டர்! கடுமையாக உழைத்தபோதும், வருமானத்தையும் விட்டுவிட, அவர்கள் தயாரில்லை! அத்தோடு, வேலையே படிப்புக்கும் உதவியாக இருந்த தால், கல்லூரி வேலை தொடர்ந்தது!

கடைசிப் பரீட்சை முடிந்து வெளியே வரும்போது, மிகவும் நன்றாகச் செய்திருக்கும் உணர்வு, இருவருக்குமே இருந்தது!

படிப்பு முடிந்து, விடுமுறையும் தொடங்கியது!

சுரபி தாயாகப் போகிறாள் என்ற நல்ல சேதி கிடைக்கவும், இரண்டு பேருமே, உற்சாகத்தில் துள்ளிக் குதித்தனர். அங்குள்ள அத்தனை ப்ளாட்வாசிகளுக்கும், சாக்லேட் விநியோகம் நடந்தது!

சுரபியைப் பார்க்கும் ஆவல் அதிகம் இருந்தபோதும், அதைவிடவும், இனித் தள்ளிப் போட முடியாது என்பதற் காகவே, இரட்டையர் இருவரும் தமக்கை வீட்டுக்குக் கிளம்பிச் சென்றனர்.

அங்கே உள்ளூரச் சிறு வருத்தத்துடன் சௌமினி எதிர்பார்த்தது போலவே, அவர்களைக் கண்காணிப்ப தற்காக, சதானந்தனும் துணிமணிகளோடு வந்து காத் திருந்தான்! அவர்களிடம் மட்டும், அவன் அதை மறைக்கவுமில்லை!

'அந்த ஆள் புத்தி' என்று குணாவைப் போல அலட் சியப்படுத்த முடியாமல், சௌமினிக்கு வேதனையாகத் தான் இருந்தது!



# 9



தம்பி உரிமையோடு வந்து, தன்னோடு தங்குவதே ஆனந்தனுக்குச் சந்தோஷமாக இருந்தது. உடன் பிறந்த சகோதரன் அல்லவா?

ஆனால், தம்பி எதுக்காக திடும் திடுமென வருகிறான், எந்தெந்தச் சமயங்களில் மட்டும் வருகிறான் என்று, அவன் யோசித்துப் பார்த்தது போலவே, சௌமினிக்குத் தோன்றவில்லை!

தாயாரின் ஒதுக்கலால் உள்ளூர வாடியிருந்த அவ னுக்கு தம்பியின் வரவு, ஒரு விதமான ஒப்புதலாகத் தோன்றியது போலும்!

அண்ணி என்று அழைத்துக் கலகலப்பாகப் பேசாத போதும், சதானந்தன் வருவதும், தம்பி, தங்கையோடு பேசிப் பழகுவதும் சுரபிக்கும் ஆறுதல்தான்.

ஆனால், அவனது உள்நோக்கம் அறிந்திருந்தால், சௌமினியும் குணசீலனும் மட்டும், பேச்சு, செயல்களில் எப்போதும் கவனத்துடனேயே இருந்தனர்!

இருவரின் எதிர்காலம், பணம் பற்றிய பேச்சுக்களை முடிந்த அளவு தவிர்த்தே வந்தபோதும், உண்மையான அக்கறையோடு கேட்கும்போது, சொல்லாமல் நழுவு வதும், அவர்களுக்குக் கடினமாகவே இருந்தது!

கூடவே, ஆனந்தன் வேற்றுமை இல்லாமல், தம்பியின் முன்னிலையிலேயே எதிர்காலம் பற்றி ஏதாவது கேட்கும்போது, இந்த இருவரும் ரொம்ப சங்கடப்பட்டுப் போனார்கள்.

இந்த அழகில், ''சதா உலகம் தெரிந்தவன், அவனிடம் ஆலோசனை கேட்டுக் கொள்ளுங்கள்'' என்று அறிவுரை வேறு!

தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது, சின்னவர்களுக்கு!

சதானந்தனின் முன்னிலையில் இந்தப் பேச்சைத் தவிர்ப்பதும், அவனுக்கு மறைத்து ஏதோ பேச, அவர்கள் விரும்புவது போன்றதொரு தவறான கருத்தைத்தான், அவனளவில் உண்டு பண்ணும், பண்ணுகிறது என்று, அவர்களுக்குப் புரியாமல் இல்லை!

அதே சமயம், வெறும் துணிமணிக்கானதையைத் திருப்பியதற்கே வருத்தப்பட்டவர்களிடம் தங்களது திட்டத்தைச் சொல்லவும், இருவருக்கும் மிகவும் தயக்கமாக இருந்தது!

இதுவோ, பெரிய தொகை வேறு!

பெரிதோ, சிறிதோ, கொஞ்சம் கூட, அக்கா கணவனிடமிருந்து வாங்கக்கூடாது என்பதில் மட்டும், அவர்கள் மிக உறுதியாக இருந்தார்கள்.

இப்படி, அப்படி சமாளித்து நாளைக் கடத்திவிட்டு, கடைசியாகக் கிளம்பும்போது, தங்கள் முடிவைச் சொல்லிவிட்டுச் சென்னைக்குக் கிளம்பிவிட வேண்டும் என்பது, அவர்களது திட்டம்.



விவரம் முன்பே தெரிந்துவிட்டால், அவர்களது மனதை மாற்றுவதற்கு அக்காவும், அத்தானும் முயற்சிப் பார்கள். அவர்களிடம் மறுத்து வாதம் செய்ய வேண்டியிருக்கும்! அதைவிடவும் 'இதுதான் பெரிய மீனா' என்று சதானந்தன் குத்தலாகக் கேட்பானே என்பதுதான் இளையவர்கள் இருவரையும், முக்கியமாக சௌமினியை மிகவும் வாட்டியது.

சில பல தினங்கள் எப்படியோ சமாளித்தபோதும், அவர்களது நழுவலே சந்தேகத்தைக் கிளப்பிவிட, ஒருநாள் எல்லோரும் இருக்கும்போது, மைத்துனனும், மைத்துனியும், அடுத்து என்ன செய்யப் போகிறார்கள் என்று ஆனந்தன் நேரடியாக அவர்களைக் கேட்டு விட்டான்.

சொல்ல வேண்டிய தருணம் வந்துவிட்டது என்று புரிய, குணா கலவரத்துடன் சௌமினியைப் பார்த்தான்.

எப்போதும் போல, அவர்கள் இருவருக்காகவும், சௌமினிதான் பேசினாள்.

செய்யப் போவது என்ன என்று அவள் சொல்லச் சொல்ல, சுரபியின் முகம் வாடி வதங்கிச் சுருங்கியது!

அங்கே இருக்க முடியாதவள் போல எழுந்தவள் சற்றுத் தள்ளாடவே, சட்டென எழுந்து அவளைத் தாங்கினான் ஆனந்தன்.

மனைவியின் முக வெளுப்பைக் கவனித்து ''இந்தப் பேச்சை அப்புறமாகப் பேசலாம்'' என்று முடித்துவிட்டு, கைத்தாங்கலாக அவளை உள்ளே அழைத்துச் சென்றான்.

டி.வி.யில் எதையோ நோண்டிக் கொண்டு, சதானந்தன் அங்கேதான் இருந்தான்.

என்ன சொன்னோம் பார்த்தாயா? உன் அண்ணன் பணத்தை நாங்கள் தொடுவதாகவே இல்லை. இப் போதேனும் புரிந்ததா என்பது போன்ற பார்வையை, அவனிடம் செலுத்தாமல் இருக்க, சௌமினியால் முடிய வில்லை.

வெறும் அளப்பு என்பது போன்ற ஒரு தோள் குலுக் கலைப் பார்த்து வருத்தப்படாமல் இருக்கவும் அவளால் முடியவில்லை!

ஆனால், குணாவும் சௌமினியும் சமாளித்த விதத் தில், ஆனந்தன் சொன்ன அந்த 'அப்புறம்' வந்து சேர. மேலும் நாலு நாட்கள் பிடித்தன.

அவர்களது முயற்சி மட்டுமின்றி, ஆனந்தனுக்குமே இந்தத் தாமதத்தில் பங்கிருந்தது. சுரபியின் முன் னிலையில் இந்த விஷயம் பேச, அவனுக்குமே பிடிக்க வில்லை!

இப்படியே நாட்கள் கடந்து போயின.

அன்று மதிய உணவுக்கு மேல், பெரு வெற்றி அடைந்த பழைய திரைப்படம் எதையாவது பார்க்கலாம் என்று குணாவும் சௌமினியும் திட்டமிட்டிருந்தனர்.

ஆனந்தனும், சுரபியும் அப்படிப்பட்ட பல சி.டி.க்களை சேர்த்து வைத்திருந்ததால், அவற்றுள் எதைப் பார்க்கலாம் என்று, சி.டி.க்கள் இருந்த மேஜையைத் திறந்து, சௌமினி தேடிக் கொண்டிருந்தபோது, ஆனந்தன் மட்டுமாக வந்து உட்கார்ந்தான்.

''சௌமினி, குணா. படிப்பு, பற்றி, இப்போது சொல் லுங்கள்! அதென்ன விசித்திரமான திட்டம்? ஒருவர் படித்து, ஒருவர் வேலை பார்ப்பது என்று? நீங்கள்



இருவரும் இரட்டைப் பிள்ளைகள். இதுவரை ஒன்றாகத் தானே படித்தீர்கள்? இப்போது மட்டும், ஒருவர் ஒருவராகப் படிப்பது என்று என்ன அது?'' என்று படபடவென்று வேகமாகக் கேட்டான். ''அக்கா ஒரு வேலையாகப் பணியாட்கள் வசிக்கும் பின் பகுதிக்குப் போயிருக்கிறாள், அவள் திரும்பி வருமுன் சீக்கிரமாகச் சொல்லுங்கள்'' என்று அவசரப்படுத்தினான்.

''திட்டம் என்று பெரிதாக எதுவும் இல்லை, அத் தான். வீட்டைக் காட்டி, ஒருவருக்கு மட்டும்தான் கல்விக் கடன் வாங்க முடியும். அதனால், ஒருவர் மட்டும் தொடர்ந்து மேலே படிப்பது என்று முடிவு செய்தோம். வெளிநாட்டில் படித்துக் கொண்டே ஓரளவு சம்பாதிக் கவும் முடியும். அடுத்தவர் இங்கே வேலை பார்த்துச் சேமிக்கலாம். நானோ, குணாவோ படித்து முடித்துவிட்டுத் திரும்பி வந்தால், இருவர் சேமிப்பையும் கொண்டு, அடுத்தவரும் மேல் படிப்பை முடித்து விடலாம் என்று...''

அவளது பேச்சில் குறுக்கிட்டு, ''சின்னப் பிள்ளைகள் இரண்டு பேரும் சேர்ந்து, பெரிதாகத் திட்டம் போட்டீர் களாக்கும்! பெரியவர்களான எங்களைக் கலந்து ஆலோ சிக்க வேண்டும் என்று ஒருவருக்குக் கூடவா, தோன்ற வில்லை?'' என்று சிறு கோபத்துடன் கேட்டான் ஆனந்தன்.

லேசாக முறுவலித்தாள் சௌமினி. ''தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது! என்ன? முக்கியமான ஒரு விஷயம், உங்களுக்குத்தான்... அதாவது அக்காவுக்கும் உங்களுக் கும்தான் நினைவுக்கு வரவில்லை. அத்தான், சொல்லப் போனால், அப்படிப்பட்ட எண்ணமே, உங்களுக்கு

இன்னும் வரவே இல்லை! பெரியவளாக இருந்து வளர்த்ததால், அக்காவுக்கும், அவளது கண் வழியே பார்க்கும் உங்களுக்கும், இன்னமும் நாங்கள் சின்னவர் களாகவே தோன்றுகிறோம். 'டில்லிக்குப் பாதுஷா என்றாலும் தல்லிக்குப் பிள்ளை' என்பார்களே, அது போல! ஆனால், நாங்கள் வளர்ந்து விட்டோம், அத்தான். மனதாலும், இப்போது காம்பஸ் தேர்வில், எங்கள் இரண்டு பேருக்குமே வேலை கிடைத்து விட்டது. இரு வருக்குமே எம்.என்.சி. நிறுவனங்களில், இந்தியாவுக் குள்ளோ, வெளிநாட்டிலோ எங்கே போட்டாலும் போய் வேலை பார்க்கத்தானே, செய்வோம்? சின்னப் பிள்ளை களாகவே இருந்தால் முடியுமா அத்தான்? ஒட்டுக் கூடப் போட்டிருக்கிறோமே! உங்களுக்கோ, இங்கே பண் ணையில் முழு நேர வேலை! இன்னும் என்னென்னவோ பிரச்சினைகள்! இந்த நிலையில் நாம் வேறு தொல்லை பண்ணக் கூடாது என்றுதான், நாங்களே யோசித்து முடிவு செய்தோம். அக்கா கற்றுக் கொடுத்த மாதிரி பலமுறை யோசித்து எடுத்த முடிவு, தயவு பண்ணி, எங்களைத் தப்பாக எண்ணாதீர்கள், அத்தான். கோபமும் வேண்டாம்! ப்ளீஸ் அத்தான்!'' என்று புன்னகையோடு அவள் கெஞ்சலாகக் கேட்ட விதத்தில் ஆனந்தனின் முகமும் சுளிப்பு மாறி, இயல்பாயிற்று!

ஆனாலும் 'வளர்ந்து விட்டதாக இவ்வளவு பேசு கிறாயே! உன் அக்காவை எண்ணிப் பார்த்தாயா? அவள் இப்போது சந்தோஷமாக இருக்க வேண்டும்தானே? இரண்டு பேரும் ஒரே மாதிரி வளர்ந்துவிட்டு, இப்போது பணத்துக்கு வழியில்லாததாக நினைத்து, ஒருவர் படிப்பைத் தள்ளிப் போட்டால், அவளுக்கு எப்படி



இருக்கும்? அன்றைக்கு, நீ சொன்னதிலிருந்து சுரபி ஆளே சரியில்லை! எனக்குத் தெரியாமல், நான் தூங்கி விட்டதாக நினைத்து, அப்புறம் உட்கார்ந்து அழு கிறாள்! அதனால், வேண்டிய பணத்தை இப்போது நான்...'' என்று அவன் உரைக்கையிலேயே சௌமினி, குணசீலன் இருவருமே ''வேண்டாம்... வேண்டாம்!'' என்று பதறினர்.

யோசனையாகப் பார்த்து, ''என்ன வேண்டாம்?'' என்று ஆனந்தன் வினவினான்.

''நீங்கள், எங்களுக்குப் பணம் தர வேண்டாம்!''

''ஏன் அப்படி? நான் என்ன அன்னியனா? உங்களுக் குத் தாய் மாதிரி இருந்த அக்காவுடைய கணவன், தந்தை போலத்தானே? தந்தால் என்ன?''

சற்றுத் திகைத்தபோதும், சின்னவர்களின் பிடிவாதம் தளரவில்லை. அதிலும், சலனமற்ற முகத்துடன் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு சதானந்தன் அங்கே இருக்கையில், அது எப்படித் தளரும்?

என்ன சொல்லி மறுப்பது என்று அவசரமாக யோசித்த தில், ஒன்று தோன்ற, ''நீங்கள் மட்டும் எப்படித் தருவீர் கள், அத்தான்? இருபது லட்சத்துக்கும் மேல், ஆகுமே!'' என்றாள் சௌமினி.

எந்தத் தொழிலிலும், அவ்வளவு பணத்தைத் திடு மென எடுப்பது, எளிதல்லவே!

''கிட்டத்தட்ட இருக்கிறது!'' என்றான் ஆனந்தன். ''எல்லாம் சுரபியின் கெட்டிக்காரத்தனம். அவளது ஆலோ சனைப்படி, அடுத்தடுத்து இருந்த இரு பண்ணைகளைக்

குத்தகைக்கு எடுத்து நடத்தினோம். எல்லாம் பணப் பயிர்கள். பணமாகவே கொட்டிவிட்டன...''

சதானந்தனுக்கும், இது தெரியும் அதனாலேயே, சுரபி மீது மட்டும் ஒரு நல்ல அபிப்பிராயமும் அவனுக்கு ஏற்பட்டிருந்தது! ஆனால், தம்பி, தங்கை என்று பிறந்த வீட்டு உறவுகள்தான் அவளைக் கெடுக்கக் கூடும் என்றொரு கருத்தும் அவனுக்கு உண்டு. அது போன்ற தவறுகளை முடிந்தவரை தடுக்கும் நோக்கத்தோடுதான், அப்போது அவன் அண்ணன் வீட்டில் தங்கியும் இருந்தான்!

இப்போது, அவன் எண்ணிய விதமாகவே, அவனுடைய அண்ணனும் பேசினான்.

''... அவற்றுள் ஒரு பண்ணையை, மீதிக்கு பாங்க் கடனில் வாங்கலாம் என்று, முன் பணம் கொடுப்பதற்காக சேர்த்து வைத்தோம். அதைவிட, உங்கள் படிப்புக்குக் கொடுத்தால், சுரபி சந்தோஷப்படுவாள்! அதனால்..''

''இல்லை அத்தான். நீங்கள் பண்ணையையே வாங்குங்கள். அதற்காகச் சேர்த்த பணம்!'' என்று சௌமினியும், குணாவும் மாறி, மாறியும் சேர்ந்தும் சொன்னார்கள்.

''இன்னும் ஓரிரு ஆண்டுகள் குத்தகைகளே எடுத்து நடத்தினால், அதற்குத் தேவைப்படும் பணம் சேர்ந்து விடும். இப்போது இதைப் படிப்புக்கு...''

''வேண்டாம், அத்தான்! நீங்கள் பண்ணையையே வாங்குங்கள். அதற்காகச் சேர்த்த பணம்! வேறு செலவு செய்வது தப்பு!'' என்று சற்று அழுத்தமான குரலில், குணசீலன் சொன்னான்.



இந்தக் குரல் தப்பு என்று சௌமினி நினைக்கும் போதே ''ஏன்? யாரேனும் ஏதேனும் சொன்னார்களா?'' என்று கேட்டு விட்டான் ஆனந்தன்.

உடன் பிறந்தவனை முந்திக் கொண்டு ''இல்லையே! இல்லவே இல்லையே! நீங்கள் திட்டமிட்டது போலப் பண்ணையையே வாங்குங்கள். அத்தான். நாங்கள் இரண்டு ஆண்டுகள் வேலை செய்து மேல் படிப்புக்கு வேண்டியதை, நாங்களே ஏற்பாடு செய்து கொள்வோம்'' என்றாள் சௌமினி.

''அதைத்தான் சொன்னேன். நீங்கள் இருவரும், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து கொள்வீர்கள். ஆனால், அக்கா செய்தால் மட்டும் அன்னியம் ஆகிவிடுமா? நீங்கள் இப்படி ஒதுக்குவதில், அவள் தூக்கமின்றித் தவிக்கிறாள்! ஏன் இப்படி? யாரேனும், ஏதேனும் சொன்னார்களா?'' என்று மறுபடியும் ஆனந்தன் விசாரித்தான்.

உன் தம்பிதான் என்று சொன்னால், அத்தான் ஒப்பு வாரோ என்னவோ, சகோதரர்களைப் பிரித்தாள் என்று, இன்னொரு பழியுமல்லவா வந்து சேரும்! என்றைக் காவது, மாமியார் மனம் கனிந்து, குடும்பம் ஒன்று சேரும் என்று கனவு கண்டு கொண்டிருந்த சுரபியின் ஆசையை, அடியோடு மறந்து விட வேண்டியதுதான்!

எனவே, ''இல்லவே இல்லை!'' என்று ஒரேடியாக மறுத்தாள் சௌமினி. ''யோசியுங்கள் அத்தான். இந்தப் பண்ணை, உங்கள் அப்பா தாத்தா என்று, உங்கள் பரம்பரைச் சொத்து. அதைக் கொண்டு சம்பாதித்த பணம்! வழிவழியாக, உங்கள் பரம்பரையின் உழைப்பினால் வந்தது! அதைச் சம்பந்தமே இல்லாத நாங்கள் எடுத்துக்

கொள்வது, கொஞ்சமும் நியாயமே கிடையாதுதானே?'' என்று வாதாடினாள் அவள்.

''அப்படியானால் உன் அக்கா? அவளுக்கும் நீ சொன்ன இந்த என் பரம்பரைக்கும் என்ன சம்பந்தம்? ஆனால், எங்கள் வீட்டு வாரிசை, அவள்தானே தாங்கு கிறாள்? அதை என்ன சொல்வது? அந்த வாரிசு, உனக்கு ஒன்றும் இல்லையா? உன்னைச் சித்தி என்று கூப் பிடாதா?'' என்று கேட்டான் ஆனந்தன்.

ஒரு கணம் சௌமினி திகைத்துப் போனாள், குணா வும்தான்!

இதற்கு என்ன பதில் சொல்வது?

தேவைப்பட்ட சி.டி.யை, மேஜையறையுள் தேடுவது போன்ற பாவனையில் சற்று நேரம் யோசித்தவளுக்கு ஒரு பதில் கிடைத்தது. ''ஆனாலும் அது உங்கள் வீட்டு வாரிசு தானே, அத்தான்?'' என்றாள் சௌமினி. ''செல்வியோ, செல்வனோ, பெயரின் பின்னே உங்கள் பெயர்தானே, இருக்கும்? செல்வன் ஆனந்தன் என்றுதானே எழுதுவது, சொல்வது எல்லாம்? சித்தியோ, மாமாவோ, நாங்கள் எல்லோரும் உறவுகள் அவ்வளவுதான். எனவே, அதற்கு மேல் வேறு உரிமை எப்படி எடுத்துக் கொள்ள முடியும்? எங்களுக்கு மனம் ஒப்பவில்லை!'' என்று முடித்தாள் அவள்.

''என்னவோ போங்கள்! இந்த நேரம் அவள் அழக் கூடாது என்று பார்த்தால், இரண்டு பேரும், இல்லாத கதையெல்லாம் உண்டு பண்ணிக் கொண்டு, எங்கேயோ பார்க்கிறீர்கள்!'' என்று அலுப்புடன் எழுந்தான் ஆனந்தன். ''இனி இதை அப்புறமாகப் பேசலாம். சுரபி திரும்பி



வந்தாலும் வந்து கொண்டிருப்பாள். அவள் முன் எதுவும் வேண்டாம்'' என்றவாறு, மனைவியை நாடி, வீட்டின் பின்புறமாகச் சென்றான்.

அண்ணனின் தலை மறைந்ததும், ''நல்ல நாடகம்!'' என்றவாறு, கையிலிருந்த புத்தகத்தைப் பட்டென்று மூடி அருகில் போட்டான் சதானந்தன்.

''எது நாடகம்?'' என்று குழப்பத்துடன் குணா கேட்டான்.

தலையை மட்டும் திருப்பி சௌமினி பார்க்கையி லேயே ''எதுவோ, கேட்க வேறு வேண்டுமா? மறுக்கிற மாதிரி மறுத்துக் கொடுக்க வைக்கிற கெட்டிக்காரத்தனம்! மனிதனைக் கெஞ்சிக் கதற வைக்கிறீர்கள்! இனி, அண்ணன் உங்களிடம் மண்டியிட்டே மன்றாடுவான் போல! ஆனாலும், இந்த வயதில், இவ்வளவு கெட்டிக் காரத்தனம், யாருக்கு வரும்?'' என்று ஏளனமும் குத்தலும் கலந்த குரலில் கூறினான் சதானந்தன்.

சௌமினிக்கு உள்ளே தீப்பிடித்த உணர்ச்சி!

இவ்வளவு தூரம் மறுக்கிறார்கள்! கண் முன்னால் நடக்கிறது! நேராகப் பார்த்த பிறகும், நாடகம், நடிப்பு என்றால் அப்படிப் பேசுகிற இவன் என்ன மாதிரி மனிதன்?

இவன் புரிந்து கொண்டு மனம் மாற மாட்டானா என்று ஆசைப்பட்ட, அவளைத்தான் என்ன சொல்வது?

அறிவே இல்லாத முட்டாள், மூட ஜென்... என்று உள்ளே கனன்று எழுந்த ஆத்திரத்தை எல்லாம் ஒன்று திரட்டி, அவன் முகத்திலேயே கதவைச் சாத்துவது போல வேகத்துடன் மேஜையின் இழுப்பறைக் கதவை ஓங்கிச்

சாத்தியவாறு எழுந்தவள், வலி தாளாமல் ''ஆ!'' என்று பயங்கரமாக அலறி, அந்த மேஜை மீது மடிந்து விழுந் தாள்!

''என்ன? என்ன?'' என்று வினவியவாறு எல்லோரும் அருகில் ஓடிவர, வலி மிகுதியில் ''ஆ, ஆ'' என்று துடித்தாளே தவிர, வேறொன்றும் அவளால் முடிய வில்லை!

ஆனால், அவள் நிமிரக் கூட இல்லை என்று கண்டு எல்லோரும் விழிக்க, சதானந்தன் சட்டெனக் குனிந்து, மேஜையறையை இழுத்துத் திறந்து, அவள் கதவைச் சாத்தியபோது மாட்டிக் கொண்டிருந்த கையை விடுவித் தான்.

கட்டை விரல் நகம், கிட்டத்தட்ட பெயர்ந்து, ரத்தக் கட்டிக் கறுப்பாகவும் மாறலாயிற்று! ஒருபுறம் தோல் கிழிந்து, ரத்தக் கசிவு வேறு!

''என்ன மின்னி மின்னி, ரொம்ப வலிக்கிறதா?'' என்று குணசீலன் பதறினான். அதற்குள் வீட்டின் பின்புற மிருந்து, ஓடி வந்த சுரபி ''மின்னி, என்னடாம்மா? என்ன? என்ன ஏன் கத்தினாய்? என்ன ஆயிற்று?'' என்று தவித் தாள்.

வலியினால் மூச்சு விட மாட்டாமல் சௌமினி தவிக்க, அவளது வலியைத் தன்னதாய் உணர்ந்தவன் போலக் ''கையை நசுக்கிக் கொண்டு விட்டாள் அக்கா!'' என்றான் குணா வேதனையோடு முனகினான்.

''இவள் இப்படிக் கத்தினாள் என்றால்... எங்கே முதலில் கையைப் பார்ப்போம்'' என்று தங்கையின்



கையைப் பிடிவாதமாக இழுத்துப் பார்த்த சுரபி ''ஐயோ!'' என்று பரிதவித்துப் போனாள்.

''கடவுளே! எப்படி நசுங்கி விட்டிருக்கிறது! முதலில்... ஐயோ, இங்கே பக்கத்தில் ஒரு டாக்டரும் இல்லையே!... ரொம்ப வலிக்குமே!'' என்று தவித்தாள்.

சௌமினியின் கண்களில் வலி தெரிந்தாலும் முக பாவத்தை முடிந்த அளவு மாற்றி, சாதாரணமாகக் காட்டி, ''மு... முதலில், அதிர்ச்....சியில், கத்தி விட்டேன், அக்... கா இப்போது ப... பரவா...'' என்று பெரிதாக ஒன்று மில்லாதது போல, சௌமினி நடித்தாள்.

அதாவது, நடிக்க முயன்றாள். என்றாலும் மூடி மூடித் திறந்த கண்களும், ஒழுங்கற்ற மூச்சுக்களும் அவளைக் காட்டிக் கொடுத்தன.

உடன் பிறந்தோர் அவளை அறிந்தவர்கள்தானே?

அவளது வலியைத் தனதாய் உணர்ந்து, அடிபட்ட கையைப் பிடித்து, மணிக்கட்டில் அழுத்திவிட்டு வலியைக் குறைக்க முயன்றான் குணசீலன்.

கன்னத்தைத் தட்டிக் கொடுத்து, தோளைத் தடவி, ''இப்போது என்ன செய்வது என்று...'' சுரபி கண் கலங்க, புரிந்தவன் போல, அவர்களைப் பரிவுடன் பார்த்தான் ஆனந்தன்.

திடுமென ''ஐஸ் வைத்தால் வலி குறையாது?'' என்று உள்ளே ஓடினாள் சுரபி.

''ஜாக்கிரதையாகப் போ!'' என்று மனைவியிடம் சொல்லிவிட்டு ''நீ உட்காரம்மா'' என்றான் ஆனந்தன்.

ஏதோ யோசித்தவனாக, சுரபியைத் தொடர்ந்து சதானந் தனும் சென்றான்.

ஐஸ் ட்ரேயை எடுத்தவளிடம் அதை வாங்கிக் கொண்டு, ''நான் இதைக் கொண்டு போய் ஒத்தனம் கொடுக்கிறேன். நீங்கள் கொஞ்சம் டீ போட்டு, அதில் நிறையச் சர்க்கரை கலந்து, கொண்டு வாருங்கள், அண்ணி'' என்றான்.

முதல் முறையாக அவன் ''அண்ணி'' என்று அழைத்தது உறைக்க, சுரபி திகைத்து, ''எ... என்னது?'' என்று தடு மாறினாள்.

''அந்த விளக்கம் பிறகு பார்ப்போம். முதலில் டீயைக் கொண்டு வாருங்கள், அண்ணி. அதிர்ச்சிக்கு நல்லது'' என்று லேசாக முறுவலித்துவிட்டு, ஐஸ் ட்ரேயுடன் சதானந்தன் முன்னறைக்குச் சென்றான்.

ஐஸ் கட்டிகளை அவனது கைக்குட்டையிலேயே கட்டி, சதானந்தன் ஒத்தனம் கொடுப்பதைக் கண்டு, குணா வாயைப் பிளந்தான்.

ஐஸ் குளிர்ச்சியில் வலி சற்று மறந்து போன பிறகே, யார் ஒத்தனம் கொடுப்பது என்று நிமிர்ந்து பார்த்த சௌமினி கையை இழுத்துக் கொள்ள முயன்றாள்.

கழுத்தை வெட்டி விட்டுக் காயத்துக்கு மருந்து போடு கிறானாக்கும்!

மின்னல் வேக வேலையாக, சுரபி அதற்குள் டீயுடன் வந்தாள்.

ஒரு வாய் அருந்திவிட்டு ''ஒரே இனிப்பு!'' என்று வைக்கப் போனாள் சௌமினி.

''வலிக்கு நல்லது என்று கொண்டு வந்திருக்கிறார்கள். மறுக்காமல் குடி'' என்று வற்புறுத்திக் குடிக்க வைத்தான் சதானந்தன்.



குடித்தது நன்றாகத்தான் இருந்தது.

ஆனால், சதானந்தன் மீண்டும் ஐஸ் ஒத்தனத்தைத் தொடங்கவே, சௌமினிக்கு உட்காரப் பிடிக்கவில்லை.

அவனது கைக்குட்டை வேறு! இந்தத் தினுசை அவள் கையில், அவள் பார்த்திருக்கிறாள்.

செய்வதெல்லாம் செய்துவிட்டு, பெரிதாக இது எதற்கு? அண்ணன் முன் வேஷமா?

அவளுக்கு மூச்சு முட்டுவது போல இருந்தது.

கையை அகற்றிவிட்டு, விலகி, வெளிப்புறமாக நடந்தாள்.

''என்னம்மா? என்னம்மா?'' என்று தமக்கைப் பதறவும், ''ஒன்றும் இல்லைக்கா. சூடாக டீ குடித்தது வே... வேர்க் கிறது... கொஞ்சம் காற்றாட நடக்கலாம் என்று...'' என்ற வாறு, வாயிலைக் கடந்து, படியிறங்கினாள்.

கூடவே ஓடி வந்தான் குணா.

அவனை நிறுத்தி, ''எனக்குச் சரியாகிப் போய்விடும் குணா, நீ உள்ளே போ! அக்கா வீணாகக் கவலைப் படாமல், அவளோடு பேசிக் கொண்டிரு!'' என்று அனுப்பி னாள்.

ஆனால் அவள் கடைசிப் படி இறங்கும் போது, சதானந் தனும் கூட வந்து கொண்டிருந்தான்.

இன்னமும் 'விண் விண்'ணென்று தெறித்த வலியும், அந்த வலி ஏற்பட்ட காரணமுமாகச் சீற்றத்துடன் திரும்பி னாள் சௌமினி.

''என்ன? மறுபடியும் சந்தேகமா? கையில், மெய்யாகத் தான் அடிபட்டிருக்கிறது! எந்தவிதமான பெயின்டோ,

மேக்கப்போ இல்லை! வேண்டுமானால் நீங்களே பாருங்கள்!'' என்று கையை நீட்டினாள்.

நீட்டிய கையைப் பற்றி, மெதுவே வருடிக் கொடுத்தான் சதானந்தன்.

''ரொம்ப வலிக்கிறதா?''

பழக்கமற்ற கனிவான குரல் என்னமோ பண்ணச் சட்டென்று கையை இழுத்துக் கொண்டாள் சௌமினி.

'சடக்'கென்ற வேக அசைவில் மரண வலிதான்! ஆனாலும் பொறுத்துக் கொண்டு, ''இல்லை! சுகம்மா.. இருக்கி... ஏன், இதைக்கூட நான் வேண்டும் என்றே, அத்தானின் அனுதாபத்தைப் பெறவென்று, தெரிந்தே நசுக்கிக் கொண்டதாகவே நினைக்கிறீர்கள், அப்படித் தானே?'' என்றாள் ஆத்திரத்துடன்.

''ஒரேடியாக அப்படி எண்ணவில்லை. ஆனால் மேஜையின் இழுப்பறைக் கதவைச் சாத்தும்போது, கையை எடுக்க, ஏன் தோன்றவில்லை!'' என்று கேட்டான் அவன்.

இந்த வேதனை பற்றியும் சந்தேகமா?

கொதிப்புடன் பொரியத் தொடங்கி விட்டாள் சௌமினி, ''காட்! நீங்கள் என்ன, உள்ளம் குளிரும் விதமாகவா, பேசினீர்கள்? திரும்பத் திரும்ப இங்கே பணம் பிடுங்குவதே எங்கள் குறிக்கோள் என்கிற மாதிரி... மாதிரி என்ன? அதே என்று... அப்படியே என்றுதானே பேசினீர்கள்? அப்படிப் பேசும்போது, அந்த எண்ணமே இல்லாத எங்களுக்கு எப்படி இருந்திருக்கும்? அக்கா, அத்தானின் பரிசுகளுக்குக் கூட மதிப்புப் போட்டுத் திருப்பியிருக்கிறோம்! அது எங்களுக்குக் கஷ்டமே என்றாலும்,



இரண்டு பேரும் ஓய்வே இல்லாமல் வேலை பார்த்துத் திருப்பிக் கொடுத்தோம்! இப்போது படிப்பு விஷயத்திலும் உருண்டு புரண்டு வெகுவாக யோசித்து, நாங்களாகவே ஒரு வழி கண்டுபிடித்து, அதைக் கடைப்பிடிப்பதாகவும் இருக்கிறோம்! இத்தனைக்கும் மேல், இப்படிப் பேசினால், ஆத்திரம் வராதா? அந்த வேகத்தில், உங்கள் முகத்தில் அறைவது போலச் சாத்த எண்ணினேனே தவிர, என் கை அங்கே இருப்பதே நினைவில்லை என்பதுதான் உண்மை. ஆனால் அதை நீங்கள் எங்கே நம்பப் போகிறீர்கள்?'' என்று மூச்சு விடாமல் கொட்டி முடித்தாள் அவள்.

''ஆனால்...'' என்று சதானந்தன் தொடங்கும் போதே ''ஆக, எல்லாவற்றுக்கும் காரணம் நீதானா சதா?'' என்று திகைப்பும் கோபமுமாக கேட்டவாறு, அவனுடைய அண்ணன் ஆனந்தன் வந்து நின்றான்!

# 10



தங்கள் வாக்குவாதத்திலேயே கவனமாக இருந்த சௌமினிக்கும், சதானந்தனுக்கும் பேச்சு வேகத்தில், சற்று நேரம் மற்றதெல்லாமே மறந்து போயிருந்தது!

திடுமென ஆனந்தனின் குரல் கேட்கவும்தான், இருவருக்குமே, சுற்றுப்புறமும், சூழ்நிலையும் நினைவே வந்தது!

இதுவரை யாருக்கு மறைத்து இந்தப் பனிப்போர் நடந்ததோ, அவனுக்கே அல்லவா, இப்போது எல்லாம் தெரிந்து விட்டது!

இருவரும் வாயடைத்து நிற்க, இருவரிடமும், ஆனந்தன் கோபமாகப் பேசினான்.

''அவர்களிடம் தப்பு இல்லை என்று, முதலிலேயே சொன்னேனே, சதா! கடைசியில், உன் சந்தேகம், அவர் களது ரோஷம் எல்லாமுமாகச் சேர்ந்து, என் மனைவியைப் பாதிப்பது, உங்கள் ஒருவருக்கும் புரியவில்லையே! அவளுக்குள் வளரும் குழந்தை வெளியே வந்ததும், உன்னைச் சித்தப்பா எனப் போகிறது! அவளைச் சித்தி என்று அழைக்கும். குணா, மாமா, எல்லாமே, இனிய உறவுகள்! ஆனால், அது நன்றாக இருக்க வேண்டும் என்ற எண்ணம், உங்களில் யாருக்கும் இல்லையே! அவரவர் கோபமும், ரோஷமும்தான் பெரிதாகத் தோன்றுகிறது, இல்லையா? எப்படியோ போங்கள். நடப்பது நடக்கட்டும்! மின்னி, அக்கா உன்னை உள்ளே கூப்பிட்டாள். எதையோ உரசிப் போட்டால், உன் கை சீக்கிரம் நன்றாகி விடுமாம். மாராயி சொன்னாள் என்று, செய்து வைத்துக் கொண்டு இருக்கிறாள். போ, போய்க் கையில் தடவிக்கொள்!'' என்று மைத்துனியை உள்ளே அனுப்பி வைத்தான்.

''நீயும் வாடா! தயவு பண்ணிக் கொஞ்ச காலம் இந்தப்...'' என்ற அண்ணனின் பேச்சில் குறுக்கிட்டு, ''நீ உள்ளே போ அண்ணா. நான் இதோ பத்து நிமிஷங்களில் வந்து விடுகிறேன்!'' என்று சொல்லிக் காரை நோக்கிச் சென்றான் சின்னவன்.



புரியாமல் திகைத்தான் அண்ணன்.

அவனை அதட்டி விரட்டிவிட்டோமோ என்று தோன்ற வும் ''சதா, கோபமாடா? சுரபி ரொம்பவும்...'' என்று அவன் மேலும் பேசுமுன், திரும்பி அவனிடம் வந்த சதானந்தன், மூத்தவன் எதிர்பாரா வண்ணம், அவனை இறுக அணைத்தான்.

மீண்டும் திகைத்த அண்ணனை விட்டு விலகி நின்று ''சாரிண்ணா! 'கொக்குக்கு ஒன்றே மதி' என்பார்களே, அதே போல ஒரே கருத்தாகப் பிடிவாதமாக இருந்து விட்டேன். இப்போது, எனக்குப் புரிந்ததை, அம்மாவிடம் சொல்லிப் பார்க்கிறேனே! ஒரு முயற்சி! வரட்டுமா?'' என்று கூறிவிட்டு, மறுபடியும் அவனது காருக்குப் போனான்.

கார் மறையும் வரை, அங்கேயே நின்றான் ஆனந்தன்.

சௌமினியின் கையைப் பார்த்ததும், அவளது பேச்சைக் கேட்டும் தம்பி ஏதோ மாறியிருக்கலாம். ஆனால், அதைத் தாய் ஏற்பாளா? மாதக் கணக்கில், அடியோடு ஒதுக்கி விட்டவள்!

ஏற்கனவே, மூத்த மகனைப் பெருமளவு ஒதுக்கி விட்டவளும் கூட!

நம்பிக்கையற்று ஓர் ஏக்கப் பெருமூச்சுடன் மெல்ல உள்ளே போனான் அவன்.

தாயிடம் சென்று, அண்ணன் மனைவி கருவுற்றிருப் பதைச் சதானந்தன் சொன்னபோது, வாலட்சுமி அப்படி ஒன்றும் உடனே உருகி விடவில்லை!

''பிடியை பலப்படுத்திக் கொள்கிறாளாக்கும்!'' என்று, சற்று அலட்சியமாகத்தான் கூறினாள்.

ஆனால், அவளுடைய இரண்டாவது மகன் வேறு மாதிரிப் பேசினான். ''பிடியைப் பலப்படுத்திக் கொள்கிறாளா, அல்லவா என்பது வேறு விஷயம், அம்மா. அதிலும் கூட, எனக்கு இப்போது சந்தேகமே! ஆனால், நான் இப்போது சொல்ல வந்ததே வேறு. அண்ணி வயிற்றில் இருக்கும் குழந்தை பிறந்தபிறகு, உங்களை அது என்னவென்று அம்மா அழைக்கும்?'' என்று கேட்டான்.

ஒரு கணம் வரலட்சுமி திகைத்து நின்றாள்.

பிறகு ஓர் எரிச்சலான தலை திருப்பலுடன் ''ஏன் சதா, அந்தப் பெண் என்ன, மந்திரம் தந்திரம் கற்றவளா, பிறந்ததும் பேசுகிற பிள்ளையைப் பெறுவதற்கு?'' என்று சற்று ஏளனமாக வினவினாள்.

என்ன, இவனும் ஒரு மாதிரியாகப் பேசுகிறான் என்ற ஆத்திரம் அவளுக்கு!

தாயை ஒரு தரம் பார்த்துவிட்டு ''அம்மா...!'' என்று கண்டிப்பது போல, ஆள் காட்டி விரலால் பத்திரம் காட்டினான் இளைய மைந்தன்!

''உண்மைக் கருத்தை ஒதுக்கி, வேண்டுமென்று சுற்றி வளைத்துப் பேச முயன்றால், உன் பேச்சில் நியாயம் இல்லை என்று அர்த்தம் என்று, எங்களுக்குக் கற்றுத் தந்ததே, நீங்கள்தான் என்பது நினைவு இருக்கட்டும்!''

அன்னையின் முகம் லேசாகக் கன்றுவதைக் கண்டு. அருகில் வந்து, அமர்ந்து, அவளது கையைப் பற்றி, லேசாக வருடியவாறு பேசினான். ''அம்மா, நான் அங்கேயே இருந்து பார்த்ததில், அதுவும் ஆராய்ச்சிக் கண்கொண்டே கவனித்தபோதும், அண்ணன் மனைவியிடம் தப்புத் தெரியவில்லை. அண்ணா! ஒன்றுக்கு இரண்டாகப் பண்ணைகளைக் குத்தகைக்கு அண்ணன் எடுத்தபோது, அகலக்கால் வைப்பதாக... நினைத்தோமே, இப்போது அதில் சுமார் பதினைந்து லட்சம் லாபம் கண்டிருக்கிறான். அண்ணன் மனைவியின் ஆலோசனை தானாம். ஆனால், அந்த லாபம், நஷ்டம் பற்றிப் பேச வேண்டாம். இப்போது அங்கே ஒரு குழந்தை பிறக்கப் போகிறது! நீங்... நாம் என்னதான் ஒதுக்கினாலும், அது, ஆனந்தனுடைய பிள்ளைதானேம்மா? அந்தப் பெண் சௌமினி சொன்னது போல, நம் வீட்டு வாரிசுதானே? அதையும், அவள் எப்போது சொன்னாள் தெரியுமா? வெளிநாடு போய் மேல் படிப்பு படிப்பதற்கு இந்தப் பணத்தைத் தருவதாக அண்ணன் சொன்னபோது, அதை ஏற்க மறுத்துவிட்டு, இந்தக் காரணம் சொன்னாள். அப்போது கூட, நான்... அந்த விவரம் பிறகு சொல்கிறேன். ஆனால், பிறகு அண்ணன் சொன்னது போல, அந்தக் குழந்தைக்கு நான் சித்தப்பாதானேம்மா? யாரானாலும், உங்கள் பேரன் என்றுதானே சொல்வார்கள்? அதை எப்படிம்மா, ஒதுக்க முடியும்? நம் எல்லோரையும் உறவால் இணைக்கும் ஓர் உயிர் அம்மா, அது!''

தாயின் கை அழுத்தத்தை உணர்ந்து, அவனது பேச்சு நின்றது!

சிறு அமைதியின் பின், இடுப்பில் மாட்டியிருந்த கொத்துச் சாவியை எடுத்து, இளைய மகன் கையில் கொடுத்தாள் வரலட்சுமி. ''இரும்பு பீரோ லாக்கரில் உட்புறமாக, சதுரமாய் ஒரு நீலநிற வெல்வெட் பெட்டி இருக்கும் அதை எடுத்து வா'' என்றாள்.

சதானந்தனின் வியந்த பார்வையில், பெருமிதமும் கலந்திருந்தது

"இதுதான் அம்மா என்பது" என்று தாயைத் தோளோடு ஒரு தரம் அணைத்துவிட்டு, எழுந்து சென்றான், அவன்.

தம்பி சென்ற தினுசில், வாயிலில் ஒரு கண்ணை வைத்தபடியேதான் ஆனந்தன் நடமாடிக் கொண்டிருந்தான்.

அவன் எதிர்பார்த்ததற்கு ஏற்ப, வருகையை அறிவிப்பது போலச் சற்று அதிகப்படி ஓசையுடன் சதா காரை நிறுத்தவும், அவசரமாக எட்டிப் பார்த்தான்.

காரிலிருந்து சிறு தயக்கத்துடன் இறங்குவது, அவனுடைய தாயாரேதான்!

கேள்வியாக நோக்கிய மனைவியிடம் "அம்மா!" என்றவன் வாயிலுக்கு விரைந்தான்.

அவனுக்கு இணையாக, சுரபியும் செல்ல, அவளுடைய தம்பியும், தங்கையும், சற்று இடைவெளி விட்டு, ஆச்சரியத்துடன் பின் தொடர்ந்தனர்.

காரிலிருந்து இறங்கத் தயங்கிய வரலட்சுமிக்கு, உரிமையோடு உள்ளே செல்லவும், கால் எழவில்லை! எட்டு மாதங்களாக அடியோடு ஒதுக்கி வைத்தவள், அவளே அல்லவா?

ஆனால், அவளது சில வினாடித் தயக்கத்தை, அவளே உணருமுன்பாகவே, ஆனந்தனும், அவனுடைய மனைவியும், மடமடவென்று படியிறங்கி, அவளிடம் வந்து விட்டனர்.

வந்தது மட்டுமின்றி, சட்டென சுரபி, மாமியாரின் கால்களில் பணிந்தும் விட்டாள்.



"வயிற்றுப் பிள்ளைக்காரி! இப்படிச் சடக்கென்று விழுந்து வணங்காதே!" என்று மருமகளை, வரலட்சுமி தூக்கி நிறுத்த "அம்மா!" என்று தாயின் கையைப் பிடித்தபடி, ஆனந்தன் குரல் தழுதழுக்க... அது சம்பந்தப்பட்டவர்கள் தவிர, மற்றவருக்கான காட்சி அல்ல!

தாய், மகன், மருமகளைத் தனியே விட்டு ஒதுக்கி, சௌமினியும், குணசீலனும் சத்தமின்றி வீட்டின் உள்ளே சென்று பார்த்தால், அவர்களோடு சேர்ந்து சதானந்தனும் உள்ளே வந்திருந்தான்.

'என் வேலையாக்கும்' என்று அங்கே நின்று பெருமை காட்டாமல், அவனும் விலகி உள்ளே வந்து விட்டது, மற்ற இருவருக்கும் சற்று இதமாகவே பட்டது!

பரவாயில்லை என்று எண்ணியபடி, அவனைப் பார்த்து "உங்கள் அம்மா என்ன பானம் விருப்பமாகக் குடிப்பார்கள்? அல்லது, எல்லோருக்குமே சூடாக, இனிப்... பான டீயே தயாரிக்கட்டுமா? அதிர்ச்சிக்கு நல்ல தாயிற்றே!" என்று சன்னக் குரலில் சௌமினி வினவினாள்.

சட்டெனச் சிரித்துவிட்டு "நமக்குத் தேயிலைத் தோட்டங்களும் இருந்தாலும், அம்மாவுக்கு காபிதான் விருப்பம். சர்க்கரை ஒரே ஒரு ஸ்பூன்" என்று சதானந்தன், உடனே முகம் மாற, "ஆனால், இந்தக் கை வலியுடன் எப்படிக் காபி போடுவாய்? பரவாயில்லை விட்டுவிடு" என்றான்.

"வலி ஒன்றும் பெரிதாக இல்லை..." என்றவளை இடைமறித்து, "இல்லாத வலிக்காகத்தான், அடுத்த

கையால் தடவி விட்டுக் கொண்டே இருக்கிறாயாக்கும்?'' என்று சிறு கேலிபோலப் பரிவாகக் கேட்டான்.

இவனது பரிவும் செய்வது அறியாமல் தடுமாறத்தான் வைக்கிறது என்று எண்ணினாள் சௌமினி.

பரிவுதானா, அல்லது நிலைமைக்கு ஏற்றபடியான வேஷமா என்று கூடத்தான் என்ன நிச்சயம்?

அண்ணனுக்காகத் தாயாரை அழைத்து வந்து விட்டு, இந்த நேரத்தில் சண்டை போட்டால், நன்றாயிராது என்று நடிக்கலாம்தானே? இத்தனை மாதங்களாக, அவன் அண்ணனிடம் அவர்களிடம் நடிக்கவில்லை?

இதற்கு குணா வேறு கவலையாகப் பார்த்தபடி அருகில் வரவும், "வலியே இல்லை என்று சொன்னேனா? லேசான முணுமுணுப்பு, அவ்வளவுதான். காபியெல்லாம் போட முடியும். அத்தோடு மாராயி வேறு உதவிக்கு இருக்கிறாள். காபி வரும்வரை, நீங்கள் இருவரும் பேசிக் கொண்டிருங்கள்!'' என்றதோடு, சௌமினி, சட்டெனத் திரும்பி சமையல் அறைக்குள் புகுந்து விட்டாள்.

அவளுக்கு வலிதான். ஆனால், அந்த வலியை வெளிக் காட்டினால், 'என்ன என்ன' என்று எல்லோரின் கவனமும் அதில் படியும். அதைவிட, வேறு எந்த வித குறுக்கீடும் இல்லாமல், சுரபியின் வாழ்க்கை சீர்ப்படுவது தான், இப்போதைக்கு முக்கியம் என்று சௌமினிக்குத் தோன்றியது!

முக்கியமானவர்களின் ஒருமுகக் கவனம், அதிலிருந்து சிதறக் கூடாது!

அடுப்பில் ஏற்ற இறக்க மாராயி உதவி புரிய, எல்லோருக்கும் காபி கலந்து எடுத்து வரும்போது, சௌமினிக்குக் கையில் மிகுந்த வலிதான்.



ஆனால், மாராயியைக் கொண்டு கொடுக்கச் சொன்னால், மரியாதைக் குறைவாக மாமியார் எடுத்துக் கொள்வாளோ என்று, வலியைப் பொறுத்துக் கொண்டு, அவளே காபி ட்ரேயை ஏந்தி வந்தாள்.

அடிபட்ட கையில் சுமையோடு தங்கையைப் பார்த்ததும் சுரபி அவசரமாக எழ "மெள்ள! மெள்ள எழ வேண்டும். உட்கார வேண்டும். பிள்ளை பிறக்கும் வரை, இப்படிச் சடக் சடக்கென்று அசைவுகள் நல்லதில்லை'' என்றாள், சுரபியின் அருகில் அமர்ந்திருந்த மாமியார்.

சுரபி தயங்க, அவளுடனேயே எழுந்த சதானந்தன் முன் வந்து, சௌமினியிடம் இருந்து ட்ரேயை வாங்கிக் கொண்டான்.

"இடது ஓரம் உங்கள் அம்மாவுக்கு, நீங்கள் சொன்னது போல ஒரே ஒரு ஸ்பூன் சர்க்கரை! அடுத்தது, அக்கா அத்தானுக்கு ஒன்றரை ஸ்பூன். குணா, பின் வரிசை முதலக் உன்னது. இரண்டு ஸ்பூன் இனிப்பு!'' என்று மருமகளுடைய தங்கை, அடுத்த மகனிடம் சொல்வதை, வியப்பும், ஆர்வமுமாகக் கவனித்தாள் வரலட்சுமி.

"இங்கே வாம்மா!'' என்று சௌமினியை அருகில் அழைத்தாள்.

கையைப் பிடித்துத் திருப்பிப் பார்த்துவிட்டு "நன்றாக நசுங்கி விட்டதே! சதா சொன்னான். ரொம்ப வலிக்குமே! மாத்திரை போட்டால்தான், வலி குறையும்'' என்றவள் கைப்பையைத் திறந்து, அதிலிருந்து ஒரு சிறு பையில் இருந்து மருந்து அட்டைகளில் ஒரு மாத்திரையை எடுத்துக் கொடுத்தாள்.

வலி குறையும் என்ற ஒரே வாக்கியத்தில், மாத்திரையை வாங்கி, உடனே விழுங்கினாள் சௌமினி.

சுரபிக்கு ஒரே ஆச்சரியம்!

''மின்னி எந்த மருந்தும் லேசில் எடுத்துக் கொள்ள மாட்டாள்! அதற்கு மட்டும் அவளிடம் பாடாய்ப் பட வேண்டும்! இப்போது நீங்கள் கொடுத்ததும், மறுக்காமல் விழுங்கி விட்டாளே!'' என்று வியந்தாள்.

''வலி அவ்வளவு இருக்குமே! எனக்கு ஒரு முறை கை நசுங்கி இருக்கிறது! வேறு கவனத்தில் இருக்கும்போது, நம்மை அறியாமல், ஏதாவது செய்து விடுவதுதான், அந்த நகமே விழுந்து, வேறு முளைத்த பிறகும், இன்றளவும் கூட, அந்த வலி எனக்கு மறக்கவில்லை!'' என்றாள் தாயார்.

''எப்போதும் கவனமாக இருப்பீர்களே, அம்மா! எந்தக் கை?'' என்று கேட்டு பெற்றவளின் கையைப் பற்றி வருடிக் கொடுத்தான் தலைமகன்.

என்னவோ அதில் உறுத்தியது சௌமினிக்கு!

என் அக்காவை ஒதுக்குவதா என்று ஆத்திரப்பட்டாள் தான்!

ஆனால், முதலிலேயே, தமக்கையைத் தவறாக நினைக்கக் கூடும் என்ற கவலை அவளுக்கு இருந்ததுதானே?

இப்போது பேரக் குழந்தைக்காக வந்த உறவு, நிரந்தரம் ஆக வேண்டும்!

மற்றவர்களின் பேச்சின் போர்வையில், வரலட்சுமியின் அருகே வந்து, அமர்ந்து மெல்லிய குரலில், விளக்கம் சொன்னாள் அவள்.



''உங்களது அப்போதைய அதிர்ச்சி, இப்போது புரிகிறது, ஆன்ட்டி ஆனால்... ஒருவரை ஒருவர் பிரிந்து வாழ முடியாது என்கிற அளவு நேசம், அவர்களுக்குள் அப்போதே வந்து விட்டது! முதல் ஓரிரு நாட்களிலேயே எனலாம். அவரை இழந்தால், மூச்சு முட்டிச் செத்துப் போவேன் என்றாள் அக்கா. ஆனால்... வந்து... நீங்கள் ஒரு போதும் ஒத்துக் கொள்ளவே மாட்டீர்கள் என்பது போல, அத்தானுக்கு ஒரு தப்பான கருத்து இருந்ததால்...''

''தப்பான கருத்து, அவனது அல்லம்மா! சின்னவன் சொன்னது போல, அது என்னதுதான். முன் அனுபவம் இல்லாமல் பெரியவன் செய்த பிழைக்காக, ரொம்ப அதிகமாகவே தண்டித்து அந்தக் கருத்தை நானே உருவாக்கி விட்டேன். எனக்குள்ளுமே! அதனால், அன்றிருந்த மனநிலையில், அவன் என் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டிருந்தாலும், அனுமதி கொடுத்திருக்க மாட்டேன் தான். ஆனால்... ஒருவருக்கு ஒருவராகப் பிறந்தவர்கள் போல, அவர்கள் இருவரையும் பார்க்கும்போதே, கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்கிறது! கடவுள் இருவரையும் நல்லபடியாக வாழ வைக்கட்டும்!'' என்று அந்த அம்மாள் கண் மூடி வேண்டிக் கொண்ட விதத்தில் உண்மை இருந்தது!

அக்காவுடைய மாமியார், இவ்வளவு வெளிப்படையாகப் பேசுவாள், தன் தவறை ஒத்துக் கொள்வாள் என்று, சௌமினி எதிர்பார்க்கவே இல்லை!

இனித் தமக்கைக்குப் பிரச்சினை இராது! அவளும், குணாவும் நிம்மதியோடு, படிப்பைத் தொடரவோ, வேலை பார்க்கவோ செய்யலாம்.

குணசீலனும் சதானந்தனும் உற்சாகமாக ஏதோ பேசிக் கொண்டிருந்தது, கண்ணில் பட்டது.

அக்கா விஷயம் நிம்மதிதான். ஆனால் முழு நிம்மதி தனக்குக் கிடைக்குமா? என்னவென்று சொல்ல இயலாத ஏதோ ஒன்று, அவளை குழப்பியது.

என்னவாக இருக்கும்?

சௌமினியின் முகத்தைப் பார்த்துவிட்டு, "இன்னும் வலி குறையவில்லையா? அப்படியே அதிகமாகவேதான் இருக்கிறதா?" என்று கேட்டாள், அருகில் இருந்தவள்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம் புகையில், வரலட்சுமி அம்மாள், சௌமினியைத் தன் னுடன் வருமாறு அழைத்தாள்.

"வீட்டில் ஒரு களிம்பு இருக்கிறது. அதைத் தடவி னால், கை வீக்கம் உடனே வடிந்து விடும். வீக்கத்தோடு வலியும் ரொம்பக் குறையும். ஒரு தடவை, நான் போட்டு விட்டால், அப்புறம் அதே போல, நீயே தடவிக் கொள்ள லாம்! வருகிறாயா?" என்று கூப்பிட்டாள்.

மறுப்பதற்கு ஒன்றுமில்லை என்பதோடு, சுரபி யுடைய மாமியாரின் வெளிப்படையான பேச்சும், அவளுக்குப் பிடித்துப் போகவே, சௌமினிக்கு மறுக்கத் தோன்றவும் இல்லை!

பிடிக்கிறதோ, இல்லையோ, எதையும் மறைத்து, வரலட்சுமி ஆளுக்கு ஒரு வேஷம் போடவில்லையே! வெறுப்பை வெளிப்படையாகக் காட்டியது போலவே, இப்போது மனமாற்றத்தையும் மறைக்காமல் தெரிவிக் கிறாள்!



சந்தோஷமாகவே கிளம்பி விட்டாள்!

செல்லும் வழியில், ஒருவருக்கொருவராக, உடன் பிறந்தோர் மூவரின் பாசம் பற்றிப் பேச்சு வந்தது!

கிடைத்த வாய்ப்பை விடாமல், நல்ல இடத்தில் அம்மா நிச்சயித்த திருமணத்தைக் கூட மறுத்துவிட்டு, அந்த நகைகளை விற்று, அக்கா எப்படித் தங்கைகளைப் படிக்க வைத்து, ஒரு தாயாய் வளர்த்தாள் என்பதை சௌமினி எடுத்துரைக்க, வரலட்சுமிக்கு, மருமகளைப் பற்றி மிக உயர்ந்த அபிப்பிராயம் ஏற்பட்டது!

"என் மகன் சிறப்பாகத்தான் தேர்வு செய்திருக்கிறான்!" என்று மூத்த மகனைப் பற்றியும் பெருமைப்பட்டுக் கொண்டாள்.

திடுமென, "இந்த இடத்தை இரண்டாவது தடவை பார்ப்பது போல இருக்கிறதே!" என்று சௌமினி கூற, வெளியே பார்த்துவிட்டு, "ஆ...மாம். என்னடா விஷயம்?" என்று கேட்டாள் தாயார்.

"பெரிதாக ஒன்றும் இல்லை, அம்மா! இவள், அக்கா புகழைப் பாடி முடிக்கு முன் வீடு வந்து விட்டால், வேண்டும் என்றே நான் வேகமாக ஓட்டிச் சீக்கிரமாக வீட்டுக்குக் கூட்டி வந்து விட்டதாகச் சொல்லுவாள். அதனால், இன்னொரு சுற்று சுற்றினேன். ஆனால், பழகாத புது இடத்தில் அதையும் கண்டு பிடித்து விடுவாள் என்று எதிர்பார்க்கவில்லை" என்றான் மைந்தன்.

குரலில் இருந்தது பாராட்டா? அல்லது குறையா?

கெட்டிக்காரியாகக் கண்டு பிடித்து விட்டாள் என் கிறானா? அல்லது, அவ்னை அநியாயமாகக் குற்றம்

சாட்டுவாள் என்கிறானா? அது, அவனது சொந்தக் கலை! செய்வதெல்லாம் செய்துவிட்டு, என்ன இலகுவாகத் தட்டைத் திருப்புகிறான்!

அவனுக்கு நேரே பதில் சொல்லாமல், ''உங்கள் வீட்டில், வாய்க்குப் பூட்டு ஏதேனும் வைத்திருக் கிறீர்களா, ஆன்ட்டி?'' என்று வரலட்சுமியைக் கேட்டாள் சௌமினி.

முகத்தில் புன்னகை விகாசிக்க, ''சரியான கேள்வி! வீட்டுக்குப் போனாலும், பேசலாம்தானே? இதற்கு என்னடா சொல்லுகிறாய்?'' என்று கேட்டாள் அன்னை!

''நம் வீட்டுக்குப் போனால், விருந்துபசாரம் நம் பொறுப்பில்லையா, அம்மா? கொறிக்க, குடிக்க தந்து, இவள் வாய்க்கு வேறு வேலை கொடுக்கும்போது, இப்படி இடைவிடாது பேசுவது, எப்படி சாத்தியம்?''

உற்சாகத்துடன் நகைத்தாள் பெற்றவள்.

''அத்தோடு, வாயில் உணவை வைத்துக் கொண்டு பேசக்கூடாது என்பீர்களே! இப்போது வீட்டாள் ஆகிவிட்ட தால், அது சௌமினிக்கும் ஏற்பான விதிதானே?''

சிரித்த முகமாய் வரலட்சுமியோடு, அவளது வீட்டுக் குப் போனபோது, பெரியவளின் வருகைக்காக, அங்கே ஒரு மனிதன் காத்திருந்தான்.

காரிலிருந்து வரலட்சுமியின் பின்னே இறங்கிய சௌமினியைப் பார்த்ததும், அவனது முகம் மாறிய விதம் விசித்திரமாக இருந்தது!



# 11



சௌமினியைப் பொறுத்தவரையில், அந்த மனி தனை, அதுவரை பார்த்த நினைவே அவளுக்குக் கிடை யாது. முழுக்க முழுக்க புதியவன்.

இவன் ஏன், அவளைப் பார்த்து அதிர்ச்சி அடைய வேண்டும்? அதிலும் ஏதோ பிடிக்காததைப் பார்த்தாற் போலப் பாவனை வேறு!

அப்படி ஒருவரைப் பார்த்ததும் பிடிக்காமல் போகுமா என்று சௌமினி யோசிக்கும்போது, அது பொய்யோ எனும் எண்ணம், அந்த மனிதனின் முகம் பெரிய புன் னகையைப் பூசிக் கொண்டது!

''அம்மா, பெரிய புள்ளை வீட்டுக்குப் போய் வருகிறாப் போல! புள்ளையை மன்னித்து ஏற்றுக் கொண்டதிலே, ரொம்ப சந்தோஷம்மா!'' என்றான் சிரித்த முகமாக.

யோசனையோடு பார்த்து, ''எப்படித் தெரியும்?'' என்று வரலட்சுமி வினவினாள்.

''வந்ததும் கேட்டதிலே அம்மா வெளியே போயிருக் கிறதாக, வேலைக்காரங்க சொன்னாங்க! திரும்பி வருகிறப்போ, மருமகளோட தங்கச்சிப் பொண்ணோட வந்தாக்க... இரண்டும் இரண்டு நாலு தானேம்மா?''

முகத்தில் புன்னகை மலர, ஒப்புதலாகத் தலை யசைத்து ''ஆமாம் செல்லையா. எல்லோரும் நல்ல

பிள்ளைகளாகத்தான் இருக்கிறார்கள். இந்த எட்டு மாதங்களாக, ஏதோ விதி, விலக்கி வைத்து விளை யாடியிருக்கிறது! இனிமேல் எல்லாம் நல்லபடியாக நடக்கும். காபி வந்திருக்குமே, சாப்பிடவில்லையா? நீ, வேறே ஏதாவது வேலையாக வந்தாயா? இல்லை என்றால்... வீட்டுக்கு முதல் முறையாக வந்திருக்கிறாள் பார்!'' என்றாள் வரலட்சுமி குறிப்பாக.

''கிளம்பி விட்டேம்மா!'' என்று அருகில் வைத்திருந்த கைப்பையை எடுத்தான் அந்தச் செல்லையன். கிளம்பியவன் சற்றுத் தயங்கி, ''அம்மா அந்த விஷயம்... அது காரணமாகத்தான் வந்தேன்... இப்போ... திரும்பவும் செய்ய...'' என்று இழுத்தான்.

வரலட்சுமி தவிர, மற்றவர்களுக்குத் தெரியாமல் கேட்கிறானாம்! என்ன, என்ன என்று ஆவலைத் தூண்டும் பாவனை!

என்னதான் ஆவல் என்றாலும், அடுத்தவர் விஷயத் தில் மூக்கை நுழைப்பார்களா? அதுவும் எல்லாம் நல்ல படியாக நடந்தேறியிருக்கும் இந்த நேரத்தில்!

சௌமினி, உட்புறமாகத் திரும்பி, ஹால் சுவரில் ஒரே மாதிரிச் சட்டமிட்டு மாட்டியிருந்த சில அற்புதமான சித்திரங்களை ஊன்றிப் பார்வையிடலானாள்.

ஆனால் வரலட்சுமியின் பதில் காதல் விழாமல் இல்லை!

''வேண்டாம், வேண்டாம்!'' என்றாள் அவள் அவசர மாக, ''இனி இந்த வேலை எதுவும் வேண்டாம்! அவசிய மில்லை! ஒரு.. நாலு நாள் கழித்து என்னை வந்து பார்! இப்போது கிளம்பு!'' என்று அவனை அனுப்பிவிட்டு உள்ளே வந்தாள் வரலட்சுமி.



அதே சமயம் காரை ஷெட்டில் நிறுத்திவிட்டு, சதானந்தனும் உள்ளே வந்து சேர்ந்தான்.

அவனைக் கண்டதும் ''மருந்து அலமாரிக்குள், உன் கை உடைந்தபோது, தொட்டில் மாதிரிக் கையில் தொங்க விட்டிருந்தாயே! அதை எடுத்து வா, கண்ணா, சௌமினி கையில் மாட்டி விட்டால் அங்கங்கே இடித்து, வலி பெருகாமல் இருக்கும். காரில் இருந்து இறங்கும்போது கூட, முகத்தில் வலி தெரிந்தது!'' என்றாள் வரலட்சுமி.

கவனித்திருக்கிறாளே என்று ஆச்சரியமாக இருந்தது, சௌமினிக்கு. சுரபிக்கு முகம் பார்த்து உதவ, இந்த நேரத் தில் மாமியார் கிடைத்தது நல்லதாயிற்று! ஏனென்றால், சுரபி தன் வலி வேதனையை, லேசில் வெளியே காட்டு கிறவள் அல்ல!

ஆனால், கட்டு தொட்டில் எல்லாம் அதிகப்படியாகத் தோன்ற, ''அதெல்லாம் வேண்டாம், ஆன்ட்டி! இப்போது எவ்வளவோ பரவாயில்லை!'' என்று மறுத்தாள்.

ஆனால் அவளது மறுப்புக்குத் தாய், மகன் இருவரிட முமே மதிப்பில்லை.

தாய் சொல் தட்டாத தனயனாக சதானந்தன் மாடி யேறிச் செல்ல ''இரண்டு நாள் கையைத் தொங்க விடா மல் இருந்தால் நல்லது, சௌமினி. அப்புறம் இன் னொன்று என்னை ஆன்ட்டி என்று, யாரோ போலக் கூப்பிடாதேம்மா. சுரபிக்கு அத்தை என்றால், உனக்கும் அதே முறைதான். அப்படியே சொல்லு. முதலில் உட்கார். உன் விரலுக்குக் களிம்பை எடுத்து வருகிறேன்'' என்று உள்ளே சென்றாள்.

தனியே உட்கார்ந்திருக்க மனம் இல்லாமல், ஹாலில் மாட்டியிருந்த படங்களை சௌமினி தொடர்ந்து பார்வை யிடலானாள்.

ஆனால், மனம் அதில் நில்லாமல் எங்கோ ஓடியது.

அக்காவுக்குப் போல, இந்தப் பெண்மணி அவளுக்கும் அத்தை என்றால், சதானந்தன் எப்படி? இவனுடைய சகோதரனை அழைப்பது போல, அவனையும் அத்தான் என வேண்டுமா?

மனதுக்குள் சொல்லிப் பார்த்தால், என்னவோ விசித் திரமாக இருந்தது.

சம்பந்தா சம்பந்தம் இல்லாமல், பழைய திரைப் படங்களில், கணவனை 'அத்தான்' என்று அழைப்பது நினைவு வந்தது!

அந்த மாதிரி அவள், சதானந்தனை எதற்கோ கூப்பிடுவது போலக் காட்சி கூட, மனதில் தோன்றிவிடச் சட்டென்று உடம்பை உலுக்கி விட்டுக் கெண்டாள்.

சேச்சே, மலைப் பகுதியில் இருந்தால், குரங்கு மாதிரி, மனமும் எங்கெங்கோ தாவ வேண்டுமா? என்ன அசட் டுத்தனம் என்று தனக்குத்தானே, குட்டிக் கொண்டவள் ''அப்படி என்ன யோசனை? குட்டுப் போட்டு நிறுத்தும் அளவுக்கு?'' என்ற கேள்வியில் முகம் சிவந்து, துள்ளிக் குதித்தாள்.

என்னவென்று இவனிடம் எப்படிச் சொல்ல முடியும்?

ஆனால், மாடிக்குப் போனவன், இப்படிச் சத்தமின்றி வரவேண்டுமா?

வந்து கொண்டிருந்தானா? அல்லது, அங்கேயே நின்று, அவளை வேவு பார்த்தானா?



அவனது அவநம்பிக்கைத் தெரியாதா? வேவுதான் பார்த்திருப்பான்! எதையெதை, எப்படியெப்படிப் பேராசை யோடு பார்க்கிறாள் என்று... முதல் நாள் அழகழ காய் அந்தப் பூச்செடிகளைப் பார்த்ததற்கே, சொல்ல வில்லை?

நின்று, இந்தப் படங்களைப் பார்வையிட்டது கூடத் தப்பு!

''என்ன பதிலையே காணோம்? என்ன யோசனைக்காக இந்தக் குட்டு?'' என்று விடாமல் மறுபடியும் கேட்டபடி இறங்கி வந்தான் சதானந்தன்.

நினைத்ததைச் சொன்னால், அவ்வளவுதான்! அக்கா மாதிரி, ஆள் பிடிக்க எண்ணியதாகத் தப்பா எண்ணி, இன்னும் ஏதாவது சொல்லுவான் என்று எண்ணும்போதே,

மீண்டும் ஏதோ புரியாமல் குழப்பியது!

தப்பா? தப்பேதானா?

ஆனால், இவனிடம் எண்ணம், குழப்பம் எதையும் காட்டிக் கொள்ளக் கூடாது என்று தோன்றிவிட, ''யோசனைக்காகத்தான் இருக்க வேண்டுமா? இன்றைய பரபரப்பில், எதையேனும் மறந்ததற்காக இருக்கக் கூடாதா?'' என்று சமாளித்தாள் சௌமினி.

''இருக்கலாம்... ஆனால், அப்படியில்லையோ! என்பது, அடியேன் சந்தேகம். ஒத்துக் கொள்வதாக இருந்தாலும், அப்படி என்ன மறந்து போயிற்றாம்?''

அதற்குள் ஒருவாறு சுதாரித்துக் கொண்டு ''ம்ம்ம்... சொன்னார்கள்! அதையெல்லாம் உங்களிடம் சொல்வதற் காகத்தானே, காத்துக் கொண்டு இருக்கிறேனாம்'' என்றாள் அவள் கிண்டல் **குரலில்.**

வார்த்தையில் ஏற்று, ''சொல்லு, சொல்லு. கேட்கத்தான் நானும் காத்துக் கொண்டு இருக்கிறேன்!'' என்று ஆவல் காட்டி அவன் சொல்லி முடித்தபோது, இருவருக்கும் சிரிப்பு வந்து விட்டது.

இப்படிச் சிரித்தால் எவ்வளவு நன்றாக இருக்கிறது என்று அவள் நினைக்கும்போதே ''எப்போதும் இப்படிச் சிரிப்பதற்கென்னவாம்?'' என்று கேட்டான் சதானந்தன்.

திகைத்து விழித்தாள் அவள்!

எதிலும் எப்படி முந்திக் கொள்கிறான்! ஆனால், சிரிப்பே மறக்கும்படி, முதலில் கெடுத்தவனும் அவனே தானே?

''தன்னைக் கேட்க வேண்டிய கேள்விகளை அடுத்தவரிடம் கேட்கிறவர்களை என்னவென்று சொல்வது?''

''அர்த்தம்? நீங்கள் சிரியோ சிரி என்று சிரித்துக் கொண்டே இருக்கிறவர்கள்! நாங்கள் முசுடு என்பதா?''

''புரிந்து கொண்டால் சரி!''

இவனோடு பதிலுக்குப் பதில் பேசி உரையாடுவது நன்றாகத்தான் இருக்கிறது என்று எண்ணினாள் சௌமினி.

சென்னை வீட்டில், குணா, சுரபியோடு சேர்ந்து மூவருமாக அரட்டையடித்தது நினைவு வந்தது! ஆனந்தனிடம் வேறுபாடு தோன்றியதில்லை! இப்போது இவனும் சேர்ந்தால்...

திரும்பவும், மூளை புல் மேயப் போவது போலத் தெரிகிறதே! ஊகூம். இது சரியில்லை!

''ஆன்ட்டி களிம்பு எடுக்கப் போனவர்களைக் காணோம்! இல்லாவிட்டால் பரவாயில்லை'' என்றபடி உள்புறம் எட்டிப் பார்த்தாள் சௌமினி.



அவள் இங்கே சொன்னது, உள்ளே கேட்டது போலக் களிம்புடன் வரலட்சுமி ஹாலுக்கு வந்தாள்.

''இது மூலிகை களிம்பு, சௌமினி! என்று மாந்தளிர் நிறத்தில் இருந்த களிம்பில், கொஞ்சமாக எடுத்து, தோல் பிய்ந்திருக்கும் இடம் தவிர, வீங்கியிருந்த மற்ற இடங்களில் லேசாகத் தடவி விட்டாள்.

''தேய்க்கக் கூடாதும்மா. வெறுமனே தடவ மட்டும் செய்ய வேண்டும். காயக் காய, அப்படியே ஆவியாகி விடும். இரவு ஒரு தரம் போடு!'' என்றவள் மகனிடம் திரும்பி ''சதா, நீ அந்தத் துணியைத் தொட்டில் கட்டுப் போட்டுவிடு'' என்று பணிந்தாள்.

அவசியமற்று சதானந்தன் அவளைத் தொடவில்லை தான்.

குணாவோடு சேர்ந்தே படித்ததால், உடன் பயில்வோருடன், இரண்டடி தள்ளி நின்றுதான் பேசுவது என்று சௌமினி விறைப்பாக இருந்ததும் இல்லை! நண்பர்களிடையே, ஆண் பெண் பேதமின்றிப் பழகுவது தான்.

ஆனால், சதானந்தன் கட்டுப் போட்டு முடிக்குமுன், சௌமினிக்கு நெற்றி வியர்த்து விட்டது!

அந்த மிதமான குளிரான தட்ப வெப்பத்திலும்!

''விரல் நசுங்குவதற்கெல்லாம் இந்தக் கட்டு அவசியம் இல்லைதான். ஆனால், கையை முழுதாகத் தொங்கப் போட்டால், விண்விண்ணென்று குத்தலெடுக்கத் தொடங்கிவிடும். இன்னொரு வசதியாக, என்னவோ 'பட்ட காலிலே படும்' என்பார்களே, அதுபோல எங்கேனும் இடிபடாமலும் இருக்கும்... இந்த அளவு வசதியாக

இருக்கிறதா?'' என்று அவன் கேட்க, தலையாட்டி வைத்தாள் அவள்.

அதிகப்படி நீளத்தை மடித்து 'பின்' குத்திவிட்டு, சதானந்தன் நகர்ந்த பிறகே சௌமினியின் மூச்சு ஒழுங்காக வந்தது!

வரும்போதே சதானந்தன் சொன்னது போல, சிற்றுண்டி, பானம் எல்லாம் வரிசையாக வந்தன.

வெளிப்பார்வைக்கு சாதாரணமாக நடந்து கொண்டாலும், சௌமினியின் மனம் மிகவும் குழம்பிப் போயிருந்தது!

இந்த சதானந்தனின் அருகாமையில், அவள் ஏன் இப்படி தடுமாறிப்போனாள்?

தடதடவென்று நெஞ்சு அடித்துக் கொண்ட வேகமும், சத்தமும், அருகில் இருந்த அவனுக்குக் கேளாதிருந்தது, அதிசயமே!

அவளது நல்லகாலமும் கூட! கேட்டிருந்தால், அதற்கு வேறு, ஏன், என்ன என்று கேள்விகள் பிறந்திருக்கும்!

பதில் சொல்ல முடியாமல், அவள் இன்னமும் திணறிப் போயிருப்பாள்!

முதலில், அவளுக்கே பதில் தெரிந்தால் அல்லவா, அவனுக்குச் சொல்வதற்கு?

அந்த 'அத்தான்' விவகாரம் வேறு, அவளை மருள வைத்தது!

அதெப்படி திடுமென, அப்படிப்பட்ட காட்சி மனதில் தோன்றலாம்? அதுவும், கண்ட முதல் நாளில் இருந்து அவளைக் கரித்துக் கொட்டியவனைப் போய், அத்தான்,



பொத்தான் என்று அழைப்பதாக! அதுவும் கூடச் சும்மா அல்ல!

முதலில் அவள் இங்கே வந்ததே தப்பு!

அக்கா மாமியார் அன்பாகப் பேசி அழைக்கவும், யோசிக்காமல் கிளம்பினாளே!

இப்போது, திரும்பிப் போவது எப்படி? சதானந்தன் தானே கூட்டிப் போக நேரும்? அவனோடு தனியாக அல்லவா செல்ல நேரும்?

அதை யோசித்துக் குணாவையாவது கூடக் கூட்டி வந்திருக்கலாம்!

தனியாகச் செல்லும்போது,முன்பு போலக் கடுமையாகப் பேசுவானோ?

ஆனால், அது கூடப் பரவாயில்லை! கோபம் வந்து, திருப்பிக் கொடுக்க முடிந்தது!

இப்போது அண்ணனுக்காக, அவளிடம் கனிவு காட்டும்போதுதான், இதயம் அதிக வேலை செய்து, மூளை மரத்து, என்னென்னவோ ஆகிவிடுகிறது!

அதனால்...

அவளது தோளைத் தொட்டு, ''என்னம்மா, வலி குறையவே இல்லையா?'' என்று வரலட்சுமி கேட்கவும், சௌமினி திடுக்கிட்டு விழித்தாள்.

வேண்டாத யோசனையில், பேச்சைக் கவனிக்கவில்லை!

''சா... சாரி! என்ன கேட்டீர்கள். ஆன்.. அத்தை?'' என்று தடுமாறினாள் அவள்.

''முக்கியமாக ஒன்றுமில்லை. உங்கள் இருவரில் முதலில் பிறந்தது, குணாவா, நீயா என்று அம்மா கேட்டார்கள். ஆனால் நீதான் இங்கே இல்லை!'' என்றான் சதானந்தன்.

அவனது கடைசி வாக்கியத்தை கேளாதது போல ஒதுக்கி ''நான்.. நான்தான் அத்தை. அதனால் அக்கா என்று எனக்குக் குணா மரியாதை கொடுக்க வேண்டும் என்று நானும், இரட்டையரில் பிந்திப் பிறந்தவர்கள்தான் மூத்தவர். அதனால் அவன்தான் மரியாதைக்குரிய அண்ணன் என்று குணாவும் சொல்லிச் சண்டை போடுவோம்'' என்று, வேகமாகப் பதில் சொன்னாள், முந்தையத் தாமதத்துக்கு ஈடு செய்வது போல!

''அது போகட்டும். ஏன் முகமே சரியாக இல்லை? வலி அதிகமாகவே இருக்கிறதா? எதற்கும், டாக்டரிடம் பார்த்து விடலாமா?'' என்று வரலட்சுமி, சற்று கவலையாகவே வினவினாள்.

''ஆமாம்மா. மரத்தில்தான் அடிபட்டது என்றாலும், எதற்கும் ஒரு டிடி போட்டுவிட்டால் நல்லது'' என்று எழுந்தான் சதானந்தன்.

''இல்லை, இல்லை டாக்டர் எல்லாம் வேண்டாம். இது அந்த மாதிரிக் காயமே இல்லை!'' என்று சௌமினி அழுத்தமாக மறுத்தாள்.

''எல்லோரும் சின்னப் பெண்ணாகக் கருதிக் கொஞ்சுகிறார்கள் என்று, நிஜமாகவே உன்னைச் சிறு பெண்ணாக, நீயும் நினைத்துக் கொண்டாயா? ஓர் ஊசி போட்டுக் கொள்ள, இப்படிப் பயப்படுகிறாயே!'' என்று சதானந்தன் கேலி பேச,



''நானாவது, பயப்படுவதாவது?'' என்று வீராப்பாக உரைத்தாள் சௌமினி.

ஆனால், இந்தப் பேச்சில் ஒரு வழியைக் கண்டு பிடித்து ''எனக்கு வலிக்கான மாத்திரையெல்லாம் போட்டுப் பழக்கம் இல்லை, அத்தை. அதனால், கொஞ்சம் சோர்வாய், மந்தமாக இருக்கிறது. பேசாமல் கொஞ்ச நேரம் படுத்துத் தூங்கினால், நன்றாகிவிடும் என்று நினைக்கிறேன். கிளம்பட்டுமா, அத்தை?'' என்று தணிந்து கேட்டாள்.

இந்த மாதிரிக் காரணம் காட்டிக் கிளம்பியதால், காரிலும், கண்ணை மூடிப் பின்புறம் சாய்ந்து, பேச்சைத் தவிர்க்க முடிந்தது!

சந்தேகமாகப் பார்த்தபோதும், அவனும் அமைதியைக் கலைக்கவில்லை!

தொடர்ந்த சில நாட்கள், சௌமினியைத் தவிர, மற்ற எல்லோருக்கும் மிகுந்த மகிழ்ச்சியோடு கழிந்தன.

சௌமினிக்குமே, தனியே இருந்து யோசிக்கும் போதுதான், குழப்பமெல்லாம்.

எல்லோருமாகச் சேர்ந்து பேசும்போது, சுற்று வட்டாரத்தில் பார்த்து ரசிக்கக் கூடிய இடங்களில் சுற்றும் போதும், நன்றாகத்தான் இருந்தது!

அப்படிச் செல்லும்போது, அங்கங்கே ஒரு குறிப்பிட்ட கோயிலைப் பார்த்துக் கன்னத்தில் போட்டுக் கொள்வாள் சுரபி.

அவள் திருமணமாகி வரும்போது, முதல் முதலாகப் பார்த்த கோயிலாம்.

ஒருநாள், அந்தக் கோயில் பக்கமாக ஒரு பஸ் போவதைக் கவனித்து, சௌமினிக்குக் காட்டினாள் அவள்.

மலை சார்ந்த பூமி என்பதோடு, ரசிக்கத்தக்க விதமாகப் பேசியவாறே அவர்களைக் கூட்டிச் சென்று,அங்கங்கே உள்ளே அழகான காட்சிகளைக் காட்டுவதில் சதானந்தன் வல்லவனாக இருந்தான்.

பொல்லாத வில்லனாக அவனைக் கருதிய காலத்தி லேயே, குணாவுக்கு அவனோடு பேசப் பிடிக்கும்!

இப்போதோ, சதானந்தன் தாயோடு அவர்கள் வீட் டுக்குச் சென்று வந்து, இன்னும் நன்றாகப் பழகத் தொடங்கிய பின்னரோ, சதா சார் இப்படி, சதா சார் அப்படி என்று,அவனது புகழைப் பாடி, பயங்கரமாக அறுத்தான்.

''போதுமடா!'' என்று உடன்பிறந்தானை அடக் கியபோதும், அந்த அறுவையையும் உள்ளூர ரசிக்கவே தோன்றியது சௌமினிக்கு.

அவன் சொல்லும்போது கேட்டு ரசித்துவிட்டு, அப்புற மாகத் தனிமையில் யோசித்துப் பார்க்கையில், மிரண்டு போவாள் அவள்.

பார்க்கப் பார்க்க, சதானந்தனின் தோற்றம், பேச்சு, செயல், எல்லாமே ரொம்பப் பிடிக்கிறதே.. ஆனால், அவன் பேசி பழகுவது எல்லாமே அண்ணன் அன்று கேட்டுக் கொண்டதற்காக நடிக்கும் நாடகமாக இருந் தால்?

அப்படி இருக்குமா என்று தொடங்கிய ஐயம், அப் படியேதான் என்ற முடிவுக்கும் வந்தது!



ஏனெனில், மலையளவாகச் சதானந்தன் குவித்து வைத்திருந்த வெறுப்பு. அவனுடைய அண்ணனின் ஒரு பேச்சில் அடியோடு மாறிவிடுமா, என்ன?

அவளுக்கு நம்பிக்கை வர மறுத்தது!

சதானந்தனின் இந்த முகத்தை நம்பி, என்னென்னவோ கற்பனைகளை வளர்த்துக் கொண்டு, பின்னர் வருத் தப்படக் கூடாதில்லையா?

தனக்குத்தானே அறிவுறுத்திக் கொண்ட அப்போது தான், கண்ட கண்ட கற்பனைகள், தனக்குள் வளர்ந்திருப் பதைச் சௌமினியே முழுமையாக உணர்ந்தாள் எனலாம்! என்ன பைத்தியக்காரத்தனம்!

ஆனந்தனைப் போலவே, அவனும் பார்க்க நன்றாகவே இருந்தான்தான்! அதை ஒத்துக் கொள்ள வேண்டியதுதான்!

ஆனால், இருவருக்கும் இடையே உள்ள ஒற்றுமை அது மட்டும்தானே?

ஆனந்தன் நோகப் பேசியதே இல்லை. அன்று கரு வுற்றிருந்த மனைவிக்கு ஆதரவாகப் பேசியபோது கூட வருத்தத்துடன் கண்டித்தானே தவிர, கோபமோ, குத்தலோ கிடையாது!

சதானந்தனோ, எடுத்த எடுப்பிலேயே, எண்ணெயில் விழுந்த அப்பம்தான்!

இருவரும், எப்படித்தான், ஒரே வயிற்றில் பிறந்தார் களோ?

இதெல்லாம், சௌமினி தனியே இருக்கும்போது தோன்றும் எண்ணங்கள். அதாவது, தூங்கு முன், தூக்கம் வராமல் கிடந்து யோசிப்பவை!

சதானந்தனைப் பார்த்ததும் மறந்து போகிறவை!

எனினும், இந்த அதிகப்படிப் பழக்கத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதுதான், தனக்கு நல்லது என்ற முடிவுக்கு சௌமினி வந்தபோது, எப்படியோ, தானாகவே அது நடந்தது.

கல்லூரி வாசகசாலையை விரிவுபடுத்துவதால், வந்து ஊதியத்தோடு கூடிய உதவி செய்ய முடியுமா? என்று குணசீலனுக்குக் கல்லூரி முதல்வரிடமிருந்து? அழைப்பு வந்தது!

முன்பும், வாசகசாலை வேலையைப் பார்த்தது, அவன் தான். வேலையும் பிடித்தமானது! அத்தோடு, மேல் படிப்புக்கு உதவி செய்கிறவர்களோடு பழகும் வாய்ப்பும் இருக்கும் என்று அவன் கிளம்பிவிட்டான்.

''எனக்கும் ஏதாவது வாய்ப்பு கிடைக்குமா என்று பாரடா!'' என்று அவனிடம் சொல்லி வழியனுப்பி வைத்தாள் சௌமினி.

அடுத்து, சுரபிக்கும் ஒருநாள் தலை சுற்றிவிடவே, அவளைக் கூட்டிக் கொண்டு அலைய வேண்டாம் என்று வரலட்சுமி சொல்லிவிட்டாள்!

வேண்டாம் என்று வெறுத்து ஒதுக்கியதற்கு நேர் விரோதமாக, பரிமளமே உயிருடன் இருந்தால் கூட, இவ்வளவு பார்க்க முடியுமா என்பதுபோல, மருமகளிடம் அன்பு காட்டினாள் வரலட்சுமி.

பூவோடு சேர்ந்த நாரும் கூந்தலேறுவது போல, சுரபியோடு பிறந்ததில், சௌமினிக்கும், அந்தப்பாசமும் பிரியமும் கிட்டின.



இந்த சந்தோஷத்தின் இடையே தனக்குத்தான் உறுத்தல் என்று எண்ணினால், தமக்கையும் ஒருநாள் கவலை படிந்த முகத்துடன், இலக்கற்று வெறிப்பதைக் கண்டு, சௌமினி திடுக்கிட்டுப் போனாள்!

ஏன், என்ன என்று எவ்வளவு யோசித்தும், அவளால் ஒரு காரணத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

குணசீலனைப் பற்றிய கவலையோ என்று எண்ணவும் வழியின்றி, கல்லூரி முதல்வர் அவனுக்கு உணவு வரை ஏற்பாடு செய்து கொடுத்து, மிகவும் உதவியாக இருப்பது பற்றி, முந்திய நாள்தான், அவன் போன் செய்து சொல்லியிருந்தான்!

கருவுற்றிருக்கும் பெண்களுக்கே உரியது என்பார்களே, அப்படி ஏதேனும் ஆசையாக இருக்கக் கூடுமோ என்று ஒரு தரம் யோசித்துப் பார்த்தாள். தனக்காக மற்றவர்களுக்கு தொந்திரவு கூடாது என்று மனதிற்குள்ளேயே வைத்து ஏங்குகிறாளோ?

சுரபி அப்படிச் செய்யக் கூடியவள்தான்.

ஆனால், என்னவென்றாலும்தான் இப்போது ஆசை ஆசையாகச் செய்து கொடுப்பதற்கு, அத்தை விருப்பமாக இருக்கிறாளே!

இது பிடிக்குமா, அது பிடிக்குமா? என்று கேட்டும், கேளாமலேயும் கூடத் தினமும் இரண்டு தினுசு, தாயார் கொடுத்தனுப்பியதாக, சதானந்தன் கொண்டு வந்து, தந்துவிட்டுப் போகிறானே!

கொடுக்கிறவன், சும்மாக் கொடுத்துவிட்டுப் போகாமல், ''இது அண்ணிக்கும்மா! அவர்கள் பேரைச் சொல்லி, நீ காலி பண்ணிவிடாதே! அப்புறம் உன் அழகான உடம்பு

ஊதிப் பீப்பாயாகி, நிஜமாகவே பொய்யோ எனும் இடையாகிப் போகும்!'' என்று வேடிக்கை போல எச்சரித்து விட்டுப் போவான்.

நிஜமான எச்சரிக்கை என்றே, சௌமினிக்குத் தோன்றும்! ஆனால், அவளது வடிவம் அழகு என்றதோடு நில்லாமல், அந்த அழகு கெட்டுவிடக் கூடாது என்ற அக்கறையும் இருக்கிறதே என்று உள்ளூர மகிழ்ச்சியாக இருக்கும் அவளுக்கு!

ஆனால், உண்மையாகவே அக்கறையா, அல்லது அக்கறை காட்டுவது போல நடிக்கிறானா என்ற சந்தேகமும், உடனேயே வந்துவிடும்!

இரட்டைப் பிறவி மாதிரி!

ஆனால், இப்போது பிரச்சினை, அது அல்ல!

சுரபி வாய் திறந்து கேட்டால், எதுவானாலும் நிச்சயமாகக் கிடைக்கும்! அது சந்தோஷமாகவே செய்து தரப்படும்!

பின்னே என்ன என்று சற்று நேரம் குழம்பிவிட்டு, பொறுக்க மாட்டாமல், தமக்கையிடம் நேராகவே போய்க் கேட்டுவிட்டாள், சௌமினி.

அசடு வழிய வெட்கத்துடன், அக்கா ஏதாவது சின்னக் காரணம் சொல்வாள் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக, அவசரமாகச் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ''ஷ் மின்னி, இப்போது வேண்டாம். பிறகு சொல்கிறேன்!'' என்று தணிந்த குரலில் சுரபி ரகசியமாகக் கூறவும், சௌமினி மிரண்டு, கலங்கிப் போனாள்!



# 12



கருவுற்றவளின் ஏதாவது அசட்டு ஆசை தவிர ஒன்றுமிராது, புகுந்த வீட்டினரிடம் அது பற்றிச் சொல்ல, தமக்கை வெட்கப்பட்டுக் கொண்டிருக்கக் கூடும் என்றுதான் அதிகப்படியாக சௌமினி நினைத்தது.

ரொம்பவும் அசட்டு ஆசை என்பதால்தான், சொல்வதற்கு ரொம்பத் தயங்குகிறாள் என்ற எண்ணம்!

ஆனால், அவளைச் சுரபி வாய் மூட வைத்த விதம் அவளுக்கு, அச்சமளித்தது! பலதும் எண்ணிக் கலங்க வைத்தது!

ஆனந்தனுக்குப் பழைய காதல் ஏதாவது தலை தூக்கி விட்டதோ, அல்லது சதானந்தன் வேஷம்தான் போடுகிறான் என்று தீர்மானமாகத் தெரிந்துவிட்டதா என்றெல்லாம் யோசித்து, அவள் மனதைப் புண்ணாக்கிக் கொண்ட பிறகு, சுரபி, அவளிடம் விஷயத்தைச் சொன்னாள்.

அதுவும் கூட, சதானந்தன் வந்து, ஏதோ புளிப்பு ஜாம் வைத்துச் செய்த பிஸ்கட் ஒன்றைக் கொணர்ந்து கொடுத்துவிட்டு, ஆனந்தனோடு சேர்ந்து அலுவலைப் பார்க்கச் சென்றபிறகு, மாராயிக்கு எதையோ கொடுத்து, அவளது வீட்டில் கொண்டு கொடுத்து வருமாறு அனுப்பிவிட்டு, வாட்ச்மேன் வெளி கேட்டில் நிற்கிறானா என்று கவனித்துவிட்டு, அதன்பிறகே, விஷயத்தைத் தெரிவித்தாள்.

அவள் சொல்லச் சொல்ல, சொத்தென்று ஆகிவிட்டது சின்னவளுக்கு!

''என்னக்கா, இதற்குப் போயா, இவ்வளவு 'பில்ட் அப்' கொடுத்தாய்? நான் என்னென்னவோ நினைத்துப் பயந்து விட்டேன்!'' என்று ஒருபுறம் ஏமாற்றமும், மறுபுறம் அப்பாடி என்ற ஆறுதலுமாகக் கேட்டாள், அவள்! ''ஆனால், பெரியதைக் கூடச் சின்னதாக்கிச் சொல்வாயே தவிர, இப்படிப் பெரிதுபடுத்துவது, உனக்குப் பழக்கமே கிடையாதே!'' என்றாள் தொடர்ந்து.

லேசாகப் புன்னகை செய்து ''உனக்குத்தான் விஷயம் முழுதாகப் புரியவில்லை மின்னி!'' என்றாள் மூத்தவள்.

''என்ன புரியவில்லை? நாம் முதல் முதலாக வந்த போது, வழியில் பார்த்த கோயிலுக்குப் போக வேண்டும்! அவ்வளவுதானே? இதில் புரிவதற்குப் பெரிதாக என்ன இருக்கிறது? அத்தானிடம், அல்லது அத்தையிடம் சொன் னால், மிக எளிதாக நடக்கப்போகிற விஷயம்!'' என்றாள் தங்கை.

''அதுதான் இல்லை!'' என்றாள் சுரபி. ''நான் முழுவது மாகச் சொன்னால்தான் உனக்குப் புரியும். ஆனால் இது வேறு யாருக்கும் தெரியக்கூடாது. குறைந்தபட்சமாக இப்போதைக்கு. அதனால் யாரேனும் வருகிறார்களா என்று, ஆளுக்கொரு பக்கம் கவனித்தவாறே பேசலாம்'' என்று, அதற்குச் சரியாக அமர்ந்த பிறகு, சுரபி சொல்ல லானாள்.

''பார் மின்னி, இப்போது அத்தை, சதா, எல்லோரும் நம்மிடம் மிகவும் பிரியமாக இருக்கிறார்கள். வெறும் பிரியம் அல்ல. மிக அதிகமான பிரியம்! நமக்கு அம்மா



இல்லையே என்ற பரிவு! அம்மா இல்லாததால், அம்மா வின் பொறுப்பையும் சேர்த்து எடுத்துக் கொண்டு என்னைக் கவனிக்கிறார்கள். பரிவும் பாசமுமாகப் பாதுகாக்கிறார்கள். அவர்களுடைய வாரிசை ஏந்தியிருப்ப தால், ரொம்ப அதிகப்படியான பாதுகாப்பு...

குறுக்கிட்டு, ''அதற்காக உன்னைக் கோயிலுக்குக் கூடப் போக விட மாட்டார்கள் என்றா நினைக்கிறாயா?'' என்று சௌமினி வினவினாள்.

''கோ..யில் என்றால், அது சாதாரண கோயில் அல்ல! மலைமேல் இருப்பது! இப்போது நாளனன்று ஊர்த் திருவிழாக்காக எல்லோரும் போகிறார்களே, அதற்கே அத்தை என்னை வரவேண்டாம் என்று சொல்லிவிட் டார்கள். உறவினர் மட்டுமில்லாமல், அறிந்தவர், தெரிந் தவர், அத்தனை பேரும் வந்து வந்து என்னைப் பார்ப்பார்களாம்! எனக்கு ஓய்வே இல்லாது போகுமாம், அதனால் இன்னொரு முறை பார்த்துக் கொள்ளலாம். இந்தத் திருவிழாக் கூட்டத்தில் வேண்டாம் என்று விட் டார்கள். அத்தோடு, அன்று தலை சுற்றியதில் இருந்து, அத்தை என்னை அதிகம் நடக்கக் கூட விடுவதில்லை. இங்கே, எல்லாச் சாலைகளும் ஏற்றமும் இறக்கமுமாக இருப்பதால், கொஞ்சம் தடுமாறினாலும், உருண்டு விழுந்து பெரிய கெடுதல் நேர்ந்துவிடுமாம். அதனால் வெளியே நடக்கவே வேண்டாமாம்! இந்தச் சிறு சாலை ஏற்ற, இறக்கங்களையே இப்படிச் சொல்லுகிறவர்கள். அந்த மலைக் கோயிலுக்குப் போக எப்படி விடுவார்கள், சொல்லு? எந்த வாகனத்தில் சென்றாலும், கொஞ்ச நேரம் மலை மேல் ஏறித்தான் கோயிலை அடைய முடியும்!''

''அதற்காக?''

இந்தக் கேள்வியை ஒதுக்கி வைத்துவிட்டு, சுரபி வேறு விவரம் சொன்னாள்!

''வரும்போது நான் கும்பிட்டேனே. அந்த அம்மன் மிகவும் சக்தியுள்ள தெய்வம் என்று அத்தான் சொன்னது நினைவிருக்கிறதா? அத்தானுடைய தாயார், சும்மாவே மகனை ஒரு தவறுக்காக ஒதுக்கி நிறுத்தியிருப்பவர்கள், அவர்களது அனுமதி பெறாத திருமணம் வேறு! எனவே, அத்தையின் அன்பைப் பெறுவது மிகவும் கடினமாக இருக்கும் என்பது, நாங்கள் முதலிலேயே எதிர்பார்த்தது தான்!

''அந்தக் கோயில் என் கண்ணில்பட்டு, அதில் குடி கொண்டிருக்கும் தெய்வமும் சக்தியுள்ளது எனவும், சட்டென நான் மனதில் வெகு தீவிரமாக ஒரு வேண்டுதல் செய்தேன். ஆனந்தனுடைய தாயார், குடும்பத்தில் ஒருத்தியாக என்னை ஏற்பதோடு, மகனிடமும் அன்பாக இருக்க வேண்டும் என்று நான் வேண்டிக் கொண்டேன். அப்படி நடந்துவிட்டால், உடனே வந்து வணங்குவதாக!

''இப்போது நான் வேண்டியதை, அந்தக் காளியம்மன் நிறைவேற்றி வைத்திருக்கும்போது, நான் ஒப்புக் கொண்ட பணியை, நானும் செய்துவிட வேண்டும் தானே?'' என்று கேட்டாள் பெரியவள்.

''கட்டாயம்! இதை அத்தையிடம் சொன்னால், உன்னை மெச்சிக் கொள்வதோடு, கோயிலுக்குப் போவதற்கும் ஏற்பாடு...''

''செய்ய மாட்டார்கள்''என்று முடித்தாள் சுரபி.

''ஏ... என்னது?'' நம்ப மாட்டாமல் விழித்தாள் சௌமினி.



''ஆமாம் மின்னி. இந்த வீட்டில் யாருமே கஷ்டப் பட்டுக் கொண்டு, சாமி கும்பிடுகிறவர்கள் இல்லை! கடவுள் நம்பிக்கையே கிடையாது என்று இல்லை! ஆனால்.. காய்ச்சலில் கிடந்தாலும், தலைக்கு ஊற்றிக் கொண்டுதான் வழிபாடு செய்ய வேண்டும் என்று பார்க்க மாட்டார்கள். இப்போது, ஊர்த்திருவிழாவுக்குச் செல்வ தையே எடுத்துக் கொள்ளேன், திருமணமாகி முதல் ஆண்டு நடப்பது! மருமகளைக் கூட்டிப்போய்க் குலதெய் வத்தைக் கும்பிட வேண்டும் என்று எண்ணவில்லை! இப்போது போனால், எனக்குச் சிரமமாக இருக்கக்கூடும் என்பதற்காக மட்டுமே, பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று, என்னை இங்கேயே விட்டுவிட்டுப் போகிறார்கள்!

''இப்போது இந்த என் வேண்டுதலைச் சொன்னாலும், இப்போது உடம்புக்குச் சிரமமாக இருக்கும், பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்றுதான் சொல்வார்கள். ஆனால் மின்னி. எனக்கு இதை உடனேயே செய்தாக வேண்டும்!''

''ஏன்க்கா!''

''இந்தக் கோயில் பற்றி, மாராயியிடம் மெல்ல விசாரித்தேன். ரொம்ப சக்தி உள்ள தெய்வம் என்றாரில் லையா? அது மெய்யே! ஆனால் அது பக்தியோடு வேண்டுவதை நிறைவேற்றுவதில் மட்டும் அல்லவாம்! வேண்டுதலை ஒழுங்காக நிறைவேற்றாவிட்டாலும், நிறைவேற்றாமல் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று அலட்சியமாகத் தள்ளிப்போட்டால், அவர்களைத் தண் டிப்பதிலும், அதே மாதிரிதானாம்! இவர்களிடம் சொல்லி, பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று இவர்கள் விட்டு விட்டால், பாப்பாவுக்கு என்னவும் ஆகிவிடுமோ என்று, எனக்குப் பயமாக இருக்கிறது, மின்னி!'' என்று சுரபியின்

குரலோடு உடலும் நடுங்குவதை, ஆச்சரியத்துடன் பார்த்தாள் சௌமினி.

இது சுரபியின் இயல்பு அல்ல!

அவளும், ஓரளவு வரலட்சுமியைப் போலத்தான்.

பூஜை, புனஸ்காரம் எல்லாம் இயன்றவரை முறைப்படி செய்வதுதான். ஆனால், அலுவலகப் பணி காரணமாக அவளுக்கும், படிப்பு தொடர்பாகச் சின்னவர்களுக்கும் சரிவரச் செய்ய முடியாமல் போனால், பெரிதாக அலட்டிக் கொள்ள மாட்டாள்.

வேண்டுமென்றே விடவில்லை என்று கடவுளுக்குத் தெரியும் என்பாள்.

ஆனால் இப்போது...

கருவுற்ற பெண்களுக்கு, முதல் மாதங்களில் ஏற்படும் உடல் மாற்றங்களும், ஹார்மோன் சுரப்புகளாலும் மனதிலும் என்னென்னவோ தோன்றும் என்று ஒருதரம் டீவியில் சொல்லக் கேட்டிருக்கிறாள்.

இப்போது சுரபியும் அந்த நிலையில்தான் இருக்கிறாள் என்று, தங்கைக்கு தோன்றியது!

இவளுக்கு, இப்போது என்ன சொல்லி, எதைப் புரிய வைப்பது?

அதைவிடவும், சுரபிக்கு இப்போது, எது நல்லது?

பாப்பாவுக்கு என்னமும் ஆகிவிடுமோ என்று பயப்படு கிறாளே என்பதற்காகச் சென்று, அதனாலேயே பாப்பா வுக்கு ஏதேனும் நேர்ந்துவிட்டால்?

இதெல்லாம் பற்றி, சௌமினிக்கும் ஒன்றும் தெரி யாதே!



தப்பாக ஒன்றும் ஆகாது என்று, சுரபி நிச்சயமாகச் சொன்னாள்.

''அம்மனுக்கு வேண்டிக் கொண்டு, போகிறவர்களுக்கு எந்தப் பாதிப்பும் நேராமல், அந்த அம்மனே பாதுகாப் பாளாம். மாராயி சொன்...'' என்றவளின் பேச்சு, தங்கை யின் முகம் மாறிய விதத்தில் நின்றது.

கணநேர அமைதியின் பின் சற்று அமர்ந்த குரலில், அவளே தொடர்ந்து பேசினாள். ''மூட நம்பிக்கையில் அசட்டுத்தனமாகப் பேசுவது போல இருக்கிறதோ, மின்னி? ஒரேடியாக அப்படிச் சொல்ல முடியாதும்மா. உயரத்தில் ஏறி, இறங்குவதால், குழந்தைக்கு ஒன்றும் ஆகாது என்று எனக்குத் தெரியும். என்கூட வேலை செய்யும் நளினி, இது போன்ற சமயத்தில் திருச்சி மலைக்கோட்டையில், ஏறித் தாயுமானவரை தரிசித்து விட்டு வந்தாள். எனக்குத் தெரியும். உடல்நிலையைப் பொறுத்தவரையில், இந்த சிறு குன்றில் ஏறுவது ஒன்றும் பண்ணாது. ஆனால், மனதுக்கு அங்கே போய் வராமல் கொஞ்சமும் அமைதி இராது!'' என்றாள் தெளிவாக.

ஆரோக்கியத்துக்குப் பழுது நேராது என்பதில் இப் போது சின்னவளுக்கும் நம்பிக்கைதான். என்றாலும், இன்னொன்று அவளை உறுத்தியது.

''அக்கா, நீ இப்போது அத்தானைப் போலச் சிந்திக் கிறாய் என்று தோன்றுகிறது! பெரியவர்களிடம் சொல்லி, மறுத்து, மீறிப் போவதை விட, போய் வந்து சொல்வது மேல் என்கிறாய். அதாவது, உங்கள் திருமணம் நடந் ததைப் போல! ஆனால், அப்போதும் அத்தான் எதிர்பார்த்த மாதிரி நடக்கவில்லையே! எட்டு மாதங்களாக, எவ்வளவு மனக்கஷ்டம்!'' என்று நினைவூட்டினாள்.

சற்று யோசித்துவிட்டு, ''ஆனால், மின்னி. இதைச் சொல்லாமலே கூட இருந்து விடலாம்! ஆனால், போகா விட்டால் என்ன ஆகுமோ என்று, அந்தக் கலக்கத்தி லேயே.. வேண்டாம், போகத்தான் வேண்டும்! நாம், கோயிலுக்குப் போவதும், வருவதும் இப்போதைக்கு நமக்குள்ளேயே இருக்கட்டும்! ஆனந்திடம் மட்டும் பிறகு சொல்லிக் கொள்ளலாம்! அவர் ஒன்றும் சொல்ல மாட்டார்!'' என்றாள் சுரபி நம்பிக்கையோடு!

கணவனைப் பற்றி, சுரபி உறுதியோடு பேசுவதை கேட்க, சௌமினிக்கு நன்றாகத்தான் இருந்தது!

ஆனாலும், யாருக்கும் தெரியாமல் போய்வருவது எப்படி?

வேலையாட்கள் அத்தையிடமோ, சதானந்தனிடமே சொல்லிவிட மாட்டார்களா?

சில நாட்களாக இதைப்பற்றியே யோசித்திருப்பாள் போல! சுரபி ஒரு திட்டமே தீட்டி வைத்திருந்தாள்.

வரலட்சுமியும், இரு மகன்களுமாக, ஒரு நாள் காலையில் கிளம்பி, சொந்த ஊருக்குப் போவார்கள். மலையில் இருந்து இறங்கி, சற்று தூரம் சென்றால், அவர்களது சொந்த ஊர் வரும். மொத்தம் இரண்டு மணி நேரப் பயணம் என்று, ஆனந்தன் சொல்லியிருக்கிறார். மதியம் பொங்கல் வைத்து, அபிஷேகம் ஆராதனை செய்து கும்பிடுவார்கள். பொழுது சாயும்போது, அம்பிகை சந்நிதியில் விளக்கு பூஜை நடக்கும். இரவில் சாமப் பூஜையும் நடக்கும். மறுநாள் வரிப்பழம் என்று வரி கட்டிய ஊர்க்காரர்களுக்கு, பூஜையில் வைத்த தேங்காய் பழம் கொடுப்பார்கள். அதை வாங்கிக் கொண்டு, வந்து விட வேண்டியது!



இரவு அங்கே தங்க வேண்டி இருப்பதால், அந்த நேரம், இங்கே வீட்டுக்கு இன்னொரு செக்யூரிட்டியும் காவலுக்கு வருமாறு, ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது!

அப்போதும், விழாவுக்குச் செல்வதற்கு ஆனந்தனுக் குக் கொஞ்சம் தயக்கம்தான்! ஆனால், சாமப் பூஜை ஆண்கள் இருந்து செய்ய வேண்டியது!

இதில் வீட்டார் திரும்பி வரும் நாள், மலைக்கோயி லுக்குச் செல்ல உகந்தது அல்ல!

குடும்பத்தார் எப்போது திரும்பி வருவார்கள் என்று சரியான நேரம் சொல்ல முடியாது. இங்கேயும், காலை நேரத்து பஸ்சில் ஏறவே இடம் கிடைக்காது.

''அட, கோயிலுக்கு பஸ்சிலேயே போய் வந்து விடலா மாக்கா?'' என்று உற்சாகமாகக் கேட்டவாறு, நிமிர்ந்து அமர்ந்தாள் சௌமினி.

''கோயில் வரை போகாது. ஆனால், மாலை நாலு மணி பஸ்சில் ஏறி, காளி கோயில் வரை என்று கேட்டு இறங்கி னால், வடக்குப் பக்கம் பத்தடி எடுத்து வைத்தால், கோயி லுக்கு ஏறுகிற பாதை தெரியுமாம். பத்து நிமிஷம் மலை ஏறினால், கோயில் வந்துவிடும். பூசாரி காலையில் மட்டும்தான் இருப்பார். அதனால், கம்பி கதவின் வழியே கொண்டு போன பூவைப் போட்டுக் கும்பிட்டுவிட்டு, ஐந்து மணிக்கு பஸ்சில் திரும்பி வர வேண்டியதுதான்!'' என்று சுரபி நேரக் கணக்கும் சொன்னாள்.

வீட்டிலிருந்து பஸ் பாதைக்குச் செல்ல, பஸ் பயணம் மலை ஏற, அம்மனை வழிபட, இறங்கி வந்து மறுபடியும் பஸ் பயணம், வீடு வரை நடை எல்லாம் சேர்ந்தே, ஒன்றிலிருந்து ஒன்றரை மணி நேரத்தில் முடிந்துவிடும்

என்று சுரபி கணக்குப் போட்டு வைத்திருந்தாள். எல்லா வற்றுக்குமே, மாராயி சொன்னதைக் காட்டிலும், முப்பது சதவீதம் அதிகமாகவே நேரம் ஒதுக்கியுமே!

வெறுமனே 'வாக்' போவதாக செக்யூரிட்டியிடம் சொல்லிவிட்டுப் போய் வந்துவிடலாம்!

இனி, சௌமினி அறிந்த சுரபி! எதையும் திட்டமிட்டுச் செயல்படுகிறவள்!

பிரச்சினை இல்லாமல், போய் வந்து விடலாமே என்று எண்ணிய சௌமினி, சட்டெனத் தொய்ந்தாள்.

''அக்கா, முள்ளம்பன்றி? அதுபோல இன்னும் ஏதாவது மிருகம்.. பாம்பு.. பல்லி.. என்னவெல்லாம் வரக்கூடுமோ? மாட்டினால், அவ்வளவுதான். அதனால்..''

''நீ சொல்கிற எதுவுமே, மக்கள் அதிகம் புழங்குகிற இடங்களுக்கு வராது. அப்படியே, பன்றிகள் ஒன்றிரண்டு வந்தாலும், நமக்குத்தான் மந்திரம், இருக்கிறதே, அசை யாமல் நின்றுவிடுவது! பார்த்துக் கொள்ளலாம், மின்னி, ப்ளீஸ், சரி என்று சொல்லும்மா!'' என்று கெஞ்சினாள் பெரியவள்.

''நீ கெஞ்ச வேண்டுமாக்கா? ஒன்று செய்தே ஆக வேண்டும் என்று உனக்குத் தோன்றிவிட்டால், அப்புறம், அதற்கு அப்பீல் கிடையாதே. உன் விருப்பம் போலச் செய்யலாம்!'' என்று சின்னவள் ஒப்பவும் சுரபியின் முகமும் மலர்ந்தது!

சதானந்தனிடம் மட்டும், இந்தக் கோயிலுக்குப் போவது பற்றி ஒரு வார்த்தை போட்டு வைக்கலாமா என்று சௌமினிக்கு, இரண்டு மூன்று தரம் தோன் றியது.



ஆனால், அவன் எந்த அளவுக்கு நம்பிக்கைக்கு உரிய வன் என்பதே, இன்னமும் சந்தேகத்தில் இருக்கிறதே!

அத்தோடு, மலையில் அவர்களது வீடு இருந்த இடத்தில் 'டவர்' கிடையாது என்பதால், செல் எடுக்காது! ஹாலில் இருக்கும் 'லான்ட் லைனி'ல் அது ரகசியமாக இராது!

சுரபி குளிக்கையில் பேசினால் கூட, மாராயி, சன்னாசி பேத்தி என்று வேலையாட்கள் காதில் விழும்!

அப்படியே அது சுரபி காதுக்கும் போய்விடும்!

அக்கா மனதுக்குள் கஷ்டப்படுவாள்!

சௌமினியால் அது நடக்கக் கூடாது!

எனவே, வரலட்சுமி, தன் பிள்ளைகளோடு சொந்த ஊர்த் திருவிழாவுக்குக் கிளம்பிச் சென்றபோது நல்ல பிள்ளைகளாக வழியனுப்பி வைத்துவிட்டு, அன்று மாலையே, மற்ற யாரும் அறியாமல், அக்காவும், தங்கையு மாக மலைக் கோயிலுக்குக் கிளம்பிச் சென்றனர்.

''அதிகத் தூரம் வாக்கிங் போகிறோம், வர நேரமாகும்'' என்று மூன்றரை மணியளவில் கைப்பையுடன் கிளம்பிப் போனவர்களைக் காவல் ஆள் ஆச்சரியமாகப் பார்த்தானே தவிர, தடுத்து ஒன்றும் சொல்லவில்லை!

சொல்லும் அதிகாரமும் அவனுக்கு இல்லை! வீட் டுக்கு காவல் மட்டும்தானே, அவன் பொறுப்பு! வீட்டினுள் இருக்கும்போது, அவர்களது பாதுகாப்பும்! அத்தோடு, ஒருவருக்கு இருவராகச் சேர்ந்துதானே செல்கிறார்கள்!

எனவே, அக்காவும், தங்கையும் செல்வதைப் பார்த்துக் கொண்டு நின்றானே தவிர, எதுவும் சொன்னானில்லை.

சன்னாசி பேத்தி, சற்று வேலை செய்துவிட்டுப் போய் விடுகிறவள்.

மாராயியிடம், சற்றுத் தூரமாக நடக்கப் போவதால், வரத் தாமதம் ஆனாலும், தேட வேண்டாம் என்றார்கள்.

பஸ் நல்லபடியாக கிடைத்துவிட்டது!

ஆனால், அதற்குப் பிறகுதான், தெய்வ தரிசனம் தவிர, எதுவும் அவர்கள் எதிர்பார்த்தது போல நடக்கவில்லை!

முதலாவதாகக் காளி கோயில் நிறுத்தம் என்று கேட்டால், சற்றுத் தூரம் தள்ளிப் போயே பஸ் நின்றது.

''பத்தடி பின்னோக்கிப் போனால், காளி கோயில் வழி வந்துவிடும்'' என்ற சொல்லோடு, விசில் கொடுத்தார் பஸ் நடத்துனர்!

திரும்பிப் போய் பார்த்த பிறகுதான், இந்தப் பத்தடி என்பதற்கு இங்கே பொருளே வேறு விதமாக இருந்தது தெரிந்தது!

பத்து பத்தடி தூரம் பின்னோக்கிச் சென்று, அங்கிருந்து வடக்குப் பக்கமாக ஒரு நூறடிக்கு மேலாக நடந்து, மலைக் கோயில் வழியைக் கண்டுபிடித்து ஏறினால், மாராயியின் பத்து நிமிஷத்து நடை, அரை மணி நேரத்துக்கும் மேலாக இழுத்தது!

மலைப் பாதைகளில், அதுவும் இந்தக் கோயிலுக்கே நடந்து பழக்கப்பட்டிருந்த மாராயிக்கே கூடப் பத்து நிமிஷங்களில் கோயிலை அடைவது கடினம்.

பழக்கமற்ற வழி, வழியில் பூச்சி பொட்டு இருக்குமோ என்று அக்காவும், தங்கையும் அதிகப்படிக் கவனத்துடன் நடந்து, கோயிலை அடைய அதிக நேரம் ஆயிற்று!



ஒருவாறு மலையேறி முடித்தால், மூச்சு வாங்க, முகம் கன்றி நின்ற சுரபியைப் பார்த்து, சௌமினி பயந்து போனாள்.

''அக்கா நீ கொஞ்ச நேரம் உட்காருக்கா! உனக்கு என்னமும் பண்ணுகிறதா? கொஞ்சம் ஜூஸ் குடிக்கிறாயா?'' என்று முன்னேற்பாடாகத் தயார் செய்து, கைப் பைக்குள் வைத்திருந்த எலுமிச்சைச் சாறு அடங்கிய சிறு பாட்டிலை எடுத்தாள்.

பழச்சாறை வாங்கிக் குடித்தபோதும், சுரபி உட்காரச் சம்மதிக்கவில்லை!

சில பெரிய மூச்சுக்களை எடுத்து ஆசுவாசப்படுத்திக் கொண்டு, ''கிரிவலம் போகிறபோது இடையில் உட்காரக் கூடாது என்பார்கள். உட்கார்ந்தால், மறுபடி எழ மனம் வராதாம். இப்போதும், அப்படித்தான், வா. நேரே அம்மனைத் தரிசித்து விடுவோம்!'' என்று தங்கையைக் கூட்டிப் போனாள்.

அர்ச்சகர் கதவைப் பூட்டிக் கொண்டு போயிருந்த போதும், கம்பிக் கதவின் வழியாக காளி அம்மன் தரிசனம் அழகாகக் கிடைத்தது!

சுரபியின் கைப்பையில் இருந்த பூக்களை எடுத்துக் கம்பிகளினூடே கையை விட்டு அம்பிகைக்குத் தூவி வழிபட்டார்கள்.

அருள் பொழியும், அம்பிகையின் முகவிலாசம், வந்த சிரமத்தை மறக்க வைத்தது!

அக்காவின் குழந்தை நல்லபடியாக பிறக்க வேண்டும் என்று வரம் கேட்ட சௌமினி, ஏதோ தோன்ற தாங்கள்

இருவரும் நல்லபடியாக வீடு போய்ச் சேர வேண்டும் என்றும், வேண்டிக் கொண்டாள்.

அந்த வேண்டுதல் ரொம்பவும் அவசியம் போல, அந்தச் சின்னக் கோயிலின் ஒற்றைப் பிரகாரத்தைச் சுற்றிவிட்டுக் கிளம்பினால் வழியை மறைத்தபடி, அங்கே ஒருவன் நின்றான்!

## 13



சுரபியும் சௌமினியும் நினைத்தபடி எல்லாம் நடந்திருந்தால், அவர்கள் இப்போது வீட்டில் இருக்க வேண்டும். ஆனால் இதில் கொஞ்சம், அதில் கொஞ்சம் என்று நேரம் நிறைய ஓடி, மணி ஐந்தையும் தாண்டி விட்டது.

இந்த மலைப் பகுதியில், இன்னும் சற்று நேரத்தில் வெளிச்சம் மங்கிவிடும்!

சும்மாவே, வந்து போய்ப் பழக்கமற்ற பிரதேசம். இதில் இருள் வேறு பரவத் தொடங்கிவிட்டால், செல்லும் வழி கூடத் தெரியாமல், ஆபத்தாகிவிடக் கூடும்!

வரும்போதேனும், கோயிலைக் குறி வைத்து வந்ததால், வழி தெரியாமல் சுற்றக் கூடிய ஆபத்து நேரவில்லை!

இப்போதோ, ஒற்றையடித் தடம் போலத் தோன்றிய பலவற்றுள். பஸ் செல்லும் பாதைக்குச் செல்லும்



வழியைக் கண்டுபிடித்துச் செல்வது, சற்றுக் கடினம் தான்.

எப்படியும் வெளிச்சம் இருக்கும்போதே, மலையை விட்டு இறங்கியாக வேண்டும்!

இவை அனைத்தையும் விட, இவர்கள் வீட்டுக்குச் செல்லத் தாமதமாகி, காவல் ஆள் பயந்து, குடும்பத்தாருக்குத் தகவல் சொல்லிவிடக்கூடாதே என்பது, பேரச்சமாக இருவர் மனதிலும் வளரத் தொடங்கியது.

எதுவானாலும், அவர்களாகச் சொல்லுவது வேறு பிறர் மூலம் போவது வேறு அல்லவா?

எனவே, ''இனிச் சீக்கிரமாக வீட்டுக்குப் போவதைப் பார்க்க வேண்டும்'' என்று, தங்கையிடம் கூறியவாறு, கடைசியாகக் கன்னத்தில் போட்டுக் கொண்டு வெளிப்புறம் திரும்பிய சுரபி, அங்கே நின்றவனைக் கண்டு சற்றுத் திகைத்தாள்.

சற்று வழியை மறைத்தாற்போல அங்கே நின்றவன், சுரபிக்கு அறிமுகம் ஆனவனே. பண்ணை அலுவலகத்துக்கு ஆனந்தனோடு செல்லும்போது பார்த்திருக்கிறாள்.

ஆனந்தன் அறிமுகம் செய்து வைத்ததை அடுத்து, அவனிடம் ஓரிரு வார்த்தைகள் பேசியும் இருக்கிறாள்.

அதே பழக்கத்தில் அவனுக்குக் கரம் குவித்துக் ''கோயிலுக்கு வந்தீர்கள் போல'' என்று பொதுவாகச் சொன்னவள், பதிலுக்காக நில்லாமல், மேலே செல்ல முயன்றாள்.

வழியை விட்டு நகராமலே நின்று, ''இந்தப் பக்கம் எங்கேம்மா போகிறீர்கள்?'' என்று வினவினான் அவன்.

அவள் கீழே என்பது போலக் கையை மட்டும் காட்டவும், ''அய்யோ! அதுக்கு, அந்தப் பக்கமில்ல போகணும்!'' என்று எதிர்த் திசையைக் காட்டினான்.

சுரபி யோசனையாகப் பார்க்க, ''வருகிறப்போ, அப்படி வந்தீர்கள் போல! இப்ப, பாறை விழுந்து வழியை அடைத்துவிட்டதே! நானே சுற்றித்தான் வந்தேம்மா! மரத்து மேலே எல்லாம் ஏறி.. அது உங்க லேடீசாலே முடியாதும்மா. எதிர்ப்பக்கமாக இறங்கிப் போனால், பஸ் கூட, நேரே பாதையிலேயே நிற்கும்'' என்றான் அவன்.

அந்த எதிர்த்திசைப் பாதைக்கு விளம்பரம் போலப் பேசுகிறானே என்று எண்ணினாள் சௌமினி. ஆனால், இந்த அக்கா அறிமுகம் கூடச் செய்யாமல் இருக்கிறாளே! தெரிந்த ஆளைப் பார்த்துவிட்டோமே என்கிற பதட்டமாக இருக்குமோ என்று யோசித்தபடி பேசாமல் நின்றாள் சௌமினி.

இருக்கும் ஏனெனில், அவன் வரலட்சுமிக்குத் தெரிந்தவன். அத்தையின் வீட்டில்தான், சௌமினி அவனை, ஒரு தடவை பார்த்தது.

வந்தவனே தொடர்ந்து, ''நானே வந்து வழிகாட்டுவேன். ஆனால், நான் மேற்காலே போக வேணும். அந்தப் பக்கமாக இறங்கி, ஒருத்தனை வேலைக்கு வரச் சொல்லணும். வரட்டுமா? எதுக்கும் கொஞ்சம் சீக்கிரமாகவே போங்கம்மா. பாறைக்கடியிலே இருந்த பாம்புகள் எல்லாம் அங்கங்கே அலைந்துகிட்டு இருக்கும்!'' என்று இன்னொரு விதமாகவும் அவர்களை கலங்கடித்துவிட்டு, அவன் தன் வழியே சென்றான்.

''கோயிலுக்கு வந்தால், உட்காராமல் போகக் கூடாது என்பார்கள். உட்கார், மின்னி!'' என்று உரக்கச் சொன்னாள் சுரபி.



சொன்னதோடன்றி உட்காரவும் செய்தாள்.

கூட அமர்ந்தபடி ''கொசகொசவென்று நிறைய ஒற்றையடிப் பாதை தெரிகிறதே என்று வரும்போதே நினைத்தேன். சுற்றி எல்லா இடத்துக்கும் இங்கிருந்து பாதை போகும்போல.. அல்லது, எல்லா இடங்களில் இருந்தும், கோயிலுக்கு வந்து போவார்களாக இருக்கும்!'' என்றாள் சின்னவள்!

''சீக்கிரமாகச் செல்ல வேண்டும்'' என்றவள் இப்படி உட்கார்ந்ததும், சத்தமாகப் பேசியதும்... காரணம் இருக்கும். வரலட்சுமியின் வீட்டில், அந்த மனிதனின் முக மாற்றமும் நினைவு வந்தது சௌமினிக்கு.

சற்றுப் பொறுத்து எழுந்த சுரபி, வந்த வழிப் பக்கமே திரும்பவும், ''அக்கா, அங்கே ஏதோ பாறை, பாம்பு என்று அந்த ஆள் சொன்னாரே!'' என்று மெல்ல நினைவூட்டினாள், மற்றவள்.

அதற்குள்ளாக அக்காவுக்கு மறக்க வாய்ப்பில்லை, பின்னே.. என்று சின்னவள் யோசிக்கும்போதே, ''அந்த ஆள் சொன்னதில் எனக்கு நம்பிக்கை இல்லை, மின்னி!'' என்றாள் சுரபி.

''ஓ!''

''ஆமாம் மின்னி, இந்த ஆள் பேச்சைக் கேட்டதில் தான், ஆனந்த் முதலில் நஷ்டப்பட்டதும், அத்தையிடம் கெட்ட பெயர் வாங்கியதும். இப்போதும் ஆலோசனை என்கிற பெயரில், இந்தச் செல்லையன் சொன்னது எதுவும், எனக்குப் பிடித்ததில்லை! மற்ற பண்ணைகளைக் குத்தகைக்கு எடுக்க வேண்டாம் என்று எவ்வளவு சொன்னார், தெரியுமா? இப்போது கூட அவர் சொன்ன

திசையைப் பார். மரங்கள் அடர்ந்த காடு போலத் தெரிய வில்லை? வழி தெரியாமல், அங்கே போய் மாட்டிக் கொண்டால், புலி, சிங்கம் கிடையாது என்றாலும், நாய், நரிக் கூட்டங்களால் ஆபத்து வரலாம்தானே? இப்போது அந்தப் பாறை விஷயமே கூட.. நாமே நேரில் போய் பார்த்துவிடுவோமே!'' என்று ஓர் எட்டு எடுத்து வைத்தாள் அவள். இரண்டு எட்டுக்கள் எடுத்து வைக்கு முன்ன ராகவே ''போனாத்தானேடீ பார்ப்பதற்கு?'' என்று தடிம னான குரல், ஒரு மரக்கட்டையுடன், அந்த ஆள் மறுபடி யும் குறுக்கே வந்து நின்றான்.

''என்ன உளறுகிறீர்கள் செல்லையன்?'' என்றாள் சுரபி.

ஆமாம், அவன் செல்லையன்தான்! ஆனால், இந்த நேரத்தில் இவன் எங்கே இங்கே வந்தான்?

தன்விதியும், கூடவே அந்த இரு பெண்களின் விதி யுமே, தன்னை, அங்கே கொண்டுவந்து, சேர்த்ததாக அவன் நினைத்தான்!

செல்லையனுக்குப் பல ஆண்டுகளாகவே, மனதில் ஒரு காட்டம் எரிந்து கொண்டே இருந்தது!

அவன், அந்தப் பகுதியில் 'மண்ணின் மைந்தன்' அந்தப் பிரதேசத்தில் பெரும்பகுதி அனுபோக பாத்திய தையாக அவனுடைய குடும்பத்திடம்தான் இருந்ததாம்!

அதாவது, அவனுடைய தாத்தாவுக்குத் தாத்தா காலத் தில் அப்படி இருந்தாக, அவனுடைய தந்தை முட்டக் குடித்துவிட்டு, மேலே குடிக்கப் பணமில்லையே என்று அழுதபடி ஒரு தரம் சொல்லியிருக்கிறார்!

அப்போது அவர்களிடம் இருந்தது, சின்னதாக ஒரே ஒரு பண்ணைதான். நல்லவேளையாக, அதையும் விற்று



வீணாக்கும் முன்னதாகவே, குடியின் பாதிப்பில் அவ னுடைய தந்தை இறந்து போனார்.

ஆனால், அந்தப் பகுதியில் பழையபடி பெரும் நிலச் சொந்தக்காரனாகி, மதிப்பும் மரியாதையுமாக வாழ வேண்டும் என்கிற ஆசை, செல்லையனுக்கு ரொம்பவே இருந்தது!

ஆசை இருந்து என்ன செய்வது? வெறுங்கை முழம் போடாது என்பது போலக் கையில் பணம் இல்லாமல், என்ன நடக்கும்?

மாடாய் உழைத்து, மெல்ல முன்னேறுவதில் அவ னுக்கு நம்பிக்கை இல்லை! அடாவடியாகச் சேர்க்கப் பலமும் கிடையாது.

எனவே அவன் வேறு வழிகளில் முயன்றான்.

முதலில் இச்சகம் பேசி, சுற்றிச் சூழ எல்லோரிடமும் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டான். நல்லதைச் செய்வது போலவே, குழி பறித்தான். இதில் ஏமாந்தவர் களை மொட்டையடித்து நிலம் சேர்த்தான்.

ஆனாலும், பெரிதாக ஒன்றும் செய்ய முடியவில்லை! ஏதாவது ஏவினால் செய்து கொடுக்கிறவன் என்பதற்கு மேலாக, ஆனந்தன் குடும்பம் போல மதிப்பும் மரி யாதையுமாக வாழ முடியவில்லை!

ஆனந்தனிடம் வீரியமான உரம் பற்றி யோசனை கொடுத்து, அவனை நஷ்டப்பட வைக்கும் முயற்சியில் தான், அதனால் வரக் கூடிய தீமை பற்றி எச்சரிக்காமல், வேறு பேச்சில் கவனத்தை திருப்பியதும், தெரிந்தே செய்தது தான்.

ஆனால், அவன் எதிர்பார்த்த அளவுக்கு எதுவும் நடக்கவில்லை! ஒன்றுமே கிடையாது என்று, வரலட்சுமி மகனை அடியோடு துரத்தி, நடுத்தெருவில் விட வில்லை!

அப்படிச் செய்திருந்தால், 'தாத்தா சொத்து..' என்று அவனைத் தூண்டிவிட்டு, வழக்குப் போட வைத்து, அவனது பங்கைப் பந்தாடியிருக்கலாம்!

அதுவும் நடக்கவில்லை! அண்ணன் தொலைந்தால், அத்தனையும் நமக்குத்தானே என்கிற இன்றைய உலக நியதிக்கு ஏற்பாக சதானந்தனும் தாயின் கோபத்தை ஊதிப் பெரிதாக்கவுமில்லை! மடையன்!

நல்லவேளையாக, ஆனந்தனின் அலட்சியம் என்பது தவிரச் செல்லையன் மீது ஐயம் எழாததால், பழைய மாதிரியே அந்த வீட்டோடு அவனது பழக்கம், அப்படியே இருந்தது!

சொல்லப்போனால், மூத்த மகனின் திறமையில் அறவே நம்பிக்கை இழந்திருந்த வரலட்சுமி, மகனுக்கு அவ்வப்போது நல்ல ஆலோசனைகள் கூறுமாறு, செல்லையனிடம் நேரடியாகவே கேட்டிருக்கிறாள்.

செல்லையனும் எவ்வளவோ சொல்லித்தான் பார்த்தான்! ஆனால், ஆனந்தன் அதை அப்படியே கேட்டால்தானே?

செல்லையனைச் சந்தேகப்படாவிட்டாலும், அந்த முதல் கோணலின் பிறகு, ஆனந்தனும் மிகுந்த கவனத் தோடு இருந்தான்.

ஒரு முறைக்கு நாலு தரம் யோசித்து, உரிய நாலு பேரிடம் ஆலோசனை கேட்டுச் செயல்படும்போது, விளைவு சிறப்பாகத்தானே இருக்கும்?



ஆனந்தனை நஷ்டப்பட வைக்க அவனால் முடிய வில்லை! என்றாலும், தாய்க்கும் மகனுக்கும் பேச்சு வார்த்தை இல்லாததைப் பயன்படுத்திக் கொண்டு, ஆனந்தனின் சாதனைகள் ஓரளவு தன்னால் வந்தவை என்பது போலக் காட்டிக் கொண்டிருந்தான்.

இதற்காக பெற்றவளிடம் கொஞ்சம் சில்லரை சுருட்டிக் கொண்டுமிருந்தான்.

பெற்ற மனம் அல்லவா? தானாக மூத்த மகனிடம் பேசிப் பழக மனம் வராவிட்டாலும், வேறு வழியில் அவனை உருப்பட வைப்பதாக எண்ணி, இப்படி செலவு செய்து கொண்டிருந்தாள் அந்தத் தாய்!

ஆனால், இதெல்லாம் ஒரு முடிவுக்கு வந்தன!

சுரபியை மணந்து வந்த பிறகும்கூட, அவனது சில் லரைக்குத் தட்டுப்பாடு வரவில்லை. ஆனால், இப்போது குடும்பம் ஒன்று சேர்ந்த பிறகு, அதுவும் சுரபியின் யோசனைப்படி நடந்து, ஆனந்தன் பணம் பெருக்கி யிருக்கிறான் என்று தெரிந்த பிறகு, வரலட்சுமி அடி யோடு மாறிவிட்டாள்.

ஆனந்தனுடைய மனைவியே கெட்டிக்காரி என்பதால், அவன் பக்கம், இனிச் செல்லையன் செல்லத் தேவை யில்லை என்று ஒரே போடாகப் போட்டுவிட்டாள்!

ஆனால், அவனுக்குத் தேவை இருந்ததே!

மாதாமாதம் சிலபல ஆயிரங்கள்! அவ்வப்போது ஆனந்தனின் விளைபொருட்களுக்கு குறைவாக விலை பேசி, வாடிக்கையாளரிடம் வாங்கும் அதிகப்படி தரகு (தாயின் பெயருக்காக ஆனந்தனும் பெருமளவு விலை

குறைத்துக் கொடுப்பான்)! செல்வாக்கு மிகுந்த வரலட்சுமி குடும்பத்துப் பழக்கத்தால் மற்ற இடங்களில் கிடைக்கும் மதிப்பு! எல்லாவற்றையும் விட வாய்ப்புக் கிடைத்தால், சத்தமின்றி உள்ளே நுழைந்து குட்டை குழப்பி ஆதாயம் தேடுவதற்கான வாய்ப்பு! எல்லாவற்றையும் எப்படி விடுவது?

கடைசியாக அவனிடம் சொல்லாமலே, வரலட்சுமி குடும்பம் ஊருக்குச் சென்றிருந்தது.

அது தெரியாமல், வரலட்சுமியைப் பார்த்துவிட்டு வரலாம் என்று, அவள் வீட்டுக்குப் போன பிறகுதான், அவனுக்கு விஷயம் தெரிந்தது!

என்ன அலட்சியம் என்று ஆத்திரப்படும்போதே, விவரம் சொன்ன வேலையாளின் குரலில் ஏளனம் இருந்ததோ என்று தோன்றி, சீற்றம் அதிகமாயிற்று!

இது செல்லுபடியாகாத கோபம் என்பது, அவனைக் கொதிநிலைக்குக்கொண்டு போயிற்று!

சிரமத்துடன் அடக்கிக் கொண்டு வந்தால், ஆனந்தனுடைய மனைவியும் அவள் தங்கையும் பஸ்சில் ஏறிக் கொண்டிருந்தார்கள்!

பஸ்! காரில் வராமல்...

வீட்டு ஆட்கள் இல்லாத நேரம், யாருக்கும் தெரியாமல், அகப்பட்டதை சுருட்டிக் கொண்டு ஓடுகிறார்கள் என்றுதான், செல்லையன் முதலில் நினைத்தான்.

டூ வீலர் தலைக் கவசம் ஒரு வரப்பிரசாதமாகத் தோன்ற, அடையாளம் தெரிய வாய்ப்பில்லை என்று, தைரியமாக அவர்களைப் பின் தொடர்ந்தான்.



சரியான நேரத்தில் சகோதரிகளைப் பிடித்து, ஒரு பங்கு வாங்கிக் கொள்ளாலமே!

இருவரும் மலைக் கோயிலுக்குச் செல்வதைப் பார்த்த போது, அவனுக்கு ரொம்பவே ஏமாற்றம்தான்.

ஏமாற்றத்தோடு திரும்பிச் செல்லும்போதுதான், திடுமென இந்த யோசனை தோன்றியது!

இது, சொல்லாமல் கொள்ளாமல் வந்திருக்கும் கேஸ். சொல்லியிருந்தால், அடிவாரம் வரை, கார் வந்திருக்கும்! துணைக்கு, வேலையாட்களும் வந்திருப்பார்கள்! எனவே திரும்பியே போகாவிட்டாலும், தப்பு அவர்களதாகவே போய்விடும்!

திரும்பிப் போகாமல் எப்படிச் செய்வது? செய்துவிட்டால், அவனுக்கு நல்லது!

ஆனாலும் கொலை செய்யும் அளவுக்கு அவனுக்குத் தைரியம் கிடையாது. அத்தோடு, அவர்கள் இரண்டு பேர்!

இரண்டு பேர் என்றாலும், இந்த இடம் தெரியாதவர்கள், சற்று நேரத்தில் இருட்டிவிடும்!

நோக்கம் நிறைவேற்றுவதற்கான வழி வகை தெரிந்துவிட, பைக்கைத் திருப்பி வந்து மறைவாக நிறுத்திவிட்டு, அவனம் மலையேறிப் போனான். பாறை விழுந்ததாகக் கதை விட்டு, காட்டுப்புறம் செல்லும்படி, வழிகாட்டினான். இன்னொரு பக்கம் போவதாகப் போக்குக் காட்டி, மறைந்திருந்து கவனித்தான்.

ஆனால், அவன் சொன்னபடி, அவர்கள் சாகப் போகவில்லை! அவனையும் புரிந்து வைத்திருந்தார்கள்.

அவர்கள் இருக்கும்வரை, பெரிய வீட்டுப் பக்கம் அவன் திரும்பிப் பார்க்கக் கூட முடியாது!

சுரபியின் பேச்சைக் கேட்டதும், செல்லையனுக்கு வெறி பிடித்தது!

சொந்தப் பாதுகாப்புக்காகக் கையில் எடுத்த கட்டையைத் தூக்கிப் பார்த்தான்.

அவர்களை அடித்துப் போட்டுவிட்டு ஓடிவிட்டால், ரத்த வாடைக்கு நாய் நரி வந்து இரவே காலி பண்ணி விடும். நிச்சயமாய்! எப்படியும் இவர்கள் செத்தே தீர வேண்டும். மாலை நேரத்தில் ஆள் வராத இடம் என்பதால், யாரும் வந்து காப்பாற்றவும் போவதில்லை!

வேக வேகமாகச் செல்லையன் திட்டமிட்ட அப்போது, அந்த உடன்பிறந்தோரின் பாசம் பற்றி அவனுக்குத் தெரியாது!

கட்டையை ஓங்கிக் கொண்டு அவன் பாய்ந்தது சுரபியை நோக்கித்தான்.

ஆனால், தமக்கைக்கு வருகிற ஆபத்தை உணர்ந்து, மின்னலெனக் குறுக்கே பாய்ந்து, அந்த அடியை சௌமினி தாங்கிக் கொண்டாள்.

தங்கை அடிபட்டுத் தடுமாறவும், சுரபி கொதிப்புற்று, ''என் தங்கையையாடா அடித்தாய்?'' என்று கைப்பையை வீசித் தாக்க, அந்த அடி, சரியாகச் செல்லையன் முகத்தில் முக்கியமாகப் புருவ மத்தியில் நச்சென்று வலுவாகப் பட்டது!

நெற்றிப் பொருத்தில் பட்ட அடியால், செல்லையன் மயங்கிச் சரிந்தான்.



''குறி பிரமாதம்!'' என்ற குரலைக் கேட்டுத் தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு சுரபி திரும்பிப் பார்த்தால், அங்கே துவண்டு தோளில் சாய்ந்து கிடந்த சௌமினியோடு சதானந்தன் நின்றான்!

இவனும்தான், இப்போது இங்கே எப்படி வந்தான்?

சற்று நேரமாக நடந்த நிகழ்ச்சிகள், ரொம்பவே அதிகப்படியாகத் தோன்றிவிட, சுரபிக்குத் தலை சுற்றிவிட்டது!

சற்றே தடுமாறியவளின் கரத்தை, அடுத்த கையால் அழுந்தப் பற்றி நிறுத்தி ''அண்ணி, அண்ணி! பயப்பட ஒன்றுமில்லை! சமாளியுங்கள். இப்போது நீங்கள் வேறு மயங்கி விழுந்தீர்கள் என்றால், இருவரையும் தூக்கிச் செல்லும் அளவுக்கு, நான் 'சூப்பர்மேன்' அல்ல! அத்தோடு, இந்த ராஸ்கல் எழுந்துவிட்டால், என்னையும் தாக்கினாலும், தாக்குவான்!'' என்றான் சதானந்தன்.

மைத்துனனின் பேச்சில் எதையோ உணர்ந்து, 'விலுக்' கென நிமிர்ந்தாள் சுரபி.

''நீங்கள் இப்போது இவனை என்ன சொன்னீர்கள்? ரா... ராஸ்கல் என்றுதானே?'' என்று கேட்டாள்.

''ரா ராஸ்கல் இல்லை, அண்ணி, இனிஷியல் இல்லாமல், வெறும் ராஸ்கல் என்றேன்!''என்றுரைத்து, சதானந்தன் புன்னகை செய்தான்.

''அப்பாடி!'' என்று ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் சுரபி.

அவளது கைப்பையைத் திறந்து, அதிலும் வைத்திருந்த பழச்சாறு பாட்டிலை எடுத்தாள். ''இதுதான் சரியாக அவன் நெற்றியில் பட்டிருக்க வேண்டும்! நீங்கள் கொஞ்

சம் குடிக்கிறீர்களா? மின்னியுடையதிலும் இருக்கிறது..'' என்று சுற்றும் முற்றும் கண்ணால் தேடி, சௌமினியின் கைப்பை, கீழே விழுந்திருந்ததை எடுத்தாள்.

''உங்களுக்குத்தான் தேவை. நீங்கள் குடியுங்கள். எனக்கு அவசியம் இல்லை. இவளுக்குக் கொடுங்கள்'' என்றான்.

இனிப்பும், உப்பும் கலந்து எடுத்துவந்திருந்த ஜூசைக் குடிக்கவும், சௌமினியும் தெம்படைந்து நிமிர்ந்தாள்.

''இதெல்லாம் முன்னேற்பாடாய் எடுத்து வர தெரிகிறது. பாதுகாப்பு பற்றி யோசிக்க மட்டும் தெரியவில்லை!'' என்று அவளிடம் லேசாகச் சிடுசிடுத்துவிட்டு, சதானந்தன் அவர்களை கீழே கூட்டி வந்தான்.

ரொம்பவும் சீக்கிரமே இறங்கி வந்துவிட்டபோதும், சதானந்தன் இல்லாவிட்டால், வழி கண்டுபிடித்து, சாலைக்கு வந்து சேர்வது, மிகவும் கடினமே என்று இரு பெண்களுமே உணர்ந்தார்கள்.

ஆனால் காரில் ஏறச் சொன்னபோது, இருவருமே தயங்கினர் ''அக்காவை அடிக்கப் போனான்தான். ஆனாலும் அந்தச் செல்லையன்..''என்றாள் சௌமினி.

''ஆமாம், தம்பி. இப்படியும் ஒரு மனிதன்'' என்றாள் சுரபியும்.

''அவனெல்லாம் மனிதனா? இவளைக் கட்டையால்..'' என்று ஆத்திரத்துடன் முணுமுணுத்தாலும், வெளியே பார்த்துவிட்டு, ''இன்னும் வெளிச்சம் முழுதாக மறையவில்லை. அவனுக்கு ஒன்றும் ஆகாது. நாம் வீட்டுக்குப் போய் ஆட்களை அனுப்பலாம்! ஏறுங்கள்'' என்றான் சதானந்தன்.



சுரபி, ஆனந்தன் வீட்டுக்குப் போய், அங்கிருந்து, தன் இடத்துக்கு போன் செய்து சில ஆட்களை மலைக் கோயிலுக்கு அனுப்பிவிட்டு, மரக்கட்டையால் அடி வாங்கிய சௌமினியை, சதானந்தன் பரிசோதித்தான்.

செல்லையனின் மரக்கட்டை வீச்சு, சுரபியின் மீது படாமல் காப்பது ஒன்றே நோக்கமாகக் குறுக்கே வந்து மறைத்தபோது, சௌமினியின் முதுகுப் புறத்தில் அடி விழுந்திருந்தது. தாக்குதலின் வேகமும், வலியுமாக மூச்சைப் பிடித்துக் கொண்டு, அவள் தள்ளாடிவிட்ட போதும், நல்லவேளையாக எலும்பு எதுவும் உடையவில்லை!

அதற்குள் சுரபி இனிப்பாக டீ போட்டுக் கொண்டு வந்துவிட, பழைய நினைவில் மூவருக்கும் சிரிப்பே வந்தது.

டீ குடித்து முடிந்ததும், சதானந்தன், சுரபியிடம் ''அண்ணி, உங்களுக்கும் சௌமிக்கும் இரண்டு செட் துணிமணிகள் எடுத்து வையுங்கள். பட்டு மாதிரி, கொஞ்சம் நல்லதாக ஒரு செட். உங்களையும் அழைத்துக் கொண்டு பத்து மணிக்குள் வந்துவிடுவதாக அம்மாவிடம் சொல்லியிருக்கிறேன். மலைப்பாதை முடியும்வரை, அதுவும் இரவில் சற்று மெதுவாகத்தான் ஓட்ட முடியும். அதனால், கொஞ்சம் சீக்கிரமாக அண்ணி! ப்ளீஸ்!'' என்றான்.

மறுக்காமல், விளக்கமும் கேளாமல், ''இதோ தம்பி, மின்னி வா. உன்..'' என்று சுரபி கிளம்புவதற்குத் தயாரானாள்.

தமக்கை அழைத்ததும் எழுந்த சௌமினியைக் கையைப் பற்றி நிறுத்தி ''சௌமி இங்கே இருக்கட்டும் அண்ணி. அவளுக்கும் சேர்த்து, நீங்களே எடுத்து விடுங்கள். ஆனால், அண்ணி, அண்ணன் எதற்காக, அம்மாவைக் கூட மீறத் துணிந்து, உங்களை மணந்தான் என்று இப்போது புரிகிறது!'' என்றான் சதானந்தன்.

ஆச்சரியமாக பார்த்துவிட்டு , சிறு புன்னகையோடு உள்ளே போனாள் சுரபி.

பற்றிய சௌமியின் கையை விடாமலே, சதானந்தன் தானும் எழுந்தான்.

''அந்தப் பக்கம் தலை திரும்புமுன், இந்த பக்கம், இப்படி ஆபத்தில் சிக்க இருந்தாயே! உன்னை என்ன செய்வது? ம்?'' என்று கேட்டான்.

அவனது பார்வையிலும், குரலிலும் திகைத்து நின்றவளை, மெல்ல அருகில் இழுத்து அணைத்தான்.

அவன் விடுவித்தபோது, அவளது பார்வையில் பிரமிப்பு கூடியிருந்தது!

கைப்பிடியில் அவளை நிறுத்தி, ''இப்படி சாசர் மாதிரிக் கண்களை விரித்தால், ஒன்றுமே தெரியாது என்று அர்த்தமா?'' என்று புன்னகையோடு வினவினான் அவன்.

குழப்பங்கள், கலக்கம் எல்லாம் மங்கி மறைய, ''தெரியும்...'' என்று இழுத்தாள் அவள்.

''தெரியும்.. ஆனால், தெரியாதாக்கும்?'' என்று அவன் கேட்க, இருவருக்கும் சிரிப்பு வந்துவிட்டது.

சதானந்தனின் மாற்றம், அதன் பின்னான பேச்சு, செயல்கள் எதுவுமே நடிப்பில்லை! நிஜமே!



கலப்பற்ற குதூகலத்தில் முத்துப் பற்கள் மின்னலிட, அவள் ஒய்யாரமாகப் பார்க்கவும், ''ம்ஹூஹூம்! இந்தப் பார்வையெல்லாம், இப்போது வேண்டாம். அப்புறம், விட்டு விலகவே முடியாது! சொல்லிவிட்டேன்!'' என்று சரசப் புன்னகையோடு அவன் சொல்ல, முகம் சிவக்க அங்கிருந்து ஓடிப்போனாள் அவள்.

சரியான தருணத்தில் தான் திரும்பி வந்த விவரம் குறித்து, ஊருக்குச் செல்லும்போது, சதானந்தன் விளக்கம் சொன்னான்.

காரணம் குணசீலன்.

# 14



வெகு தூரம் நடக்கப் போகிறோம் என்றதும் திகைத்து விழித்த வாயில் காவலன் மூலமோ, அல்லது எதற்காகவோ வீட்டிற்குப் போன் செய்ததில் நேராகவோ, சதானந்தனுக்கு விஷயம் தெரிந்திருக்கும் என்று சகோதரிகளும் ஊகம்.

அப்போதும் கூட, அவன் நேராகக் கோயிலுக்கு வந்தது அதிசயமாகவே பட்டது!

ஆனால், இதில் குணா எங்கிருந்து வந்தான். அவன் வழக்கமாக போன் பண்ணுகிற நேரம் கூட, இது இல்லையே!

ஆச்சரியத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்த பின், ''குணாவா?'' என்று ஒரு கோரஸ் காரினுள் கேட்டது!

''அவனது முழுப் பெயர் குணசீலன் என்பதாகத்தான் எனக்கு ஞாபகம்!'' என்று கிண்டலடித்தபோதும், சதானந்தன் தொடர்ந்து விவரம் சொன்னான்.

குணாவுக்கு ஒரு 'ஸ்பான்சர்' கிடைத்திருக்கிறார்.

ஒரு பன்னாட்டு நிறுவனத் தலைவர், அவர். தான் பயின்ற பழைய கல்லூரியை இந்தியா வரும்போதெல்லாம் வந்து பார்ப்பார். கல்லூரியின் வாசகசாலை விரிவாக்கம் கூட, அவரது உதவியால்தான்.

கல்லூரி முதல்வருடன் பேசிக் கொண்டிருந்தபோது, முதல்வர் குணசீலனைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். அங்கேயே, வாசகசாலையில் வேலை செய்து கொண்டிருந்த குணாவைக் கூப்பிட்டு, அறிமுகமும் செய்து வைத்திருக்கிறார்.

தொழிலதிபருக்குக் குணாவை மிகவும் பிடித்துப் போயிற்று. அவனது கல்வித் தகுதிகளையும், குறிக்கோளையும் கேட்டவர், அவனது வெளிநாட்டுப் படிப்புச் செலவை, அவரது நிறுவனம் ஏற்கும் என்று எழுதியே கொடுத்துவிட்டாராம்.

''இப்போது இரண்டு பேருமே படிக்கலாமே என்று, இந்த நல்ல செய்தியை உடனே சொன்னால், கூடக் கொஞ்ச நேரம் சந்தோஷப்படுவீர்களே என்று, விஷயம் தெரிந்ததுமே, அவன் வீட்டுக்குப் போன் செய்திருக்கிறான்.



''நீங்கள் இருவரும் கிளம்பிச் சென்ற பத்து நிமிஷங்களில் இந்த போன் வந்திருக்கிறது! செக்யூரிட்டிக்கு நீங்கள் சென்ற விதத்தில் ஏற்கனவே குறுகுறுப்பு! எனவே நீங்கள் கிளம்பிய நிமிஷம் வரை, அவனிடம் விளக்கமாகச் சொல்லிவிட்டார்.

''குணாவுக்கு மனம் கலங்கிவிட்டது! நாங்கள் யாரும் இல்லாத நேரம் பார்த்து, இரு பெண்களுமாக, தனியாக வெகு தூரமாக எங்கே போயிருப்பார்கள்? ஏதேனும் வாங்கப் போவதற்கும், ஒரு கடை, கண்ணி கூட இல்லாத இடம்!

''யோசித்துவிட்டு, அவன் எனக்கு போன் செய்தான். அண்ணி நிலைக்காக, அண்ணன் பதறிப் போவாரோ என்ற பயம்!

''ஆனால், வர நேரமாகும் என்று நீங்கள் சொல்லிப் போனதில், எனக்கு ஒரு நம்பிக்கை இருந்தது! ஏதோ ஒரு குறிப்பிட்ட இடம் என்று நினைத்தேன். ஆனால் எங்கே?

நானே நேரில் போய்ப் பார்க்கிறேன் என்று குணாவிடம் சொல்லிவிட்டு, அண்ணனிடமும் முழு விவரம் கூறி மாராயிடம் பேசச் சொன்னேன்.

''எல்லோரும் கேட்கிறார்களே என்று அண்ணியைக் கூட்டி வருவதற்காக என்று, அம்மாவிடம் காரணம் சொன்னேன். நான் இங்கே வந்து சேருமுன், அண்ணனும், மாராயிடம் பதமாகப் பேசி, கோயில் பற்றி, நீங்கள் அடிக்கடி கேட்டதைத் தெரிந்து கொண்டான். வரும் வழியிலேயே ஒரு பி.சி.ஓ.வில் அவனோடு பேசிவிட்டதால், நான் நேரே கோயிலுக்கே வந்தேன்! ஆனால்...'' என்ற சதானந்தனின் குரல் சற்றுத் தடுமாறியது.

லேசாகச் செறுமிக் கொண்டு, மறுபடியும் தொடர்ந்தான் ''இறங்கும் வழி தெரியாமல் பதறி, அங்குமிங்கும் அலைய நேர்ந்து விடக் கூடாதே என்றுதான் நான் ஓடி

வந்தது! ஆனால், அந்தச் செல்லையன்... அவன் சற்று மோசம் என்று எனக்குத் தெரியும். ஆனால், இவ்வள வுக்குத் துணிந்தவன் என்று, நானும் எண்ணியதில்லை! உங்கள் இருவரின் பாசம் பற்றி, அவனும் அறியவில்லை! ஆனால், ஒரு வகையில் இதுவுமே நல்லதுதான். இனி அம்மாவும், அவனை அறவே ஒதுக்கி விடுவார்கள்'' என்று முடித்தான்.

சிறு அமைதியின் பின் ''அத்தையிடம் எல்லாம் சொல்லி விடுவீர்களா?'' என்று சின்னக் குரலில் கேட் டாள் சுரபி.

''அது... எப்படியும், அந்தப் பாம்பு செல்லையனை விரட்ட வேண்டுமில்லையா, அண்ணி?... போகட்டும். அதற்கு, நான் வேறு வழி பார்க்கிறேன்'' என்றவன், ''ஆனால் அந்தக் கோயிலுக்கு இப்படி அவசரமாகப் போய் தீர வேண்டும் என்று என்ன கட்டாயம், அண்ணி? நீ வேறு. இந்த நிலையில் இருக்கும் அண்ணியைத் தடுக் காமல், கூடப் போய் அடி வேறு வாங்கியிருக்கிறாய்?'' என்று கண்டனக் குரலில் சௌமினியைக் கேட்டான்.

''அதில்லை...'' என்று சௌமினி சொன்ன விவரத்தில் மனம் உருகினாலும், ''என்னிடம் மட்டுமேனும் சொல்லி யிருக்கலாமே!'' என்றான் விடாமல்.

''மூன்று தடவை சொல்ல நினைத்தேன். ஆனால் நீங்கள் எப்படி எடுத்துக் கொள்வீர்களோ என்று தயங்கி விட்டேன்'' என்றாள் அவள்.

''ஓ.... அந்தத் தெரியும்... ஆனால் தெரியாதா?'' என்று கேட்டுச் சிரித்தான் அவன்.



''அதென்ன தெரியும், தெரியாது?'' என்று கேட்ட சுரபிக்கு நேரடியாக பதில் சொல்லாமல், ''ஆனாலும் கணக்காக மூ...ன்று தடவைகளா? பரவாயில்லை அண்ணி உங்கள் தங்கைக்கு ஒற்றை இலக்கம் எண்ணக்கூடத் தெரிகிறது!'' என்ற சதானந்தன் கிண்டல் செய்ய, எல்லோருக்குமே சிரிப்பு வந்தது.

தொடர்ந்து ''ஆனால், எதற்காக என்று இந்த விவரம் தெரிந்தால், அம்மா உருகிப் போவார்கள், அண்ணி, அதனால்... ஆனால், இப்போது வேண்டாம், அங்கே திருவிழா முடிந்து, திரும்பி வந்த பிறகு, மெல்லச் சொல்லலாம்'' என்றான்.

திருவிழாக் குதூகலத்தில் கலந்து கொள்ள முடியாமல், கணவன் தவித்துக் கொண்டிருப்பானே என்று தோன்ற, ''ஆனந்தனுக்குத் தெரியும் என்றால், அவர் பயந்து பதறிக் கொண்டிருப்பாரே, தம்பி?'' என்று கவலையுடன் கேட்டாள் சுரபி.

''அம்மாடியோவ், என்ன கரிசனமடா! ஆற, அமர, ஒரு வழியாக, அண்ணன் நினைவு வந்துவிட்டதாக்கும்!'' என்று கேலி செய்தபோதும், ''நீங்கள் உடை மாற்றிக் கிளம்பும்போதே, அண்ணனுக்கும் குணாவுக்கும் போன் செய்தாயிற்று. கோயிலுக்குப் போனதாக மட்டும் சொன் னேன். அதனால், எந்த விதமான கவலையும் இல்லாமல் சந்தோஷமாக இருங்கள்!'' என்றான் சதானந்தன் கனி வாகவே.

சுரபியின் அமைதியான அழகு, ஊர்ப்பக்க உறவினர் எல்லோருக்கும் பிடித்துப் போயிற்று! தங்கைப் பெண் ணும் அழகுதான் என்று, அவளையும் உற்றுப் பார்த் தார்கள்.

அத்தை உறவில் ஓர் அம்மா மட்டும் ''விருந்து எல்லாம் வைத்து, எங்களைக் கூப்பிட்டுக் கல்யாணம் செய்யவில்லையே!'' என்று குறைப்பட்டாள்.

''இந்தக் குறை இருக்கக் கூடாது என்றுதான், பிரமாத மாய், நான் ஒரு வேலை செய்திருக்கிறேன், அத்தை!'' என்றான் சதானந்தன்.

''அது என்னடா, பிரமாத வேலை?'' என்று கேள்வி வந்தது.

''ஆமாம், அத்தை, எங்கள் வீட்டில் ஒரு திருமணத் தைத்தான் கூட்டி வந்து, உங்களுக்கெல்லாம் காட்டி விடலாம் என்று, கூடவே கூட்டி வந்து விட்டேன்!''

''கூடவேயா...? யார்? யார்?'' என்று பலரின் கேள்வி களுக்கும் ஒரே பதிலாக ''அழகாக இருக்கிறாள் என்றீர் களே!'' என்று சௌமினியை அவன் காட்ட, அவள் செங்கொழுந்தாகி நின்றாள்!

ஓஹோ என்ற ஆரவாரத்திடையே, சுரபி தங்கையை அணைத்து, மாமியாரிடம் கூட்டிச் சென்றாள்.

சௌமினியை ஆசீர்வதித்து, ''பெரிய கவலை விட்டது! சின்னவனுக்கு வேறிடத்தில் பெண் எடுத்தால் ஒத்துப் போகாமல் அண்ணன் தம்பிக்குள் தகராறு வந்து விடக் கூடாதே என்று, எனக்குக் கவலை, அதனால்தான், சுரபிக்குச் செய்வதை எல்லாம், இவனிடமே அங்கே கொடுத்தனுப்பிக் கொண்டிருந்தேன். நல்லவேளை! நான் நினைத்ததே நடந்தது!'' என்று வரலட்சுமி ஒரு போடு போட, மீண்டும் எல்லோரும் ஆரவாரித்தனர்.



சௌமினி ஆச்சரியத்துடன் நோக்க, ''எனக்குத் தெரியும். நமக்கும் வசதிதானே என்றுதான், தாய் சொல் தட்டாமல் தூக்கிக் கொண்டு வந்தேன்!'' என்றான் சதானந்தன் அவள் காதருகே குனிந்து,

சாமப்பூஜைக்குத் தயார் பண்ணவென்று கூட்டம் கலைந்து, அவரவர் வீடுகளுக்குச் சென்றபின், ''தம்பி படித்துப் பெரிய ஆளாகட்டும். என்னால் முடிகிறவரை, வீட்டை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் நாலு பேரும் சேர்ந்து, நாடே நம்மை அண்ணாந்து பார்க்கிற அளவில், தொழிலை உயர்த்துங்கள்!'' என்றாள் வர லட்சுமி.

நள்ளிரவுப் பூஜைக்கு ஆண்கள் கிளம்புமுன், சின்னவர்கள் நாலு பேருக்கும் சில நிமிஷத் தனிமை கிடைத்தது!

''சதா, நீ பொல்லாதவன்டா. இதற்குத்தான், அவள் சின்னப் பெண் என்றால், அவ்வளவு சீற்றமாய் இல்லை என்று சொல்லி, வாதித்தாயா? ஆமாம், எப்போது திருமணம்?'' என்று ஆனந்தன் கேட்டான்.

''சௌமினி விருப்பம் போலத்தான் திருமணம்!'' என்றான், சாதுபோல சதானந்தன்.

ஆனால், கண்ணில் சிரிப்பைக் கண்டு ''என் விருப் பமா? என்ன விருப்பம்! யாருக்குத் திருமணம்? என் னிடம், யாரும் திருமணத்துக்குக் கேட்கவே இல்லையே!'' என்றாள் அவள் மிடுக்காக.

''ஆஹா இது வேற குறையா? உடனே கேட்டு விடுகிறேன், அம்மணி! உன்னை உயிராக நேசிக்கும்

என்னை மனமுவந்து மணந்து கொள்வாயா, கண்மணி?'' என்று நாடக பாணியில் கேட்டான் சதானந்தன்.

''ம்ம்ம்'' என்று யோசித்தாள் சௌமினி. ''மாட்டேன் என்றால், அத்தான் கோபப்படுவார். அத்தான் கோபப் பட்டால், அக்கா வருத்தப்படுவாள். இந்த மாதிரி நிலையில் அக்கா வருத்தப்படலாமா? அந்த காரணத்துக்காக, வேறு வழியின்றி, உங்களை மணக்கச் சம்மதிக்கிறேனே!'' என்றாள் தீனக் குரலில்.

''ஆஹா! என்னே உன் அன்பு! இப்படி ஒரு காதல் மனைவி கிடைக்க, என்ன தவம் செய்தேனோ!'' என்று அவன் பெரிதாக வியந்த விதத்தில் எல்லோரும் விழுந்து விழுந்து நகைக்கலாயினர்!


சோலை மலரே
காலைக் கதிரே
ரமணிசந்திரன்